

16.2.1992 ரூ.1

# தமிழரசு



# இந்த இதழில்...


அமைதியான சூழ்நிலையில் அனைத்துத் துறைகளிலும் மேம்பாடு அடைவோம்! —மேதகு ஆளுநர் அவர்கள் சட்டப்பேரவையில் ஆற்றிய உரை ... 2

இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப் பாட்டையும் கட்டிக் காக்க மத்திய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை ஆதரிப்போம்! —புதுடெல்லியில் நடந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை ... 11

சட்டப்பேரவையில் புரட்சித் தலைவரின் திருவுருவப் படத்திறப்பு விழா ... 14

பெரியார் மாவட்டத்தில் சமுதாய நலப் பணிகள் ... 19

பனிமலரைச் சூடுதற்குக் கட்டணமா? (கவிதை) ... 21

கதர் கிராமத் தொழில் வளர்ச்சிப் பணிகள் ... 24

புற்றுநோயைக் குணப்படுத்தலாம்! ... 27

மகளிர் நலம் பெற ... 29

ஆளுநர் உரை மீது நடந்த விவாதங்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்த பதிலுரையின் சில பகுதிகள் ... 33

சட்டப்பேரவையில் ... ... 40

சமூக-பொருளாதார நீதி ஏழைகளுக்குக் கிடைப்பதே தர்மம்! -மாண்புமிகு முதல்வர் உரை ... 41

புதிய தொழில் கொள்கை — - 1992. -மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு ... 43


## அட்டைப்பட விளக்கம்

### முதல் அட்டை:

முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப் படத்தை, சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார் (31.1.1992).

### இரண்டாம் அட்டை:

சென்னை உயர்நீதி மன்ற வளாகத்தில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில், உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி திரு. எம்.எச்.கனியா அவர்கள் திறந்து வைத்தார் (8.2.1992).

### நான்காம் அட்டை:

1992-ஆம் ஆண்டின் முதல் சட்டப்பேரவைக் கூட்டத்தில், மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் உரையாற்றினார் (29.1.1992).


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

மாசித் திங்கள் - 4

மலர்:22 இதழ்:16

16-2-1992



# அமைதியான சூழ்நிலையில் அனைத்துத் துறைகளிலும் மேம்பாடு அடைவோம்!

## தமிழ்நாடு சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் ஆற்றிய உரை (29.1.1992).

மதிப்பிற்குரிய சட்டப்பேரவை உறுப்பினர்களே,

புதிய ஆண்டில் தொடங்கும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முதற் கூட்டத் தொடரில் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவர்க்கும் மகிழ்ச்சி நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1992-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பொருளாதாரம் படிப்படியாக உயரவும், வறுமை அகலவும், மக்கள் வாழ்க்கைத் தரம் உயரவும், குறிப்பாக, ஏழை, எளிய மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்வில் வளம் காணவும் வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியங்களை அடைய, புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அமைந்துள்ள இப்புதிய அரசு முழு மூச்சுடன் மிகச்சீரிய முறையில், தொடர்ந்து பாடுபட்டு, வெற்றி காணும் என நம்புகிறேன்.

2. மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழ்நாடு மாநிலத்தில் முன்பு நிலவிய சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து நன்கு அறிவார்கள். புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பதவி ஏற்குமுன் நமது மாநிலத்தில் வெளிநாட்டுப் போராளிகளும், தீவிரவாதிகளும் எந்த அளவிற்கு இங்குள்ள வாழ்க்கை முறையில் ஊடுருவி இருந்தார்கள் என்பதையும், இங்கே சட்டம் ஒழுங்கு நிலைமையை மீண்டும் நிலைநாட்டி, இம்மாநிலத்தில் அமைதி தவழச் செய்ய எடுக்கப்பட்ட துணிவு மிக்க நடவடிக்கை பற்றியும் நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். அரசு இப்பணியை நிறைவேற்றுவதில் மிகுந்த அவசர முக்கியத்துவம் கொடுத்து, திட்டமிட்ட, முழுமையான முறையில் நடவடிக்கைகளை எடுத்து, காவல் துறையினரிடம் புதிய நம்பிக்கை உணர்வினை ஊட்டியது; அவர்கள் தங்கள் கடமையின்பால் முழு அர்ப்பண உணர்வுடன் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு ஊக்கம் அளிக்கும் அரசின் நடவடிக்கை தொடர்ந்தது. தமிழ்நாட்டு மக்கள் இந்த முயற்சிகளை முழுமனதுடன் வரவேற்றார்கள். அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளுக்கும் தங்கள் முழுமையான பேராதரவை வழங்கினார்கள்.இதன் விளைவாக, புதிய அரசு பதவி ஏற்ற ஒரு சில வாரங்களிலேயே இம்மாநிலத்தில் ஊடுருவி இருந்த வெளிநாட்டுப் போராளிகள் மற்றும் தீவிரவாதிகளின் சட்டவிரோத நடவடிக்கைகளை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தவும், அறவே ஒடுக்கவும் முடிந்தது. இப்பெரிய பணியை மேற்கொள்ளுகின்றபோது, காவல் துறை முற்றிலுமாகச் சீர்திருத்தி அமைக்கப்படவும் நவீனப்படுத்தப்படவும் வேண்டும் என்பது தெரியவந்தது. காவல் துறையைச் சீர்திருத்திக் காலத்திற்கேற்ற வகையில் மாற்றி அமைப்பதன் மூலமே, பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் ஆகியோரின் சதித் திட்டங்களுக்கு எதிராக, காவல்துறை பயனுள்ள வகையில் இயங்கி நடவடிக்கை எடுக்க முடியும்; மேலும், மாநிலத்தில் சட்டம்




ஒழுங்கைப்பராமரிக்கின்ற வலிமை வாய்ந்த காப்பாளராகவும் செயற்பட முடியும். இதற்கிணங்க, மாநிலக் காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டம் ஒன்று ரூபாய் 80.45 கோடி செலவில் தொடங்கப்பட்டது. முதற்கட்டமாக, இதற்கென ரூபாய்10கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. காவல்துறையில் கடந்த சில மாதங்களில் கொண்டுவரப்பட்ட பல்வேறு சீர்திருத்தங்கள், இதற்கு ஒரு புதிய பார்வையைப் புதிய பாதையைப் புதிய செயல்நோக்கத்தைக் கொடுத்துள்ளன. தன் முன்னுள்ள அரும்பணியை ஆற்றுவதற்கு, காவல்துறை தயங்காமல் விரைந்து முன்வந்து, அயராது பாடுபட்டுத் தன் பொறுப்பினை மிகவும் பாராட்டத்தக்க வகையில் நிறைவேற்றியுள்ளது, நமக்கெல்லாம் மிகப்பெரும் அளவில் மனநிறைவைத் தருகின்றது. இதன் விளைவாக, மாநிலத்தில் சட்டத்தின் ஆட்சியை நாம் மீண்டும் நிலைநாட்டிட முடிந்துள்ளது.

3. காவிரி நீர்த் தகராறு குறித்து இவ்வரசு தனது நிலையில் மிகவும் உறுதியாக இருந்து வருகிறது என்பதை உறுப்பினர்கள் நன்றாக அறிவீர்கள். தமிழ்நாட்டின் உரிமைகளை முழுமையாகப் பெற்றுத்தர, முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் உங்கள் அனைவருக்கும் நன்கு தெரியும். அதை நான் இங்கு மீண்டும் விரித்துரைக்கத் தேவையில்லை. காவிரி ஆற்று நீர்த் தகராறு குறித்த நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணையை, மத்திய அரசு அரசிதழில் வெளியிட வேண்டும் என்று, இந்த அரசு மிகவும் வற்புறுத்தியது. இந்திய அரசு சில பிரச்சினைகளை உச்ச நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு அனுப்பி வைத்தது. இந்திய உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு முற்றிலும் தமிழ்நாடு மாநிலத்திற்குச் சாதகமாக அமைந்தது. இறுதியில், காவிரி ஆற்றின் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை இந்திய அரசு தனது அரசிதழில் வெளியிட்டது. இதற்கெல்லாம் முழு முதற்காரணம், தமிழக முதல்வர் அயராமல் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகளே ஆகும். இது தொடர்பாகத் தமிழகத்து மக்களின் குரல் இந்நாட்டின் மிக உயர்ந்த மன்றங்களில் ஒலித்துள்ளது. அவை நம்முடைய மக்களின் நியாயமான இயல்பைத் தெளிவாகப் புரிந்துகொண்டுள்ளன. அதே சமயத்தில் நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை அரசிதழில் வெளியிடுவது மட்டும் போதாது என்று இவ்வரசு கருதுகின்றது. இந்த ஆணையை உரியவாறு செயற்படுத்துவதை உறுதி செய்ய, மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசு நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை எத்தகைய உணர்வுடன் அரசிதழில் வெளியிட்டதோ, அதே உணர்வுடன் தேவையான தொடர் நடவடிக்கைகளை எடுக்கும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

4. நிலைமை இவ்வாறிருக்க, 13.12.1991 - ஆம் நாளில் கருநாடக மாநிலத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட பந்த்தினைத் தொடர்ந்து, பெருமளவில் கலவரங்கள் நடந்தன. பலதலைமுறையாக அங்கே அமைதியுடன் வாழ்ந்து வந்த, ஒன்றுமறியாத அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராக, முன் எப்போதும் கண்டிராத அளவுக்கு வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. இந்த வன்முறையால் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் பாதிக்கப்பட்டனர். தமிழ் மக்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் மிகப்பரவலாகச் சேதப்படுத்தப்பட்டன. கருநாடக மாநிலத்தில் வாழ்ந்து வந்த ஒரு இலட்சத்து ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் உயிருக்கு அஞ்சி, பாதுகாப்பு வேண்டி தமிழ்நாட்டிற்குப் பெயர்ந்து வந்தனர். கருநாடக மாநிலத்தில் வாழ்ந்த தமிழ் மக்களைக் கொடுந்துயரம் கவ்வியது. ஈவிரக்கமற்ற முறையில் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைச் செயல்களால் அவர்களுடைய உயிர்களுக்கு எங்கே ஊறு நேர்ந்து விடுமோ என்ற அச்சமும், வேதனையும் அவர்களை ஆட்கொண்டன. இந்த வன்முறைக்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்குமாறும், கருநாடகத்தில் மீண்டும் அமைதியை நிலைநாட்டுமாறும், அங்கிருந்து பெயர்ந்து வந்த தமிழர்கள் மீண்டும் அம்மாநிலத்திற்குத் திரும்புவதற்குச் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கித் தருமாறும், முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இந்தியப் பிரதமரையும், கருநாடக முதலமைச்சரையும் கேட்டுக் கொண்டார். 30.12.1991-ஆம் நாளில் கூடிய தமிழக அமைச்சரவை இது தொடர்பாகத் தீர்மானம் ஒன்றை இயற்றியது. அதே நாளில் தமிழக முதல்வர் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்றைக் கூட்டினார். அக்கூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானம், தமிழ் மக்கள் மீது தொடர்ந்து நடத்தி வருகின்ற வன்முறைச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், இந்த வன்முறைச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதுமான அளவிற்கு இழப்பீடுகள் வழங்குவதற்காக உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு இந்தியப்பிரதமரைக் கேட்டுக்கொண்டது. வன்முறைச் செயல்கள் கருநாடகத்தை உலுக்கிவிட்ட நிலையில், தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டு ஆணை பிறப்பித்ததன் மூலம், தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கைக் காக்கும் ஏற்பாடு செம்மையாகச் செயல்பட்டது. இங்கே, அரசு, அமைதியைப் பேணிக்காத்து, இன ஒற்றுமைக்கு உறுதி செய்தது. அவரது அரசியல் மேதைகைப் பண்பினாலும், சரியான வகையில் முன்கூட்டி எண்ணிச் செயற்படும் திறத்தாலும் தமிழகத்து மக்கள் இன, மொழி வேறுபாடு பாராட்டாமல் அமைதியைப் பாதுகாத்தனர்; மிகமிகப் பாராட்டத் தகுந்த வகையில் பொறுமை காத்தனர்; இதனை இந்த நாடே வியந்து பாராட்டியுள்ளது.

5. கருநாடகத்திலிருந்து தமிழ்நாட்டிற்குப் பெயர்ந்து வந்த ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கி, புகலிடம் அளிக்க இவ்வரசு இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. நிவாரண முகாம்கள் நிறுவப்பட்டன. நிவாரண முகாம்களிலும், ஏனைய இடங்களிலும் தங்கியிருந்த தமிழர்களுக்கு உணவு, துணிமணிகள், ஏனைய அடிப்படைத் தேவைப்பொருட்கள் வழங்கப்பட்டன. இதனால், அரசிற்குப் பெருமளவில் செலவு ஏற்பட்டது என்பது உண்மையே. என்றாலும், எதிர்பாராத, முன் எப்போதும் கண்டிராத வகையில் எழுந்த நிலைமையையொட்டி, அரசு தன்னுடைய நிதி நெருக்கடி நிலைமைக்கு இடையேயும் இதற்கான செலவு முழுவதையும் தானே ஏற்றுள்ளது. அது, இச்செலவினத்திற்கு நிதியுதவி வழங்குமாறு இந்திய அரசிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. மத்திய அரசிடமிருந்து இந்தக் கோரிக்கைக்குச் சாதகமான பதில் கிடைக்கும் என்று நம்புகிறோம். இழப்பீடு வழங்குமாறு கேட்டுவரும் கோரிக்கைகளைப் பெற்றுக்கொண்டு, பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதுமான

அளவிற்கு இழப்பீடு வழங்குவதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்குமாறு தமிழ்நாடு அரசு இந்திய அரசையும், கருநாடக அரசையும் வற்புறுத்தி வந்துள்ளது. கருநாடகத்தில் வாழ்ந்த தமிழ் மக்களின் உள்ளத்தில் நம்பிக்கை ஏற்படுத்தவும், அவர்கள் கருநாடகத்திற்குத் திரும்பிச் செல்லச் சாதகமான நிலைமையை உருவாக்கவும், இதுதான் ஒரே வழி என்று இவ்வரசு கருதுகிறது. எனினும், கருநாடகத்தில் இரக்கமற்ற முறையில் நிகழ்ந்த வன்முறைச் செயல்களின்போது பெருமளவு இழப்பிற்கு ஆளான தமிழர்களுக்கு இழப்பீடு வழங்க, இந்திய அரசோ அல்லது கருநாடக அரசோ இன்னும் உறுதியான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்க நிலை ஆகும்.

6. கருநாடக மாநிலத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இரக்கமற்ற வன்முறைச் செயல்களையும், பல்வேறு இனத்தவர்கள், பல்வேறு மொழிபேசும் மக்களிடையே நிலவும் உறவு முறையைச் சிதைப்பதையும் நாடு முழுவதும் உள்ள பொறுப்புள்ள மக்கள் கண்டிக்கத் தயங்க மாட்டார்கள். நம்முடைய அரசியலமைப்பு கூட்டாட்சி அரசமைப்பாகும். மாநில அரசுகளும், மத்திய அரசும் அரசமைப்புச் சட்டப்படி தத்தமக்கு வழங்கப்பட்டுள்ள கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் ஒன்றுக்கொன்று உறுதுணையாக இருக்கும் என்ற உயரிய கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்ததே கூட்டாட்சி அரசமைப்பு




ஆகும். மத்திய அரசு, மாநில அரசுகளின் நடவடிக்கைகளை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்காமல், அது அந்தந்த மாநிலங்களின் நிலைகளை முறையாகப் புரிந்து கொண்டு, நியாயமான முடிவுகளைப் பயனுள்ள வகையில் ஏற்கச் செய்வதன் மூலம், மாநில அரசுகளுக்கிடையேயான வேறுபாடுகளைக் களைய உதவ வேண்டும். மாநில அரசுகள் தொடர்பாக மத்திய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் நியாயம் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும், பாதிக்கப்பட்டவர்களையும், பாதிப்பை ஏற்படுத்தியவர்களையும் பிரித்துப்பார்க்க வேண்டிய கடமையும் மத்திய அரசுக்குள்ளது. இத்தருணத்தில் கருநாடக மாநிலத்திலுள்ள பாதிக்கப்பட்ட, தமிழ் மக்கள் அனைவருக்கும் போதிய அளவிற்கு இழப்பீடு வழங்கப்படுகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டிய கடமை மத்திய அரசுக்குள்ளது என்பதை மீண்டும் வலியுறுத்த விழைகிறேன்.

7. முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பதவி ஏற்றவுடன் அறிவித்த மதுவிலக்குக் கொள்கை, வெற்றி பெறுமா என்பது குறித்துப் பல்வேறு ஐயப்பாடுகள் எழுப்பப்பட்டன என்பதை உறுப்பினர்கள் நன்றாக அறிவீர்கள். மதுப் பழக்கத்திற்கு அடிமையாகும் சமூகக் கொடுமையை வேரோடு களைந்திட உறுதி செய்யும் வகையில், முதலமைச்சர் தாமே முன்னின்று மது ஒழிப்பு இயக்கத்தைத் தொடங்கினார். மது ஒழிப்புக் கொள்கை வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டதன் மூலம் கள்ளச் சாராய விற்பனை பெருமளவில் குறைந்துள்ளது. கள்ளச் சாராயம் தலைதூக்க வொட்டாமல் செய்யும் வகையில், மதுவிலக்கு நடைமுறைப் பிரிவு திருத்தியமைக்கப்பட்டுள்ளது. கள்ளச் சாராய விற்பனை நடைபெறும் வழிகளைக் கண்டுபிடித்து வெற்றிகரமாக ஒழிப்பதில், அனைத்து அலுவலர்களின் ஒத்துழைப்பும் பெறப்பட்டுள்ளது. இத்துடன், போதை மருந்துத் தொல்லை பரவுவதை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கவும், இளைய சமுதாயத்தை, குறிப்பாக மாணவர்களை, போதை மருந்துப் பழக்கத்திற்கு ஆட்படாமல் தடுத்திடவும், குடிப்பழக்கம், போதை மருந்துப் பழக்கம் இவற்றின் கேடுகளை மக்கள் தொடர்புச் சாதனங்கள் வாயிலாக மக்களுக்கு எடுத்துரைக்கவும், அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. மதுவிலக்குக் கொள்கைகளை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதில் குறிப்பிடத்தக்க அரும்சாதனை புரிந்துள்ளதற்காக, இந்நேரத்தில், இந்த அரசை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

8. நாட்டை எதிர்நோக்கியுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி கிட்டத்தட்ட குடிமக்கள் அனைவரையும் பாதித்துள்ளது. மத்திய அரசு, இந்நிலைமையைச் சீர்படுத்திப் பொருளாதார வளர்ச்சி முன்னேற்றப்படிகளில் நாட்டைத் திரும்பவும் இட்டுச் செல்லும் வகையில், அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது; அதே வேளையில், மத்திய, மாநில அரசுகள் எடுத்து வருகின்ற சிக்கன நடவடிக்கைகளால், ஏழை, எளியவர்களும், வசதி வாய்ப்பு அற்றவர்களும் பாதிக்கப்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். தேசியப் பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளும்முன் எடுக்கப்பட வேண்டிய, மேற்கொன்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கையைக் குறித்து, 1991 டிசம்பரில் புது டில்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வலியுறுத்தினார். பாமர மக்கள் பயன்படுத்தும் பொருள்களுக்கான விலைகள் பெரிதும் உயராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார். இன்றியமையாப் பண்டங்களின் நிர்ணய விலைகள் உயர்த்தப்படுவதற்கு முன்னர், மத்திய அரசு, அனைத்து மாநில அரசுகளையும் கலந்தாலோசிக்க வேண்டுமென்றும் முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார். இருந்தபோதிலும், மத்திய அரசு மாநில அரசுகளைக் கலந்தாலோசிக்காமல், அண்மையில் அரிசி, பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு, நிலக்கரி ஆகியவற்றின் விலைகளைக் கடுமையாக உயர்த்தியுள்ளது. மத்திய அரசு தன்னிச்சையாக மேற்கொண்ட இந்த நடவடிக்கை, மாநில அரசுக்குக் கடுமையான வேதனை தரும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. இந்த விலை உயர்வுகளை ஏற்றுக்கொள்வதா, அல்லது, திட்டச் செயல்பாட்டையும் அதன் விளைவாக மாநிலப் பொருளாதார வளர்ச்சியையும் பாதிக்கும் வகையில், நமது திட்டச் செலவினங்களைக் கடுமையாகக் குறைப்பதா, என்பது பற்றி அரசு முடிவு செய்ய வேண்டியுள்ளது.

9. சான்றாகப் பொது விநியோக முறையில் மத்தியத் தொகுப்பிலிருந்து வழங்கப்படும் அரிசியின் விலையை மத்திய அரசு கடுமையாக உயர்த்தியது. மாநில அரசு, சாதாரண ரகம் அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.2.00 வீதத்திலும், சன்ன ரகம் மற்றும் மிகச்சன்ன ரகம் அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.2.50 வீதத்திலும், மானியம் மிக அதிக அளவில் வழங்கப்படும் நிலையில் பொது விநியோக முறையிலிருந்து அரிசி வழங்கி வந்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். மத்திய அரசு அறிவித்த

வழங்கல் விலையைத் திருத்தியமைத்ததன் விளைவாக, மாநில அரசின் மொத்த மானியச் சுமை ஓராண்டில் மிக உயர் அளவிற்கு, அதாவது, ரூ.503 கோடி அளவிற்கு அதிகரித்துள்ளது. இப்போதுள்ள மிகக் கடுமையான நிதி நெருக்கடியில், இந்த அளவிற்கு மானியச் சுமையைத் தொடர்ந்து தாக்குப்பிடிப்பது மிகவும் சிரமமாகும். தமிழ்நாடு முதலமைச்சர் இந்த விலைத் திருத்தங்கள் பற்றித் தனது தாளமுடியாத மனவருத்தத்தைத் தெரிவித்ததோடு, இதனால் பாதிக்கப்படக் கூடியவர்கள் ஏழை எளியவர்களே என்றும், இந்த விலை ஏற்றத்தை அவர்கள்தான் தாங்க வேண்டியுள்ளது என்றும் சுட்டிக் காட்டினார். ஆயினும், ஏழை மக்கள் பாதிக்கப்படாத வகையில், இவ்வரசு சாதாரண ரக அரிசிக்குக் கிலோ ஒன்றுக்கு ரூ.2.00 என்ற விலையை மாற்றாமல் அப்படியே வைத்துக் கொண்டுள்ளது. இவ்வளவு குறைந்த விலையில் சாதாரண ரக அரிசி வழங்கப்படுவதனால் உதவி மானியம் மிக அதிக அளவிற்கு வழங்கப்படுகிறது. புகழ் பெற்ற நமது புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பின்பற்றிய கொள்கையின் அடித்தளமாக இருந்தது ஏழை, எளியவர்களின் சுமையைப் பகிர்ந்து கொள்வது என்பதே. அதனை அடியொற்றியே, இவ்வரசு இதனை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது. மேலும், விலைகளைக் கட்டுப்படுத்த இவ்வரசு ஏனைய பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. வணிகர்கள் வெளிச்சந்தையில் அரிசி விலையைக் குறைப்போம் என்று அவர்கள் அளித்த உறுதிமொழிக்கிணங்க, வர்த்தகர்கள் 'லெவி' நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. வெளிச்சந்தை விலை குறைய ஏதுவாகப் பொது விநியோக முறையில் கூட்டுறவுச் சங்கங்களும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் பொது மக்களுக்கு இன்றியமையாப் பொருள்களை வழங்கும்.

10. ஒருபுறம் பொருளாதார நிலையிற்காணும் பண வீக்கப் போக்கிலிருந்து ஏழைகளை ஓரளவிற்காவது காக்க வேண்டிய பொறுப்பு மாநில அரசிற்கு உள்ளது. மறுபுறம், ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்பொருட்டு, திட்ட ஒதுக்கீடுகளை, அதே அளவில் வைத்திருக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இது எளிதான பணி அன்று. இதற்குச் சில தியாகங்களைச் செய்தாக வேண்டும். ஒட்டுமொத்த நிலைமைக்கேற்ப, எமது அரசு இது தொடர்பாக, எண்ணிப்பார்த்து நியாயமான நிலையை மேற்கொண்டுள்ளது. ஏழைகள், நலிந்த பிரிவினர், வசதி வாய்ப்பற்றவர்கள் ஆகியோரின் நலனைப் பாதுகாக்க அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளது. இதன்மூலம், உணவு மானியத்தை அதிக அளவில் தொடர்ந்து வழங்கிவருதல், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டுவருதல் ஏழைகளுக்கு இன்றியமையாப் பொருட்களை வழங்க உதவித் தொகை வழங்குதல் ஆகியவற்றுக்கு உயர்முன்னுரிமை அளிக்கப்படும் என்பது தெளிவாகியது. ஏழைகளின் நலனைப் பாதுகாக்க வேண்டிய இத்தகைய பொறுப்பின் அடிப்படையில்தான், ரூ.41.56 கோடி செலவில் 1.20 கோடி ஏழை மக்களுக்கு இலவசமாக வேட்டி, சேலைகளை வழங்கும் திட்டத்தை அண்மையில் முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்துள்ளார். ஏழைகளுக்கு உணவு, உடை, உறைவிடம் போன்ற இன்றியமையா அடிப்படைத் தேவைகளை வழங்க இவ்வரசு பொறுப்பேற்கிறது. அதற்கிணங்க, இவ்வரசு, இது தொடர்பாக உரிய திட்டங்களை வகுத்து நிறைவேற்றும். இதன் விளைவாகத் திட்டங்களுக்குப் போதிய நிதி ஆதாரங்களை வழங்குவதில் மாநில அரசுக்குப் பெரும் இடர்ப்பாடு உள்ளது. இருப்பினும், அரசின் முற்போக்கான நலத்திட்டங்களால், ஏழை, எளிய மக்களின் குறைந்தபட்சத் தேவைகள் நிறைவு செய்யப்படவிருக்கின்றன என்பதே மன நிறைவளிப்பதாக உள்ளது.




11. தேசிய வளர்ச்சிக்குழு, 1991 டிசம்பரில் நடைபெற்ற கூட்டத்தில் 'காட்கில்' விதிமுறையில் மேலும் திருத்தங்கள் செய்ய ஒப்புதல் அளித்துள்ளது. இப்போது செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் தமிழ்நாட்டிற்கு முழுவதும் மனநிறைவளிப்பதாக இல்லாமலிருந்தபோதிலும், அவை, 1990 அக்டோபரில் ஒப்புதல் அளிக்கப்பட்ட திருத்தங்களை விட மேம்பட்டதாக உள்ளன. இதில் மிக முக்கியமான அம்சம் என்னவெனில், மாநிலங்களுக்குக் கிடைக்கக்கூடிய மத்திய அரசின் நிதியுதவி குறித்த பொதுநிதி போதிய அளவிற்கு அதிகரிக்கப்பட்டிருப்பதேயாகும். நல்வாய்ப்பற்ற நிலை காரணமாக, மாநிலங்களுக்கு மத்திய அரசு அளிக்கும் நிதியுதவி குறிப்பிடத்தக்க அளவிற்குப் பெரிதும் உயர்ந்துள்ளதாகத் தோன்றவில்லை. தமிழ்நாடும் குறிப்பிடத்தக்க வகையில் இடர்ப்பாட்டிற்குள்ளாகியுள்ளது. திருத்தப்பட்ட 'காட்கில்' விதிமுறைகளின்படி, தேசிய சராசரி அளவிற்குக் கீழ் நபர்வாரி வருமானத்தைக் கொண்டிருக்கும் மாநிலங்களுக்கான 20 சதவீத அளவிலிருந்து நிதியுதவி பெற நமது மாநிலம் தகுதி பெறவில்லை. 1982 முதல் 1985 வரையிலான கால அளவில், தமிழ்நாட்டின் நபர்வாரி வருமானம் தேசிய சராசரி அளவைவிடக் குறைவாக இருந்து வந்துள்ளது. அதன் பின்னர், உள்ள கால அளவில், இது, தேசிய சராசரி அளவிற்குமேல் சென்றுள்ளது. நபர்வாரி வருமானத்தைச் சரியாகக் கணக்கிடுவதிலும் இடர்ப்பாடுகள் உள்ளன. கணக்கிடுவதில் உள்ள இத்தகைய இடர்ப்பாடுகளை எளிதில் களைய இயலாதுள்ளதால், ஏழாம் திட்டக் காலத்தில் அளிக்கப்பட்டது போல, திருத்தி அமைக்கப்பட்ட 'காட்கில்' விதிமுறைகளின் கீழ்த் தனிப்பிரச்சினைகளுக்காக ஒதுக்கப்பட்ட 7.5 சதவீத நிதித் தொகுப்பிலிருந்து சிறப்பு ஒதுக்கீடாக மத்திய அரசு நிதியுதவியையும், பொதுமக்கள், வங்கிகளிடமிருந்து பெறப்படும் கடன்களிலிருந்து சிறப்பு ஒதுக்கீட்டையும், தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டுமென முதலமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள். ஏற்கெனவே நிதி நெருக்கடிக்கு ஆட்பட்டுள்ள தமிழ்நாடு, இந்தச் சிறப்பு ஒதுக்கீடுகள் இல்லாமல், மத்திய அரசு நிர்ணயித்த விலை உயர்வுகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் மேலும் புண்பட்டுள்ள சூழ்நிலையில், மனநிறைவளிக்கத்தக்க வகையில் எட்டாம் திட்டத்தை எதிர்பார்க்க இயலாது என்பதை முதலமைச்சர் அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்கள். மத்திய அரசு கூடுதலாக நிதியுதவி அளிக்க வேண்டும்; பொதுமக்கள், வங்கிகளிடமிருந்து பெறப்படும் கடன்களிலிருந்து கூடுதலாக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற தமிழ்நாட்டின் கோரிக்கை தனித்த இயல்புடையது.இதனை ஏற்க வேண்டியது அவசியமாகும். தமிழ்நாட்டின் கடற்கரையோர நெடுகிலுமான எல்லையோரப் பகுதிகளில் உள்ள பிரச்சினைகளுக்கு, இவற்றை எல்லையோரப் பகுதி மாநிலங்களுக்கு இணையாகக் கடற்கரையோர எல்லைப்பகுதிப் பிரச்சினையாகக் கருதிச் சிறப்பு நிதியுதவி அளிக்க வேண்டும்.

12. மாநிலத்தின் வளர்ச்சி வாய்ப்புகள் குறித்து விரிவான கண்ணோட்டம் கொண்டு, 1992-97ஆம் ஆண்டுகளுக்கான எட்டாம் திட்டத்திற்குரிய ஒதுக்கீடு ரூ.9,500 கோடியாக இருக்கலாம் என்று இவ்வரசு கருத்துத் தெரிவித்துள்ளது. முதலமைச்சர் அவர்களுக்கும், மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் அவர்களுக்குமிடையே அண்மையில் நடைபெற்ற விவாதங்களில், 1992-93ஆம் ஆண்டுத் திட்டம் மட்டுமே இடம் பெற்றது. 1992-93ஆம் ஆண்டிற்காக நியாயமான அளவிற்குள் இருக்குமாறு தயாரிக்கப்பட்ட ஆண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நிதி ஆதாரங்களின் பற்றாக்குறை பெருமளவிற்கு உள்ளது. இதன்பொருட்டு, மாநில அரசு கணிசமான அளவிற்கு நிதி ஆதாரங்களைத் திரட்ட முயற்சி மேற்கொள்ள வேண்டியிருக்கும். இது குறித்து ஏற்கெனவே நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும் நிலையில், நம்முடைய தனிவகையான இடர்ப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, அதிக அளவிற்கு நிதியுதவி வழங்குமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளோம். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டே, 1992-93 ஆம் ஆண்டுத் திட்டத்தின் அளவை நிர்ணயிக்க வேண்டியிருக்கும். இது குறித்து மேற்கொண்டும் திட்டக் குழுவுடன் விவாதித்து வருகிறோம். நிதி ஆதாரங்களின் இடர்ப்பாடுகள் கடுமையாக இருந்தபோதிலும், இறுதியாக முடிவு செய்யப்படக் கூடிய 1992-93ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு, நடப்பாண்டு ஒதுக்கீட்டு அளவைவிட அதிகமாக இருக்குமென நம்புகிறோம். எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு குறித்து, மத்திய திட்டக் குழுவுடன் மேற்கொண்டும் விவாதம் நடத்திய பிறகு இறுதி முடிவு எடுக்கப்படும்.

13. நடப்பாண்டில், இம்மாநிலம் முழுவதிலும் தென்மேற்குப் பருவமழையும், வடகிழக்குப் பருவமழையும் மனநிறைவளிக்கும் வகையில் இருந்தன. சில மாவட்டங்களில், குறிப்பாக வடக்கு மாவட்டங்களில், மழையளவு இயல்புக்கும் அதிகமாக இருந்தது. 1991, நவம்பரில் புயல், பெருமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால், பயிர்களுக்கும், சொத்துக்களுக்கும் பரவலான சேதங்கள் ஏற்பட்டன. அரசு விரைந்து செயல்பட்டுப் பல்வேறு வெள்ள நிவாரணப் பணிகளுக்காக ரூ.30 கோடி அனுமதித்தது. இத்துடன், இயற்கைச் சீற்றங்கள் குறித்த நிவாரண நிதியில் இருந்த தொகை முழுவதும் செலவிடப்பட்டு விட்டது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் புதுப்பிக்கும் பணிகளை மேற்கொள்ள, பெரும் கட்டுமானத் திட்டம் ஒன்றை இவ்வரசு வகுத்துள்ளது. விரைவில் இதற்கு அனுமதி பெற்றுத் தருவதற்கு உலக வங்கியை அணுகுமாறு நாம் மத்திய அரசை வலியுறுத்துவோம்.

14. அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பெருமளவு பகுதிகள் பாதிக்கப்பட்ட போதிலும், பயிர்களைப் பாதுகாக்க அல்லது மீண்டும் பயிரிடும் வகையில் உழவர்களுக்கு நிதியுதவி அளிக்க விரைவான நடவடிக்கை எடுத்துள்ளோம். நல்ல விளைச்சல் கிடைக்கும் வகையில் பயிர்த் தொழிலை மேற்கொள்ள விதைகள், உரங்கள், பூச்சிகொல்லிகள் ஆகியவை போதிய அளவுக்கு வழங்கப்பட்டன. நடப்பாண்டில், அரிசி உற்பத்தி எப்போதுமில்லாத அளவுக்கு உயரளவாக 65.25 இலட்சம் மெட்ரிக் டன் இருக்கும் என்பது பெருமையளிக்கக் கூடியதாகும். மொத்த உணவு தானிய உற்பத்தி 90.45 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பாண்டில், கரும்பு மற்றும் பயறு வகைகளின் உற்பத்தியும் மிக உயரளவுக்கு இருக்கும். பருத்தி உற்பத்தியும் உயரளவு 6 இலட்சம் பேல்கள் இருக்கும். நல்ல பருவத்தில் முதலீடு செய்வதில் உழவர்கள் ஆர்வம் காட்டியதாலும், சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள் பல்வேறு இடுபொருள்களை உரிய காலத்தில் வழங்கி, ஆலோசனை நல்கி வழிகாட்டியதாலும் இந்த வெற்றி கிட்டியது. இது விலைவாசி உயர்வினை மட்டுப்படுத்த உதவும் என்று நாம் நம்புகிறோம்.

15. வேளாண்மைத் தொழிலுடன், கடல் மீனளம் மற்றும் உள்நாட்டு மீனளம் இவற்றை மேம்படுத்தும் வகையில், உயர் முன்னுரிமை அளிக்கவும் அரசு விழைகிறது. தமிழ்நாட்டில் உவர்நீர் இறால் பண்ணைகள் வளர்ச்சியடைய நல்ல வாய்ப்புகள் உள்ளன. இது தொடர்பாகக் கடந்த காலத்தில் திட்டமிடப்பட்ட சில நடவடிக்கைகள், எதிர்பார்த்த பயன்களை அளிக்கவில்லை. உவர் நீர் இறால் பண்ணை வளர்ச்சியில் பெரும் முன்னேற்றம் அடைய புதிய கொள்கை ஒன்று வகுக்கப்படும். வரும் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் குறைந்தளவு 1,000 எக்டேரில் இறால் பண்ணைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

16. வரும் ஆண்டில் காடு வளர்ப்புத் திட்டங்களை இவ்வரசு தொடர்ந்து முனைப்புடன் செயல்படுத்தும். அதே நேரத்தில் வெட்டி அழிக்கப்பட்ட மற்றும் தானே அழிந்துபட்ட காடுகளை மீண்டும் உருவாக்கத் தனி முயற்சிகள் மேற்கொள்ளப்படும். வெட்டி அழிக்கப்பட்ட மற்றும் தானே அழிந்துபட்ட காடுகளில் சுமார் 2,000 எக்டேர் பரப்பில் காடுகளை மீண்டும் வளப்பதற்கான திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும். தனியாரிடமுள்ள பெரும் அளவிலான நிலங்கள் காடு வளர்ப்பிற்குச் சரியாகப் பயன்படுத்தப் படுவதில்லை. அத்தகைய நிலங்களில், விறகு மரங்கள், கால்நடைத் தீவனம், விளைபொருள் தரும் மரங்கள் ஆகியவற்றைப் பயிரிடப் பயன்படுத்தும் வகையிலும், முறையாக ஆண்டுதோறும் பயிர்கள்




விளைவிக்க முடியாத நிலங்களில் மரங்களை வளர்க்க உழவர்களுக்கு ஊக்கத் தொகைகள் அளிக்கும் வகையிலும், திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

17. இந்தியப் பொருளாதாரம் மாறுதலடைந்து வருகிறது. நம்முடைய வெளிச் செலாவணிக் கையிருப்புத் தொகை நிலைமையை முன்னிட்டும், தேசிய அளவில் பொருளாதாரத் துறையில் நிலவிய கட்டாயங்களை முன்னிட்டும் இந்திய அரசு ஒரு புதிய தேசியத் தொழில் கொள்கையை அறிவித்துள்ளது. தாராளமயமாக்கும் புதிய தொழில் கொள்கையின் அனுகூலத்தைப் பயன்படுத்தி, இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்த, மாநில அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். தொண்ணூறாம் ஆண்டுகளில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களைவிட தொழில் வளர்ச்சியில் முன்னிலை பெற்று விளங்கும் வகையில், புதிய தொழில்கள் வளர்ச்சிக்குப் பெரிதும் தேவைப்படும் தூண்டுதல் அளிக்கும் வண்ணம், ஊக்க உதவிகளும், வசதிகளும் அளிக்கப்பட வேண்டும். பெருகி வரும், படித்த வேலை வாய்ப்பில்லாதவர்களுக்கு ஆக்கபூர்வமான வேலைவாய்ப்பு

அளிப்பது மிகவும் இன்றியமையாததாகும். இதனைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், அரசின் புதிய தொழில் கொள்கையை அண்மையில் அறிவித்துள்ளார்கள். முதல் முறையாகத் தொழில் வளர்ச்சித் தொடர்புடைய அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய விரிவான கொள்கை விளக்கம், தொழில் முனைவோர் அனைவருக்கும் கிடைக்கும்படி செய்யப்பட்டுள்ளது. கொள்கை விளக்கம், ஊக்க உதவிகள், வசதிகள் ஆகியவற்றைத் தொழில்கள் நன்கு பயன்படுத்த இயலும் வகையில், அவை அனைத்தும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. புதிய தொழில் கொள்கையை மற்ற மாநில அரசுகளின் தொழில் கொள்கைகளுடன் ஒப்பிடுகையில் நமது தொழில் கொள்கை சிறந்து காணப்படுகிறது. இந்தப் புதிய தொழில் கொள்கை, நாடெங்கிலும் மற்றும் வெளிநாடுகளிலும் உள்ள தொழில் முனைவர்கள் தமிழ்நாட்டில் தொழில்களைத் தொடங்க அவர்களைக் கவரும் என்று நம்பப்படுகிறது. இத்துடன், தொழில் முனைவர்களின் நியாயமான தேவைகளுக்கு, உரிய நேரத்தில், ஆக்கப்பூர்வமான உதவி அளிக்கும் வகையில் நிர்வாக அமைப்பு உரியவாறு சீரமைக்கப்படும். இந்தப் புதிய இசைவான சூழ்நிலை, மாநிலத்தை விரைந்து தொழில் மயமாக்குவதற்கு வழிவகுக்கும் என்று நம்பப்படுகிறது.

18. தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடு 1969 ஆம் ஆண்டில் 10 சதவீதமாக இருந்தது. அது, 1989-90ஆம் ஆண்டில் 5.21 சதவீதமாகக் குறைந்துள்ளது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், உருவாகி வரும் புதிய திட்டங்களின் மீது மத்திய அரசின் மொத்தப் பொதுத் துறை முதலீடுகளில், தமிழ்நாட்டின் பங்கு மிகவும் குறைந்த அளவே இருக்கும் என்று இந்தியப் பொருளாதார மதிப்பீட்டு மையம் அண்மையில் நடத்திய ஆய்வு குறிப்பிடுகிறது. இம்மாநிலத்திலுள்ள பல்வேறு மத்தியத் திட்டங்களுக்கு விரைவில் அனுமதி அளிக்குமாறு இவ்வரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. நல்வாய்ப்பற்ற நிலை காரணமாக, இத்திட்டங்களுக்கு அனுமதி அளிப்பதில் அதிக முன்னேற்றம் ஏற்படவில்லை. நெய்வேலியில் மூன்றாம் சுரங்கம் வெட்டுதல், தமிழ்நாட்டிற்கு எரிவாயு கொண்டு வருவதற்காகத் தென் மாநிலங்களுக்கான எரிவாயுக் குழாய் அமைக்கும் திட்டம் ஆகியவற்றை மத்திய அரசு எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கவேண்டும். எண்ணூர் துணைத் துறைமுகத் திட்டம், மணலியில் தேசிய அரோமேட்டிக் திட்டம் தொடங்குதல், இம்மாநிலத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளை நான்கு வழிப்பாதை சாலைகளாக மாற்றுதல், கிழக்குக் கடற்கரை தேசிய




நெடுஞ்சாலையை ஏற்படுத்தல் முதலியவை போன்று, நீண்டகாலமாக நிலுவையாக இருக்கும் திட்டங்கள் மத்திய அரசின் எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். இருபது ஆண்டுகளுக்கு மேலாகப் புதிதாகப் பெரிய மத்தியத் திட்டம் ஒன்று கூட தமிழ்நாட்டில் தொடங்கப்படவில்லை. இக்குறை களையப்பட வேண்டும்.

19. புதிதாக மூன்று பெரிய தொழில்வளர்ச்சி மையங்களை ஏற்படுத்தச் செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. அதற்கு மத்திய அரசு இதுவரையிலும் ஒப்புதல் அளிக்கவில்லை. இதற்கு எப்போது அனுமதி கிடைக்கும் என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. இந்த மூன்று தொழில் வளர்ச்சி மையங்களையும் ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளைத் தொடங்க அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் தொழில் வளர்ச்சி மையங்கள் நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்திலுள்ள பனங்குடி, பெரியார் மாவட்டத்திலுள்ள பெருந்துறை, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கங்கைகொண்டான் ஆகிய இடங்களில் அமைக்கப்படும். இந்தப் புதிய வளர்ச்சி மையங்கள் மூன்றையும் ஏற்படுத்த, புதிதாகத் தொடங்கப்பட்ட அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகம் (TACID) உரிய நடவடிக்கைகளை எடுக்கும். மிகக்குறுகிய காலத்திற்குள் இந்த வளர்ச்சி மையங்களைச் செயல்படச் செய்வதே இவ்வரசின் நோக்கமாகும். அரசு வழங்கும் என்று உறுதி அளித்த ஊக்க உதவிகளும், மானியங்களும் எவ்விதக் காலதாமதமுமின்றித் தொழில்களுக்குக் கிடைப்பதை உறுதிசெய்ய அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. புதிய தொழில்களுக்கான மானியக் கோரிக்கைகளின் நிலுவைகளைத் தீர்க்க ஒருமித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, நிதி நிறுவனங்களிடம் கடன் பெறுவது அதிகச் செலவு பிடிப்பதாக இருக்கும்போது, இதனைத் தொழில்முனைவோர் அனைவரும் வரவேற்பர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

• 20. புனல்மின் திட்ட நீர்த்தேக்கங்களின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நல்ல மழை பெய்துள்ளதாலும், அனல் மின் நிலையங்களுக்கு நிலக்கரி கொண்டுவர சிறப்பு நடடிக்கைகள் எடுக்கப்பட்டதாலும், தமிழ்நாட்டில் மின்வெட்டு வராமல் பார்த்துக்கொள்ள முடிந்தது. கோடை மாதங்களில் ஏற்படும் ஏதேனும் அவசரத் தேவையைச் சமாளிக்க நாங்கள் நிலக்கரி இருப்பு வைத்துள்ளோம். இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை எளிதாக்குவதில் மின்சக்தித் துறை ஆற்றும் முக்கியப் பங்கை இவ்வரசு உணர்ந்துள்ளது. இது, நம்முடைய நிதி ஆதாரங்களில் நிலவும் நெருக்கடிகளுக்கு இடையேயும் மின்சக்தி குறித்த திட்ட ஒதுக்கீட்டிற்குப் பாதிப்பு நேராமல் இருக்க உறுதி, செய்துள்ளது. தொடர்ந்து நடைபெற்று வருகின்ற எல்லாத் திட்டப்பணிகளிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஜெயங்கொண்ட சோழபுரத்தில், பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுப்பதற்கும், தனியார் துறை மின் உற்பத்தி செய்வதற்கும் இயலும் வகையில், ரூ.7000 கோடி செலவிலான புதிய பெருந்திட்டம் முடிவாக்கப்பட்டுள்ளது என்பதையும், இதன்மூலம் 1500 மெகாவாட் மின்விசை உற்பத்தி செய்ய இயலும் என்பதையும் அறிந்து உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசின் இசைவைப் பெறவேண்டியுள்ளது. இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு விரைவில் இசைவளிக்குமானால், அது, அடுத்த பத்தாண்டு காலத்திற்குத் தமிழ்நாட்டின் மின்விசைத் தேவைகளை நிறைவு செய்யும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக அமையும்.

21. பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் முக்கியத் தேவையான சாலை ஏற்பாட்டினைப் பராமரித்தல், பழுதுபார்த்தல், தரமுயர்த்துதல் ஆகிய பணிகளில் அரசு தனி கவனம் செலுத்தி




வருகிறது. பொதுத்துறையில் உள்ள அடிப்படை வசதி குத்தகைப் பணிகள் நிதியுதவி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் ரூ. 30 கோடி செலவில் சாலை மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை மேற்கொள்ள எடுக்கப்பட்ட நடவடிக்கையை அறிய இம்மன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவார்கள். இத்திட்டத்திற்கு நிதி பெற மாவட்டத்தின் எல்லையில் பொருத்தமான இடங்களில் சுங்கக் கட்டண வசூல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வரும் நிதியாண்டில், முதல்முறையாக சாலைகள் பராமரிப்பிற்காக விதிமுறைகளின்படி நிதி ஒதுக்கம் செய்யப்படும் என்பது மற்றொரு முக்கிய நடவடிக்கையாகும். நம்முடைய நெடுஞ்சாலைகள்,மாவட்டச் சாலைகளின் நிலைமைகளை மேம்படுத்துவதில் இது பெரிதும் உதவும். சாலை மேம்பாட்டு வசதியுடன், தொலைக்கோடியிலுள்ள கிராமப் பகுதிகளுக்குச் சென்று வர, பேருந்து வசதிகளை அதிகப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளுக்கும் உயர் முன்னுரிமை அளிக்கப்படும். 1992 டிசம்பர் இறுதிக்குள் 1000 மக்கள் தொகைக்கு அதிகமாகவுள்ள கிராமங்கள் ஒவ்வொன்றுக்கும் பேருந்து வசதி அளிக்கும் திட்டம் ஒன்றை அரசு தொடங்கி வைத்துள்ளது.

22. கிராமப் பகுதிகளிலும், நகர்ப்பகுதிகளிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்குரிய அவசியமான நடவடிக்கைகள் அனைத்தையும் எமது அரசு தொடர்ந்து மேற்கொள்ளும். குடிநீர் வழங்கல் தொடர்பாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, 1.4.1991 நிலவரப்படி நீர் வழங்கல் ஆதாரம் ஒன்று கூட இல்லாத குக்கிராமங்கள் 2483 உள்ளன. ஒருமித்த நடவடிக்கையின் வாயிலாக, இதுவரையில் இத்தகைய 2422 குக்கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது; எஞ்சிய கிராமங்களுக்கும் 1992 மார்ச் இறுதிக்குள் குடிநீர் வழங்கப்படும் என்பது மனநிறைவளிப்பதாகவுள்ளது. இதன்மூலம், நடப்பாண்டின் இறுதிக்குள் குடிநீர் ஆதாரம் ஒன்றுகூட இல்லாத கிராமங்கள் எவையுமில்லை என்கிற நிலை உருவாகும். நடப்பாண்டில் குடிநீர் ஆதாரம் ஒன்றுகூட இல்லாத 1956 ஆதிதிராவிடர், பழங்குடியினர் வாழும் குக்கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அண்மையில் ஐதராபாத் சென்று, ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்திச் சென்னை மாநகருக்குக் கிருஷ்ணா நதிநீர் கொண்டுவருவதற்கு உறுதி செய்துள்ளதை அறிந்து மகிழ்ச்சியடைவீர்கள். சென்னை மாநகருக்குக் கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வருவதற்குத் திட்டவட்டமான கால அட்டவணையை, அதாவது 1995 ஜூன் என்கிற கால அளவை நிர்ணயிக்க, இரு முதலமைச்சர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இத்திட்டத்தைச் செயற்படுத்துவதில் பெரிய தடைகள் எவையுமில்லை. திருத்தப்பட்ட திட்ட இலக்கு நிர்ணய கால அளவின்படி, இத்திட்டத்தை விரைவுபடுத்த, நல்ல முறைகளில் பணிகள் நிறைவேற்றப்படுவதற்கு இவ்வரசு தன்பங்கிற்கு உறுதி செய்யும்.

23. ஆக்க நல அரசு, மக்களுக்குத் தேவையான சமுதாய அடிப்படை வசதிகளை வழங்கவேண்டும். அப்போதுதான், மக்கள் குறிப்பாக, ஏழைமக்கள், சமுதாயத்தில் வசதி வாய்ப்பற்றவர்கள் தங்களுடைய உடல், மன, அறிவாற்றல் ஆதாரங்களை மேம்படுத்திக்கொள்ள இயலும்; மேலும், நாட்டின் பயனுள்ள குடிமக்களாகத் தங்களை உயர்த்திக் கொள்வதற்கான வாய்ப்பையும் பெற இயலும். இதனைக் கருத்தில் கொண்டு, மனிதவள மேம்பாட்டிற்குச் சமுதாயப் பணிகளில் முதலீடு செய்வது முக்கியமானதாகும். பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், காமராசர், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, மதுரை, வடார்க்காடு அம்பேத்கார், திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய ஏழு மாவட்டங்களில் முழு அளவில் எழுத்தறிவு இயக்கம் ஒன்றை, அரசு வெற்றிகரமாகத் தொடங்கிவைத்துள்ளது. மேற்சொன்ன ஏழு மாவட்டங்களில் ரூ.11.95 கோடி செலவில் வயதுவந்த 18.35 இலட்சம் பேருக்கு எழுத்தறிவு புகட்ட இத்திட்டம் வகைசெய்யும். இத்திட்டம் மேலும் படிப்படியாக ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இத்திட்டம் முழு அளவில் 1993-94 ஆம் ஆண்டில் நிறைவேற்றி முடிக்கப்படும். தொடக்கக்கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கு உயரிய முக்கியத்துவம் அளிக்கப்படவுள்ளது. வரும் ஆண்டில், இம்மாநிலத்தில் தற்போதுள்ள ஓராசிரியர் பள்ளிகளுக்குக் கூடுதலாக ஒரு ஆசிரியர் நியமிக்கப்படுவாரென்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். வரும் ஆண்டில், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் அனைத்திலும் மாணவர்களுக்கும் மாணவியர்களுக்கும் தனித்தனியே கழிவறை வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்பதையும் உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். போதிய அளவுக்குப் பள்ளிக் கட்டிடங்கள் இல்லை என்பதை உறுப்பினர்கள் அறிவர். தொடக்க, நடுநிலைப்பள்ளிகளுக்கு அத்தகைய கட்டிடங்களைக் கட்டிக்கொடுப்பதற்கு அரசு பொறுப்பேற்கிறது. அதே நேரத்தில் உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகளுக்கு அத்தகைய கட்டிட வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு, இப்பணியில் தொண்டுமனப்பான்மை கொண்டவர்கள் பங்குகொள்ள நாம் முயற்சி எடுக்கவேண்டும். பள்ளிக்கட்டிடங்கள் கட்டுவதில் தொண்டுமனப்பான்மையுடையோர் பங்குகொள்ளச் செய்திட அரசு ஊக்கமளிக்கும்.

24. மக்கள் நல்வாழ்வு மருத்துவப்பணிகள், முழுமையாக மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பது நல்வாழ்வுப்






பணிகளிலுள்ள பெரிய குறைபாடுகளில் ஒன்றாகும். துணை மையங்கள், பொதுச் சுகாதார நிலையங்கள், வட்ட, மாவட்ட மருத்துவமனைகள் ஆகியவற்றில், மருத்துவ வசதிகளை ஏற்படுத்துவதற்கு நாம் மிகப் பெரிய அளவில் முதலீடுகளைச் செய்துள்ள போதிலும், கிராமப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு உரிய மருத்துவ வசதிகள் இன்னும் எட்டாத நிலையிலேயே உள்ளன. இந்த அவல நிலையை முற்றிலுமாகக் களைய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அண்மையில் பலமுனை மருத்துவ நலத்திட்டம் ஒன்றைத் தொடங்கி வைத்துள்ளார். 'புரட்சித் தலைவி மருத்துவ நலத்திட்டம்' என்கிற இப்புதிய திட்டத்தின் கீழ், ஆறுமாத கால அளவில் 10,000 இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்படும். தொலைக் கோடியிலுள்ள கிராமப் பகுதிகளுக்கும் இலவசமாக சிறந்த மருத்துவ வசதிகள் கிடைக்கச் செய்வதே இத்திட்டத்தின் சிறப்பாகும். போதிய அளவிற்கு மருத்துவப் பணியாளர்களை நியமித்தும், மருந்துகள் மருந்துப் பொருட்களை வழங்கியும், அத்துடன் தொண்டுமனப்பான்மை கொண்டோர் மனமுவந்து அளிக்கும் உதவிகளைப் பெற்றுத்தந்தும், அவற்றின் வாயிலாக, இம்மருத்துவ நல்வாழ்வு முகாம்களுக்குப் போதிய வசதிகள் அளிக்கப்பட்டுவருகின்றன. ஏழை, எளிய மக்கள் பெரும்பாலானோரைச் சென்றடையக்கூடிய நிலையான மருத்துவநலப் பெருந்திட்டம், நாட்டிலேயே வேறு எங்குமில்லாதவகையில், முதல் முறையாக இம்மாநிலத்தில்தான் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. சிறந்த முறையில் தாய் சேய் மருத்துவ நலப்பணி ஆற்றும் வகையில் ஒருங்கிணைந்த சுகாதாரச் சத்துணவுத் திட்டப்பணிகள் முழு அளவில் செயல்படுத்தப்பட்டுவருகின்றன. தொண்டு நிறுவனங்கள், மருந்துத் தயாரிப்பாளர்கள், வணிகர்கள், தனியார் மருத்துவர்கள் இத்திட்டத்தில் ஆர்வத்துடனும் விருப்பத்துடனும் பங்கேற்க முன்வந்துள்ளனர் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

25. புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் தொடர்ந்து முழு வேகத்துடன் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக இலட்சக்கணக்கான குழந்தைகள் பயனடைந்து வருவது நாடறிந்ததாகும். நாடெங்கிலும், ஏன் வெளிநாட்டிலும்கூட, இத்திட்டத்திற்கு மிகப் பெரிய அளவில் பாராட்டுதல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. சத்துணவுக் கூடத்திற்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கும், அவற்றைப் பராமரிப்பதற்கும் உதவுவதன் வாயிலாக, இத்திட்டத்தில் தொழில் அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், கொடையாளிகள் பங்கேற்கச் செய்யவும் அண்மையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான ஆதரவு நல்ல முறையில் உள்ளது கண்டு நான் மகிழ்வடைகிறேன்.

26. ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம் என்கிற புதிய திட்டம், கிராமப் பகுதிகளிலுள்ள ஒரு இலட்சம் மகளிருக்குச் சுய வேலைவாய்ப்பு வசதி அளிப்பதற்காகத் தொடங்கப்பட்டுள்ளது. மூன்று மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிற இத்திட்டம், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தை இம்மாநிலம் முழுவதிலும் விரிவுபடுத்தக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை எஞ்சிய மாவட்டங்களிலும் நிறைவேற்றுவதற்குரிய தொடக்கப்பணி நடந்தேறி வருகிறது. மகளிர் வாழ்க்கைத் தரத்தினையும், பொருளாதாரத் தகுதியினையும் மேம்படுத்த, கிராமப்புற மகளிரிடையே ஆர்வமூட்டும் வகையில், சமூகத்தின் ஆதரவைத் திரட்டுவதே இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

27. அடிப்படை நிருவாக ஏற்பாடு மக்களுக்கு மிக நெருங்கி வரும் வகையில் மாற்றியமைக்கப்படவேண்டும். இதில் காலதாமதம் ஏற்படுவதை அறவே ஒழிக்க வேண்டும். நிலப்பதிவேட்டு முறை மிகப்பழைமையானதாகவே இருந்து வந்துள்ளது. இம்முறையை நவீனப்படுத்த விரிவான முயற்சி எடுக்கப்படும். பட்டா பாஸ் புத்தகம் வழங்குதல், நிலப்பதிவேடுகளைக் கணினிமயமாக்குதல் போன்ற பல்வேறு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை பெற்றுள்ள அனுபவங்களைக் கொண்டு, நமது பணிகளை மேலும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும். 'நிலப்பதிவேட்டு மேலாண்மைத் திட்டம்' என்கிற விரிவான புதிய திட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, மாநில அளவில் பட்டா பாஸ் புத்தகம் வழங்கும் திட்டம் ஒன்றைக் கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது. இதன்மூலம், விவசாயிகள் தங்களுடைய உடைமை நிலங்களைச் சரியாகவும், முழுமையாகவும் அறிய முடியும். விவசாய மேம்பாட்டிற்காகக் கடன் வசதியினைப் பெற, நடைமுறையை எளிதாக்கவும் இது உதவும்.

28. உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தவாறு, 1992 மே இறுதிக்குள் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திற்கும் தேர்தல்கள் நடத்த இவ்வரசு பொறுப்பேற்றுள்ளது. முதலாவதாக கூட்டுறவுச் சங்கங்களில் போலி உறுப்பினர்கள் இடம் பெற்றிருப்பதை ஒழிக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில் உண்மையில் உறுப்பினர்களாக உள்ளவர்கள், அவர்களுடைய தலைவர்களைத் தெரிந்தெடுக்க, இதன்மூலம் வாய்ப்பு கிடைக்கும். அவசியமான சட்டம் ஒன்றைக் கொண்டுவந்த பின்னர், கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திற்கும் தேர்தல்களை நடத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

29. மாநிலம் கடும் நிதி நெருக்கடியில் இருந்த நிலையில் இந்த அரசு பதவி ஏற்றது. 1991-92 - ஆம் ஆண்டுக்கான ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூ.1600 கோடி என்பதையும், ஆண்டுத்திட்ட ஒதுக்கீட்டைச் செயற்படுத்துவதில் மாநில அரசுக்கு ஏற்பட்ட பற்றாக்குறை மிக அதிக அளவில், அதாவது, ரூ.1220 கோடி அளவிற்கு இருந்தது என்பதையும் உறுப்பினர்கள் நினைவுகூரலாம். அப்போதிருந்தே மாநில அரசின் நிதி ஆதார நிலைமையை மேம்படுத்தப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அரசு நிர்ணய விலைகளை மத்திய அரசு மிக அதிகமாக உயர்த்தியுள்ளதால், மாநில அரசு மேலும் அதிக நிதி இடர்ப்பாடுகளுக்கு உள்ளாகி இருந்தபோதிலும், நடப்பாண்டின் ஆண்டுத் திட்டத்தை எவ்விதக் குறைவுமின்றி நிறைவேற்ற, அனைத்து நிலைகளிலும் முயற்சிகள் மேற்கொண்டதன் பயனாக, அவசியமான நிதி ஆதாரங்களைத் திரட்ட முடிந்துள்ளது. 1991-92-ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூ.1600 கோடி அளவை எய்த முடியும் என்று அரசு நம்பிக்கையுடன் உள்ளது. இதனால், கணிசமான அளவிற்கு நிதி நெருக்கடி ஏற்படும்

என்பதில் ஐயம் இல்லை. மத்திய அரசிடமிருந்து நிதியுதவி கிடைக்குமென இன்னும் எதிர்பார்க்கிறோம். இம்மாநிலத்திற்கு ஏற்பட்ட தனி வகையான இடர்ப்பாடுகளின் காரணமாக, இம்மாநில அரசுக்குத் தேவைப்படக்கூடிய நிதியுதவி குறித்து முதலமைச்சர் அவர்கள் பிரதமர் அவர்களுடனும், மத்திய நிதி அமைச்சர் அவர்களுடனும் மேற்கொண்டும் கலந்துரையாடியுள்ளார்கள். நம் தேவைகளை மத்திய அரசு உணர்ந்து, 1991-92-ஆம் நிதி ஆண்டு முடிவதற்கு முன் நமக்குப் போதிய அளவிற்கு உதவ முன்வரும் என்று நம்புகிறோம்.

30. இதுவரையில், இம்மாநிலத்தின் மேம்பாட்டிற்காக எமது அரசு இனி மேற்கொள்ளவிருக்கின்ற நிலையினைப் பொதுவாகச் சுட்டிக்காட்டுவதாக அமையும் சில கொள்கைகளை உங்கள் கவனத்திற்காக முன் வைத்துள்ளேன். தேசியப் பொருளாதார நிலைமை, தொடர்ந்துவரும் பணவீக்கப்போக்கு, நம்முடைய மாநிலத்தில் போராளிகளையும், தீவிரவாதிகளையும் ஒடுக்குவதில் நாம் எதிர்கொள்ள வேண்டி இருந்த கட்டாயங்கள், கருநாடக மாநிலத்தில் வாழும் தமிழ் மக்கள் அடைந்துள்ள இன்னல்கள், சோதனைகள் ஆகியவை நமக்கு மிக இக்கட்டான நிலையை உருவாக்கியுள்ளன. சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கவும், இன ஒற்றுமையையும் அமைதியையும் காக்கவும், இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இந்த வகையில் அனைத்து முனைகளிலும் இவ்வரசு வெற்றிகண்டு வருகிறது என்றே கூறலாம்.

31. பொருளாதார நிலையில், மாநிலத்தின் மேம்பாட்டு நலனுக்காகத் தெரிந்தே கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலையில் அரசு உள்ளது. நாம் எடுக்கக்கூடிய பொருளாதார அல்லது நிதி நிலை குறித்த முடிவுகள், ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் மீது தற்போதுள்ள சுமையை அதிகரிக்காமல் இருக்க வேண்டுமென்பதை நாம் உணர்ந்துள்ளோம். மத்திய அரசு பொருளாதார வகையில், பற்றாக்குறையை ஈடுசெய்யும் நடவடிக்கையை எடுக்கலாம் என்றும், ஆனால், அது ஏழை மக்களைப் பாதிக்கும் வகையில் இருக்கக்கூடாது என்றும் அரசு மீண்டும் மீண்டும் தொடர்ந்து வலியுறுத்தும். காவிரி நீர்ப்பிரச்சினையைப் பொறுத்தமட்டில், காவிரி நீர் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும், கருநாடக மாநிலத்தில் தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாக்க மத்திய அரசு சிறப்பான முறையில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தொடர்ந்து மத்திய அரசை இவ்வரசு வலியுறுத்தும். அமைதியான சூழ்நிலையில் மாநிலம் அனைத்து வழிகளிலும் மேம்பாடு அடைய எமது அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

32. அரசு பல முனைகளிலும் எடுத்துள்ள நடவடிக்கைகளை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். தமிழகத்தில் ஏழை, எளியவர்கள் மற்றும் வசதி வாய்ப்பு அற்றவர்கள் ஆகியோரின் வளமான வாழ்விற்கு உறுதி செய்யவும், விரைவான வளர்ச்சிக்கு வகை செய்யவும் அரசு தன் கொள்கைகளையும் திட்டப்பணிகளையும் முறையாகத் திட்டமிட்டுச் செயல்படுத்த இயலும் வகையில், இம்மாமன்றத்தில் உறுப்பினர்களின் விவாதங்கள் அமையும் என்று நம்புகிறேன். உங்கள் கருத்துக்கள் ஆக்கப்பூர்வமானவையாகவும், பொருள் பொதிந்தவையாகவும் அமையும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

நன்றி, வணக்கம்.

## தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு: மானியம் வழங்கக் குழு அமைப்பு

குறைந்த செலவில் தரமான தமிழ்த் திரைப் படங்களைத் தயாரித்து வெளியிடும் தயாரிப் பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டு தோறும் அத்தகைய படங்களைத் தேர்வு செய்து அரசு மானியம் வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 1991-ஆம் ஆண்டுக் கான தேர்வுகளைச் செய்வதற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டு உள்ளார். அதன்படி 1991-ஆம் ஆண்டுக் கான குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களைத் தேர்வு செய்து அரசுக்குப் பரிந்துரைப்பதற்கு மாண்பு மிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள் தலைமையில் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட தேர்வுக் குழுவை அரசு அமைத்து உள்ளது.

1. திரு. கே. பொன்னுசாமி - தலைவர்
மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர்,
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
சென்னை-9.

2. திரு. ஆர்.எஸ். மனோகர் - உறுப்பினர்

3. திரு. பி.எஸ். வீரப்பா - உறுப்பினர்

4. திரு. கவியரசு நா. காமராசன் - உறுப்பினர்

5. திருமதி சி.கே. கரியாலி, - உறுப்பினர்
செயலாளர், இ.ஆ.ப.,
செய்தி மற்றும் சுற்றுலாத்துறை
சென்னை-9.

6. இணை ஆணையாளர்,
வணிகவரித் துறை,
சென்னை-9. - உறுப்பினர்

7. அரசு துணைச் செயலாளர்,
உள்துறை, சென்னை-9. - உறுப்பினர்

8. முதல்வர்,
தமிழ்நாடு திரைப்படத்
தொலைக்காட்சிப் பயிற்சிக்
கல்லூரி, சென்னை-113. - உறுப்பினர்

இக்குழு 1.1.1991 முதல் 31.12.1991 முடிய வெளிவரும் குறைந்த செலவு தயாரிப் புப் படங்களை ஆய்வுக்கு எடுத்துக்கொள் ளும். தேர்வுக் குழுவினால் பரிந்துரைக்கப் படும் படங்களுக்கு ரூபாய் இரண்டு இலட் சம் அரசு மானியம் வழங்கப்படும்.



சரியான நடவடிக்கைகளையே எடுத்து வந்துள்ள மேதைகளுக்கு இது ஒரு புகழாரம் ஆகும். ஆனால், கடந்து செல்லும் ஒவ்வொரு நாளி லும் உறுதியற்ற எண்ணங்களே வளர்ந்து வருவதால், காஷ்மீர் பிரச் சினையில் ஒரு இறுதி முடிவை மேற்கொள்ள வேண்டும்.

காஷ்மீரில் தீவிரவாதமும், ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகளும் தலைதூக்கி இருக்கிறார்கள். எல் லைக்கு அப்பால் இருந்து தீவிர இராணுவ உதவியுடன் பயிற்சியும், ஆயுதமும் நிதி உதவியும் பெற்ற தீவிரவாதிகள் நாட்டின் ஒரு பகுதியை வசமாக்குவதையும், சர்வதேச அள வில் அதை விளம்பரப்படுத்துவதை யும் எந்த நாடும் பார்த்துக்கொண்டு இருக்காது. தீவிரவாத நடவடிக்கை யுடன் மதச்சார்பான ஊக்கமும் அளிக்கப்படுவதால் பிரச்சினை சிக் கலாகி இருக்கிறது. மத சுதந்திரம் பற்றி செய்யப்படும் தவறான பிரச் சாரம், நாட்டில் பிற மாநிலங்களில் வாழும் மற்ற பல்வேறு சமுதாயத் தினரிடையே குழப்பத்தை ஏற் படுத்தி உள்ளது. என்றாலும் நம் நாட்டு மக்கள் பொய்ப் பிரச்

# "இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கட்டிக் காக்க மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்புத் தருவோம்!"

## புதுடில்லியில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை

'நம் நாட்டின் வரலாற்றில், ஒரு இக்கட்டான சூழ்நிலையில் நாம் இங்கு கூடியிருக்கிறோம். காஷ்மீர் பற்றிய மிக முக்கியமான உணர்ச்சி பூர்வமான பிரச்சினை பற்றி விவாதிப் பதற்காக, அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ததற்காகப் பிரதம ருக்கு நன்றி தெரிவித்துக் கொள் கிறேன்.

காஷ்மீர் பிரச்சினை, நம் நாட் டின் ஒற்றுமைக்கும், ஒருமைப் பாட்டுக்குமான ஒரு முக்கிய பிரச்சி னையாகும். நாட்டின் அடிப்படைக் கொள்கையான மதச்சார்பின்மை மற்றும் மதச் சகிப்புத் தன்மை ஆகிய கொள்கைகளுக்குச் சவாலாக அமைந் திருப்பதால் இந்தப் பிரச்சினை உணர்ச்சிபூர்வமானதும் ஆகும். நம் நாடு சுதந்திரம் பெற்ற நாளில் இருந்தே காஷ்மீர் பிரச்சினை நமது பொறுமையைச் சோதித்து வருகிறது. இந்தப் பிரச்சினையில் இதுவரை

சாரத்தை நம்பாததும், அடிப்படை மத ஒற்றுமை, மதச்சார்பின்மை, சுதந்திரம் ஆகியவை காஷ்மீரில் மட்டுமல்ல நாட்டின் மற்ற எல்லா மாநிலங்களிலும் நிலைத்து நிற்பதும் நமக்கெல்லாம் மிகுந்த ஆறுதல் அளிக்கும் ஒரு விஷயமாகும்.

ஜம்மு-காஷ்மீர் நம் நாட்டுடன்

இணைந்த ஒரு பகுதி. எந்த ஒரு நாடும் இதை மறுக்க முடியாது. இந்த நிலையில் உலக நாடுகளுக்கு நாம் தெளிவுபடுத்த வேண்டிய விவரம் என்னவென்றால், இந்திய நாடு மதத்துக்கு முக்கியத்துவம் அளித்து உருவாக்கப்பட்ட மதச்சார் பற்ற சுதந்திரம் மற்றும் சகிப்புத் தன்மை அடிப்படையில் உருவாக்கப் பட்டது என்பதைத்தான். மதம் மற்றும் இனப் பாகுபாடு காரண மாகக் கடந்த காலத்தில் அதிக அளவில் ரத்தம் சிந்தப்பட்டிருப் பதை நாடு சந்தித்து இருக்கிறது. இந் நிலை தொடர அனுமதிக்கக்கூடாது.

தமிழ்நாடு, கேரளாவைப் போன்று, ஜம்மு-காஷ்மீர் மாநில மும் நமது நாட்டைச் சேர்ந்தது என் பதை அனைத்துத் தரப்பு மக்களும் சாதி-மதப் பேதமின்றி அங்கீகரிக்க வேண்டியது. அல்லது ஒப்புக் கொள்வது இன்றைய நாட்டின் ஒற்றுமைக்கும் - ஒருமைப்பாட்டுக்கும் முக்கியமான ஒன்றாகும். இதை அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டும். காஷ்மீர் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினையாகும். அங்கு தோன்றி உள்ள தீவிரவாத, பயங்கரவாதச் சக்திகளை இதன் அடிப்படையில் தான் நாம் போராடி வெற்றி காண வேண்டும். ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் உள்ள மக் களும் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் உறுதி யாக நம்புகிறேன்.

ஜம்மு-காஷ்மீரில் உள்ள தீவிர வாதிகள் பயங்கர வன்முறையில் ஈடுபட்டதன் மூலம் பொருளாதார நிலை அப்படியே ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மதத்தின் பெயரில் அங்குள்ள மக்களிடையே விஷத்தைப் பரப்பி அங்குள்ள சமுதாய மக்களின் இரக்கக் குணத் தைப் பெற்றுள்ளனர். இப்படிப் பட்ட தீவிரவாதிகள்-பயங்கரவாதிகள் அடியோடு ஒழிக்கப் படவேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது.

இதே போல் வேறு நாட்டி லிருந்து நமது சமுதாயத்தின் அனைத்து மட்டங்களிலும் நுழைந்து, மொழியின் பெயரால் பொது மக்களிடையே குழப்பம் விளை வித்து, பேராசை பிடித்த சில அர சியல்வாதிகளைத் தங்கள் கையில் போட்டுக் கொள்ளும் தீவிரவாதி களின் கசப்பான நடவடிக்கைகளை, தமிழ்நாட்டின் முதல்வர் என்ற முறையில் நான் காண நேர்ந்தது. அப்படிப்பட்ட தீவிரவாதிகளை ஒடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், இங்கு கூடியிருக்கும் தலைவர்களுக் குத் தெரியும் எனக் கருதுகிறேன்.



இந்தியாவில் குழப்பம் ஏற்பட வேண்டும். அதன் மூலம் இந்தியா துண்டுபட வேண்டும் என்று, சில நாடுகள் ஆசைப்படுவதால், அந்த நாடுகளின் ஆதரவு இதுபோன்ற வேரூன்றிய தீவிரவாதிகளுக்கு இருக் கத்தான் செய்யும்.

இப்போது ஏற்பட்டுள்ள இக் கட்டான சூழ்நிலையில் இந்த நேரத் தில், ஒற்றுமைதான் மிகவும் அவ சியம் ஆகும். எங்கள் கட்சியைப் பொறுத்தவரை காஷ்மீர் தீவிரவாதி களை ஒடுக்க மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத் துழைப்பு கொடுக்கும் என்று நான் இங்கு உறுதி அளிக்கிறேன்.

இங்கு மட்டுமல்லாமல் மற்ற எல்லையோரப் பகுதிகளிலும் ஊடு ருவலைத் தடுக்க இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளுக்கும் நாங்கள் முழு ஒத்துழைப்பு தரு வோம் என்று மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நேரத்தில் நமக்குள் ஒற்றுமை இல்லாவிட்டால், சுதந்திரத்துக்காக நமது முன்னோர்கள், தலைவர்கள் செய்த தியாகம் வீணா கிப் போய்விடும். அதேநேரம் பல் வேறு சமயங்கள்-மதங்களில் நம்பிக் கையுள்ளவர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அவை மதிக்கப்படவேண்டும் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

இந்த நாட்டில் உள்ள மக்கள் இந்துக்களாகவோ, சீக்கியர்களா கவோ, முஸ்லீம்களாகவோ, கிறிஸ் துவர்களாகவோ, ஜைனர்களாகவோ, புத்த மதத்தவராகவோ, பார்ஸிய மதத்தவர்களாகவோ அல்லது எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந் தாலும் அவர்கள் அனைவரும் இந்தியர்கள்தான், காஷ்மீரில் முஸ்லீம்கள் அதிகமாக இருந்தாலும் சரி, அல்லது மற்ற மாநிலங்களில் இந்துக்கள் அதிகம் இருந்தாலும் சரி,

● ஒவ்வொரு கடமையும் புனிதமானது. இந்தக் கடமையில் ஆழ்ந்த ஈடுபாடு கொள்வது, கடவுள் வழிபாட்டு முறைகளிலேயே மிக உயர்ந்ததாகும்.

- சுவாமி விவேகானந்தர்

எல்லா மாநிலங்களும் நமது நாட்டைச் சேர்ந்ததுதான் என்பதை யாரும் மறுத்திட முடியாது. காஷ்மீரில் ஒரு பகுதி இந்தியாவில் இல்லை என்ற நிலை உருவானால் அதை இந்தியாவுக்குள் கொண்டு வரவேண்டும்.

காஷ்மீரில் வாழும் முஸ்லீம்கள் இன்னொரு மாநிலத்தில் வாழும் இந்துக்களைப் போலவே உணர்வு பெற்று இருக்க வேண்டும். எல்லா வற்றுக்கும் மேலாக அவர்களுக்கு இந்தியத் திருநாட்டின் உணர்வு இருக்க வேண்டும். இதை உறுதிப் படுத்த தக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தீவிரவாத நடவடிக்கைகள் எந்த முறையில் கட்டுப்படுத்தப்பட வேண்டுமோ அந்த முறையில் அவற்றைக் கட்டுப் படுத்த வேண்டும். அதே நேரத்தில் மக்கள் மனநிலையில் நல்லுணர்வை விரைவில் ஏற்படுத்தவும் முயற்சிகள் எடுக்கப்படவேண்டும். நல்லெண்ணம், நெருங்கிய பிணைப்புகள் மக்கள் மத்தியில் உருவாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

இந்தியாவின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கட்டிக் காக்க மத்திய அரசு மேற்கொள்ளும் முடிவுகளை ஆதரிப்போம் என்பதை அண்ணா தி.மு.க. சார்பாக மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். தீவிரவாத நடவடிக்கைகள் எந்த உருவில் வந்தாலும் அதைத் தீவிரமாகக் கட்டுப்படுத்தும் எந்த நடவடிக்கையும் ஆதரிப்போம். காஷ்மீர் மக்கள் இந்தியக் குடிமக்கள் என்ற நல்லுணர்வை ஏற்படுத்தும் அனைத்து முயற்சிகளையும் ஆதரிப்போம்.

காஷ்மீர் மக்களின் நலன், அமைதி, வளமான வாழ்வு மீது இந்தியத் தலைவர்கள் மற்றும் நமது அனைவரின் உண்மையான எண்ணம் உள்ளது. இதில் காஷ்மீர் மக்களின் உண்மையான நம்பிக்கையைப் பெற்றிட இந்த நெருக்கடியான நேரத்தில் எடுக்கப்படும் எல்லா உறுதியான நடவடிக்கைகளையும் நாங்கள் ஆதரிப்போம்.'

-ஜம்மு-காஷ்மீர் பிரச்சினை **குறித்து மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் புது டில்லியில் கூட்டிய, அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை (10.2.1992)**

# பார்த்தோம், படித்தோம்

***16.1.1992*** இதழில் உழவர் திருநாளைப் பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிய தேன் சொட்டும் சுவையான கட்டுரையைப் படித்துச் சுவைத்தேன்.

'ஏது உண்மை இலக்கியம்'? என்ற தலைப்பில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் கருத்துக்கள் பாதுகாக்க வேண்டிய சொத்துக்கள்.

**காரை. புரட்சிமணி**
**காரையூர்**
**நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்**

'உழைப்போம்! உயர்வோம்! இது பொங்கலுக்காக, எங்களுக்குத் தந்த பிரசாதம்.

**- சு. திருவாசகம், கா. குமார்**
**முகிழ்தகம்**
**இராமநாதபுரம் மாவட்டம்**

ஒக்கூர் என்ற சிற்றூரில், ஒரு முகத்தில் இரு கண்களைப் போல் அமைந்த மாசாத்தியார்-மாசாத்தினார் என்ற இரு சங்கப் புலவர்களால் தமிழுக்குப் புகழளித்த பெருமையைக் கண்டேன். இந்த மாபெரும் 'நினைவுத்தூண்' நீடு புகழ் பெறுக!

**- ப. அருணாசல சண்முகம்**
**களம்பூர்**
**திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்**

கவிஞர் இளந்தேவன் எழுதிய 'புகழ் பாடு தைமகளே!' என்னும் கவிதை மிகவும் அருமையாக இருந்தது.

**- டி. ஆறுமுகம்**
**சந்தைவெளி**
**நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்**

புகழ்பாடு தை மகளே கவிதை நன்றாக இருந்தது.

**- அ. ஆளவந்தார்**
**வீரசோழபுரம்**
**தென்னார்க்காடு மாவட்டம்**

கவிஞர் பட்டுக்கோட்டை இராசேந்திரன் எழுதிய 'பொன்னிக்குப் பொங்கல் வாழ்த்து' என்ற கவிதை மிகவும் அருமை. அக்கால மன்னர்கள் பொன்னிக்குப் புகழளித்த அரும் பெரும் பணியை இக்கவிதை நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

**- சாந்தி-ராஜசேகரன்**
**சைதை-ஆரணி**
**திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்**

'தமிழரசு' இதழ் தமது நூல் நயப் பகுதியில் நூலின் நுண்மாண் நுழைபுலங்களையும், அருமை பெருமைகளையும், ஆற்றல் பெருந்திறன்களையும் நயமுடன் ஆய்ந்து கூறி அறிமுகப்படுத்தினால், கண்ணை மூடிக்கொண்டு வாங்கிப் படிப்போம்! அந்த அளவுக்குத் தரத்தில் உயர்ந்த நூல்களையே சிகரத்தில் ஏற்றுகிறது நூல் நயம்!

**- அரிமா பூபாளம்**
**ப. முருகேசபாண்டியன்**
**கரப்பாடி**
**கோவை மாவட்டம்'**

பொங்கல் இதழ் சர்க்கரை, கற்கண்டு, தேன்பாகு கலந்த பொங்கலாக, தந்தை பெரியாரின் பொன்மொழிகள், பேரறிஞர் அண்ணாவின் எழுத்தோவியம், மொழி ஞாயிறு, ஞா. தேவநேயப்பாவாணர் கட்டுரை எனத் தித்திக்கும் பொங்கல் விருந்தாக அமைந்தது.

**உரந்தை மதி. தமிழரசன்,**
**அருள்மொழி தமிழரசன்**
**நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்**

கவிஞர் பி.வி. கிரியின் உறுதி பிறந்தது! கவிதைப் படைப்பு மிகவும் அருமையாக இருந்தது.

**ப. சிவராமகிருஷ்ணன்**
**விருதுநகர்-2**
**காமராசர் மாவட்டம்**

'உறுதி பிறந்தது!' (கவிதை) படித்து என் உள்ளத்திலும் உறுதி பிறந்தது!

**- த. சுரேஷ்**
**குரும்பேரி**
**வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம்**

'இந்தியப் பொருளாதாரத்தில் கால்நடைகளின் பங்கு' பற்றிய டாக்டர் எஸ். சுப்பையா அவர்களின் கட்டுரை பயனுள்ளதாக இருந்தது.

**- ஜி. ராமநாதன்**
**திண்டுக்கல்**



# சட்டப்பேரவையில் புரட்சித் தலைவரின் திருவுருவப்படத் திறப்பு விழா

**பா**ரத ரத்னா, புரட்சித் தலைவர், மூன்று முறை தமிழக முதல்வராகப் பொறுப்பேற்று அப்பதவிக்குப் பெருமை சேர்த்த மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர். எம்.ஜி.ஆர். அவர்களது திருவுருவப் படத் திறப்பு விழா, 31.1.1992 வெள்ளியன்று சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

அன்று சட்டப்பேரவை முழுவதும் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மண்டபம் முழுவதும் மல்லிகை மணம் வீசியது. தலைமைச் செயலக வாசலிலிருந்து, சட்டமன்ற மண்டப நுழைவு வாயில் வரை வண்ண வண்ண ஜரிகைத் தாள்களால் அலங்காரப் பந்தல் போடப்பட்டு சிறப்பாகக் காட்சி அளித்தது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் நடந்துவரும் பாதை ரோஜா மலர் களால், மலர்ப் பாதையாக அமைந்திருந்தது.

சட்டசபையில் ஏற்கெனவே அமைக்கப் பட்டிருந்த திருவள்ளுவர், அண்ணல் காந்தி அடிகள், பெருந்தலைவர் காமராசர், தந்தை பெரியார், மூதறிஞர் இராஜாஜி, பேரறிஞர் அண்ணா, கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத், டாக்டர் அம்பேத்கர், முத்துராமலிங்கத் தேவர் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்குப் பெரிய ரோஜா மாலைகள் அணிவிக்கப்பட்டிருந்தன.

விழா நடைபெறும் சட்டமன்றப் பேரவைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் காலை 9.55 மணிக்கு வருகை புரிந்தார். சட்ட சபை சார்ஜண்ட் முன்னால் வர, அவரைத் தொடர்ந்து சட்டசபைச் செயலர் திரு. ஞானகிராமன் அவர்கள் வர, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர் களும், மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு. கே. பொன்னுசாமி அவர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களை அணிவகுத்து அழைத்து வந்தனர்.

சட்டப்பேரவைத் தலைவர் இருக்கையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமர்ந்தார். அவருக்கு இடப்புறம் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும், வலது புறம் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்களும் அமர்ந்தனர். சரியாக 10 மணிக்கு விழாத் தொடங்கியது.

'வரலாற்று நாயகர் திருவுருவப் படத்தைத் தங்கத் தலைவரின் அரசியல் வாரிசாகத் தமிழகத் தில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைப்பார்கள்' என சட்டப் பேரவைத் தலைவர் அறிவித்தார். அதைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேசையிலிருந்த பொத்தானை அழுத்த, எதிரே இருந்த எம்.ஜி.ஆரின் திருவுருவப் படத்தின் பட்டுத்திரை விலகியது. அந்தத் திருவுருவப் படத்தை பார்த்து மாண்புமிகு முதல்வர் வணங் கினார். எம்.ஜி.ஆரின் படத்தின் கீழ் 'வரையாது வழங்குவதே வாழ்வின் குறிக்கோள்' என்று எழுதப்பட்டிருந்தது.

விழாவிற்கு வருகை புரிந்தவர்களை மாண்பு மிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ் செழியன் அவர்கள் வரவேற்றார். அவர் பேசிய தாவது:



'யார் யார் இந்த நாட்டுக்குப் பெருமையையும், புகழையும் சேர்த்து, வழிகாட்டியாக இருந்தார்களோ அவர்களுடைய திருஉருவங்கள் இந்த மணி மண்டபத்தில் அணி செய்கின்றன.

புரட்சித் தலைவர் வாழ்ந்து காட்டிய வரலாறு இந்த நாட்டில் வாழவேண்டும் வளர வேண்டும் என்ற நோக்கத்தில் இருப்பவர்களுக்கு எடுத்துக் காட்டாக இருக்கிறது.

புரட்சித் தலைவர் படத்தை இந்த மணி மண்டபத்தில் வைப்பதும், அதைப் புரட்சித் தலைவி திறந்து வைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு இருப்பதும் மிகவும் பொருத்தமானதாகும்.

புரட்சித் தலைவரின் பொற்கால ஆட்சியை மீண்டும் நிலைத்த, நீடித்த, நீதி தருகிற ஆட்சியை அமைத்து புரட்சித் தலைவி நடைமுறைப்படுத்தி வருகிறார். புரட்சித் தலைவர் உழைப்பால் உயர்ந்தவர், உள்ளத்தால் சிறந்தவர். தனது அறிவுத் திறனாலும், ஆற்றல் திறனாலும் எல்லோருடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டு வாழ்ந்தார். படிப்படியாக அவர் வளர்ந்தார், வளர்ந்து கொண்டே இருந்தார். எந்த இடத்திலும் சறுக்கல் ஏற்பட்டது இல்லை.

'நயனொடு நன்றிபுரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு'

என்னும் வள்ளுவர் குறளுக்கு இணங்க இறவாப் புகழை எய்தியவர்.

*1953*-ஆம் ஆண்டு வரை காங்கிரஸ் பேரியக்கத்தில் இருந்த அவர், அண்ணா, பெரியாரின் கோட்பாடுகளை ஏற்றவுடன் 'என்னை அறியாமல் ஒரு கனி என் மடியில் விழுந்தது. அந்தக் கனியின் அருமை கருதி இதயத்தில் வைத்துக் கொண்டேன்' என்று அப்போது அண்ணா கூறினார்.

எதையும் எடை போட்டுப் பார்த்துத்தான் அண்ணா பாராட்டுவார்.




அன்பு காட்டவே பிறந்த இதயம் அவருடையது. வள்ளல்களுக்கெல்லாம் வள்ளல் என்றும், எம்.ஜி.ஆர். கழகத்தின் கண்மணி, குணத்தில் தங்கம், கொதித்தெழுந்தால் சிங்கம் என்றும் அண்ணா பாராட்டினார்.

எம்.ஜி.ஆருக்குப் பொன்மனச் செம்மல் என்ற பட்டத்தைக் கிருபானந்தவாரியார் வழங்கினார். புரட்சித் தலைவர் வழியொட்டி, அவர் தீட்டிய திட்டங்களை நடைமுறைப்படுத்தி, ஏழை, எளிய மக்களின் நல்வாழ்வுக்காகத் தனது நேரத்தையும், உழைப்பையும் பயன்படுத்தி புரட்சித் தலைவி திட்டங்களைத் தீட்டி வருகிறார்.

அவர் புரட்சித் தலைவரின் படத்தைத் திறந்து வைப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும்'.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் தலைமை உரை ஆற்றினார். அவர் பேசியதாவது:

'வரலாற்று நாயகரின் படத்தை அந்தத் தங்கத் தலைவரின் அரசியல் வாரிசாகன புரட்சித் தலைவி திறந்து வைப்பது மிகவும் பொருத்தமேயாகும். இன்றைய தினம் அவர் வழி நடக்கும் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி வருகிறார். அழியாத புகழுக்கும், சிறப்புக்கும் உரியவராகத் திகழ்ந்து வரும் மறைந்த முதல் அமைச்சர் எம்.ஜி.ஆரின் படத்தை அவரது புகழை அழியாது காத்து வரும், தமிழக மக்களின் நிகழ் காலத்துக்கும், எதிர்காலத்துக்கும், எக்காலத்துக்கும் உத்தரவாதமாக நல்லாட்சி செய்து வரும் புரட்சித் தலைவி திறந்து வைத்து இருக்கிறார்.

இறந்தும் இறவாப் புகழைப் பெற்று இருக்கும் புரட்சித் தலைவர் படத்தை அவர் மறைந்து நான்கு ஆண்டுகள் கழித்து, அந்தப் படத்தைத் திறக்கத் தகுதியுடைய தலைவரான புரட்சித் தலைவி திறந்து வைத்து இருக்கிறார். புரட்சித் தலைவரின் படத்தைத் திறந்து வைக்கத் தகுதி படைத்த ஒரே தலைவர் புரட்சித் தலைவிதான்.

இந்தத் தலைவி மட்டும் இல்லை என்றால், *1987*-இல் என்றைக்குப் புரட்சித் தலைவர் உடலை பூமிக்குள் இறக்கினோமோ அன்றைக்கே சகாப்தம் முடிந்து இருக்கும். இந்தத் தலைவி இல்லை என்றால் வரலாறு அன்றே முடிந்து இருக்கும்.

எம்.ஜி.ஆரின் வரலாற்றை மறைந்து விடாமல் அதைக் காப்பாற்றும் தலைவியாகத் திகழும் புரட்சித் தலைவியின் பொற்கரத்தால் சாகாவரம் பெற்ற அந்தத் தலைவரின் புகழ் தமிழ்நாட்டில் என்றைக்கும் நிலைத்து நிற்கும் என்று காட்டுகிற வகையில் புரட்சித் தலைவர் படம் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

புரட்சித் தலைவர் இந்த அவையில் படமாக, பாடமாக இருக்கிறார்'.

- அதைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா

அவர்கள் சிறப்புப் பேருரை ஆற்றினார்:

'மனித குல வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும் தனிப்பெரும் தத்துவமாகத் திகழும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப் படத்தினை வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழகச் சட்டமன்றப் பேரவையில் திறந்து வைப்பதில், மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

மனிதன், பிறந்தான் - வாழ்ந்தான் - மறைந்தான் என்பதுதான் வாழ்க்கை நியதியாக இயற்கை நமக்கு அளித்துள்ளது. ஆனால், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவரோ பிறந்தார் - வாழ்ந்தார், இன்றும் நம் இதயத்தில் வாழ்கிறார். இனி என்றென்றும் வாழப் போகிறார் என்கிற தனி நியதியை உருவாக்கிச் சென்றுள்ளார்.

அவர் வளர்ந்து வந்த பாதை, அனைவருக்கும் பாடமாக அமையத் தக்கதாகும். இளமை முதல் அவர் வாழ்க்கையில் எதிர் கொண்ட இடர்ப்பாடுகள் ஏராளமாகும். அனைத்தையும் அவரது மனோபலத்தினாலும் - ஒப்பற்ற மனிதாபிமான அணுகுமுறையாலும் எளிதில் வென்று எதிர்ப்புகளையும், இடர்ப்பாடுகளையும், சாதனைகளாக்கிச் சரித்திரம் படைத்தவர் புரட்சித் தலைவர்.

செல்வச் சீமான் வீட்டில் ஓர் பிள்ளையாகப் பிறந்து, ஏழாவது வயதிலேயே, ஏதுமற்ற ஓர் நிர்கதியான குடும்பப் பிள்ளையாய் தமிழ்நாட்டிற்கு வந்து, 'எங்கள் வீட்டுப் பிள்ளை'யெனத் தமிழகம் புகழ்ந்த மாமனிதர் நம் புரட்சித் தலைவர். இளம் பருவத்தில் ஒரு குறுகிய காலகட்டத்திற்குள் முழுக்க மாறுபட்ட வறுமைச் சூழ்நிலைக்கு ஆளாகும் நிலை, பொதுவாக எவர்க்கும் ஏற்பட்டிருக்காது. வறுமையின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டு, தான் அனுபவிக்காத வேறுபட்ட வாழ்க்கையை, அதுவும் மாறுபட்ட ஓர் நிலப் பகுதிக்குச் சென்று தொடங்க வேண்டிய அவலத்திற்கு ஆளாக்கப்பட்டவர் நமது புரட்சித் தலைவர்.

சிறுவனாய் இருந்த காலத்தில் வறுமையில் வாடினார். பசியின் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார். அவ்விளமைப் பருவத்திலேயே கூட, மூன்று நாள் தொடர்ந்து பட்டினி கிடந்தும், மானத்தோடு வாழ வேண்டும் என்ற மனோதிடத்தைப் பெற்ற மாமனிதர்தான் புரட்சித் தலைவர். அந்த அனுபவங்களே அவர் மனதில் இரக்கமும், ஈகையும் வளர அடித்தளமாக அமைந்தன. அந்த அடித்தளத்தின் மீது அவரால் உருவாக்கப்பட்டதுதான், இன்று அகிலம் போற்றும் இலவசச் சத்துணவுத் திட்டம்.

கலைத்துறையில் ஈடுபட்டு, அத்துறையின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த வேளையில்தான், அவர் கொலைவெறிக்கு ஆளாகிக் குண்டடிபட்டு, தன் இனிய குரலை இழக்க நேரிட்டது. கலைத்துறையின் கவர்ச்சிக்கு மிக இன்றியமையாத இதனை இழந்த நிலையிலும், அக்குறையே அவரது

★ நமக்கு வழிகாட்டிச் சென்றுள்ள பெரியோர்களின் கருத்தை மனத்தில் கொண்டு ஏற்றத்தாழ்வற்ற, சாதிமத பேதமற்ற சமுதாயத்தை நிறுவ நாம் அனைவரும் சூளுரை மேற்கொள்ளுவோமாக.

— டாக்டர் எம்.ஜி.ஆர்.

நிறை என்ற வகையில் தொடர்ந்து கலைத்துறையில் சாதனைகள் பலவற்றை நிகழ்த்திக் காட்டினார்.

புரட்சித் தலைவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட அரசியல் வாழ்விலும், 72-ஆம் ஆண்டில் மிகப் பெரிய சோதனைக்கு ஆளாக்கப்பட்டார். தான் வளர்த்த இயக்கத்தில் இருந்து, தன்னால் உயர்வு பெற்ற தலைவர்களாலேயே தன்னந்தனியாகத் தூக்கி எறியப்பட்டார். 'அஸ்தமனம்' என்கிற வார்த்தை புரட்சித் தலைவரின் அகராதியில் எப்போதுமே இருந்ததில்லை. தனி ஒருவராகத் தன்னந்தனியராக, தான் வளர்த்த இயக்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட நிகழ்ச்சியே, அவருக்கு அரசியலில் மக்கள் ஆதரவைப் பெற்றுத்தரும், மகத்தான சூழ்நிலையை உருவாக்கித் தந்தது. தனிமரம் ஆகிவிடுவார் என எண்ணிய, அவரது அரசியல் எதிரிகளின் எண்ணத்தில் மண் விழும் அளவிற்கு, இலட்சோப இலட்சம் இரத்தத்தின் இரத்தங்களைத் தன்னோடு இணைத்துக் கொண்டு, புதியதோர் இயக்கம் கண்டார்; தனது அரசியல் எதிரிகளை மக்கள் முன் தோலுரித்துக் காட்டியதோடு, நாடு போற்றும் நல்லாட்சி ஒன்றினைத் தமிழகத்திற்கு, ஒன்றுக்கு மூன்று முறை வழங்கும் உயர்வினையும் பெற்றார்.

இந்த நேரத்தில் தத்துவமேதை சாக்ரடீஸ் அவர்களின் தெளிவான கருத்தான -

Nothing can harm a good man
either in life or after death*

என்பது நினைவிற்கு வருகின்றது.

ஒரு நல்ல மனிதரின் புகழுக்கும் பெருமைக்கும், அவரது வாழ்நாளிலும் அவர் மறைந்த பின்னரும், எந்தச் சக்தியாலும் கேடு விளைவித்திட முடியாது என்பது, இப்போது நடைமுறை உண்மையாகிவிட்டது. இன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கிறதென்றால், அதன் வாரிசாக நான் ஆட்சியில் பொறுப்பேற்றிருக்கிறேனென்றால், அதற்குப் புரட்சித் தலைவரின் புகழும், பெருமையுமே முழு முதற் காரணமாகும். எனவே, ஒரு நல்ல மாமனிதரின் வாரிசான எங்களையும், எந்தக் கேடும், எந்த உருவிலும் நெருங்கிட முடியாது என்று, இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைத்துறையிலும், பொது வாழ்விலும், தனக்கு நேர்ந்த மிகச் சோதனையான இடர்ப்பாடுகளை மீறி, காலத்தை வென்றவர் 1984-இல் மருத்துவமனையில் படுத்த படுக்கையாய் இருந்த

பழங்கள் நிறைந்திருக்கும் மரம் எப்போதும் கனத்தினால் தாழ்ந்து வளைந்திருக்கும். அதுபோல் நாமும் பெருமையை அடைய வேண்டு மானால், எல்லோரிடமும் அடக்கத் தோடும், பணிவோடும் இருக்க வேண்டும்.

—இராமகிருஷ்ணர்

காலக் கட்டத்தில், காலனையும் வென்று சரித்திர நாயகனாய்க் காட்சி அளித்தார். இன்று நம்மைக் காக்கும் காவல் தெய்வமாக நின்று நிலவுகிறார்.

ஊர் ஊராய்ச் சுற்றிச் சுற்றி வலம் வந்து வாக்குச் சேர்க்கும் வள்ளல் இல்லை; இனி வீழ்ந்தது இவரது இயக்கம் எனக் கணிப்புக் கணித்தோர் இதிலும் வீழ்ந்தனர். அன்று அவர் இல்லாத குறையை நிறைவு செய்யும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இவர் இருந்திருந்தால் பெற்றிருக்கும் வெற்றியைப் பெற்று - அவர் அமெரிக்காவிலிருந்து உடல் நலத்தோடு தாயகம் திரும்பியதும், அவர் காலடியில் அவ்வெற்றிச் செய்தியைக் காணிக்கையாக்கும் வாய்ப்புப் பெற்ற எனக்கு, அவர் இல்லாத இந்த அவையில், நாட்டுக்கு நல்ல பாடமாக அமைந்துள்ள, இவரது படத்தைத் திறந்து வைக்கும் வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி, ஆனந்தக் கண்ணீர் உகுக்கும் நிலைமை யில் உங்கள் முன் நிற்கிறேன்.

இப்படிக் கலைத்துறையிலும் - பொது வாழ்க்கை யிலும், தன் சொந்த வாழ்க்கையிலும் சரித்திரச் சாதனைகள் பலவற்றை நிகழ்த்தி - இழப்புகளை யும், இடர்ப்பாடுகளையும், சோதனைகளையும், சாதனையாக்கிக் காட்டிய, ஈகைக் குணம் கொண்ட ஏந்தல், எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள், இச்சட்டமன்றப் பேரவை யிலும், தமிழக ஆட்சியிலும், சாதனைகள் பல வற்றை நிகழ்த்திக் காட்டியுள்ளார்.

11 ஆண்டுகள் முதலமைச்சராய் இப்பேரவை யில் அங்கம் வகித்து, தமிழகத்தை ஆட்சி செய்தார் என்பது மட்டுமல்லாமல், தொடர்ந்து எவ்வித இடைவெளியும் இல்லாது மும்முறை தேர்தல்களில் மக்களால் முதலமைச்சராக ஆக்கப்பட்டு, அனை வராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரே தலைவர், அவர்தான் என்ற சிறப்பையும் - கீர்த்தியையும் பெற்றவர் புரட்சித் தலைவர் ஆவார்.

இச்சட்டமன்றப் பேரவையில் மற்ற எல்லா முதலமைச்சர்களையும்விட, மிக அதிகமான ஆண்டுகள், 1967 முதல் தொடர்ந்து 20 ஆண்டுகள் உறுப்பினராகவும் அங்கம் வகித்து, ஒரு பிரச்சினையில் மிக அதிக நேரம் பேசியவர் என்ற சாதனையினையும் நிகழ்த்தியவர். 1979 பிப்ரவரி 26-ஆம் தேதி தேதி, அவரது அமைச்சரவை யின் மீது கொண்டு வரப்பட்ட, நம்பிக்கை இல் லாத் தீர்மானத்திற்குப் பதில் அளித்துப் பேசிய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், அன்று ஒரே நாளில் தொடர்ந்து 7 மணி நேரம் பேசினார்.

இச்சட்டப்பேரவை வரலாற்றில், நிலைத்திருக் கும் சாதனைகள் பல நிகழ்த்திய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், தமிழக முதல்வராய் நிர்வாகத்திலும் வியக்கத்தகு சாதனைகளை நிகழ்த்தி உள்ளார்.

தனது அரசியல் ஆசான் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் சுட்டிக் காட்டிய, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற நெறியினைத், தன் ஒரே நோக்கமாகக் கொண்டு, ஆட்சி நடத்தினார். தனது ஆட்சியின் மூலம், அதிகபட்ச நன்மைகள், தமிழகத்தில் ஏழை எளிய மக்களுக்குச் சென்று சேர வேண்டும் என்பதி லேயே, கண்ணும் கருத்துமாக இருந்தார்.

அவர்தம் வாழ்நாள் முழுவதும் ஏழைகளின் பாதுகாவலராக வாழ்ந்ததால் தான், தமிழக மக்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும், குடிகொண்டுள்ள ஈடுஇணையற்ற தலைவராக இன்றும் வாழ்கிறார், என்றும் வாழ்வார்.

அந்த வகையில் தமிழக மக்களுக்கு உழைத்து, அவர்களை உயர்த்திய மாமனிதரின் திருவுருவப் படம், மக்கள் பிரதிநிதிகள் கூடும் இந்த மாமன்றத் தில் திறந்து வைக்கப்பெறுவது, மிகப் பொருத்த மானதாகும். அத்திருவுருவப் படத்தைத் திறக்கும் வாய்ப்பை, அவரால் உருவாக்கப்பட்டு, உயர்வு அடைந்து, இன்று அவர் வழி நடக்கும் எனக்குக் கிடைத்திருப்பதை, என் வாழ்க்கையில் கிடைத்த மாபெரும் பேறாகக் கருதி, பெருமை அடை கிறேன்'.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் சந்தன மாலை அணி வித்தார். சட்டசபை நுழைவுவாயிலும், மாண்பு மிகு முதல்வருக்கு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் செங்கோல் வழங்கிய உருவமும் பொருத்தப்பட்ட நினைவுப் பரிசை சட்டப்பேரவைத் தலைவரும், சட்டப்பேரவைத் துணைத் தலைவரும் சேர்ந்து மாண்புமிகு முதல் வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் வழங்கினார்கள்.

மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவரின் திருவுருவப் படத்தை வரைந்த ஓவியர் திரு அல்போன்சுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொன்னாடை போர்த்தி, தனது சொந்தச் செலவில் தங்க மோதிரம் பரிசாக அளித்தார். பின்பு, தேசிய கீதத்துடன், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இவ்விழா இனிது நிறை வுற்றது.

நிகழ்ச்சித் தொகுப்பு:
என். இளங்கோ.

# கணிதமேதை ராமானுஜன் நூல் வெளியீடு

எழுபதாண்டுகளுக்கு முன்பாகக் காலமான, இந்தியக் கணிதமேதை சீனிவாச ராமானுஜனின் வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்று அமெரிக்காவில் வெளியாகியுள்ளது. 'தி மேன் ஹு நியூ இன்பினிட்டி' என்னும் பெயர் கொண்ட இந்தப் புதிய நூலை, ராபர்ட் கணிகெல் என்னும் அமெரிக்கர் எழுதி வெளியிட்டுள்ளார்.

இந்த நூலை எழுதுவதற்குத் தாம் மேற்கொண்ட ஆராய்ச்சிகளிலிருந்து, ராமானுஜனின் வாழ்க்கையைப் பற்றிய புதிய பரிமாணங்களைத் தாம் அறிந்து கொண்டதாகவும், தாமும் பல புதிய விஷயங்களைத் தெரிந்து கொண்டதாகவும் இந்த நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

ராமானுஜன் சென்னையில் ஒரு குமாஸ்தாவாகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, பிரபல பிரிட்டிஷ் கணித மேதை ஜி.எச். ஹார்டிக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினார். அதில் தம்மைத் தாமே அவர் அறிமுகம் செய்து கொண்டு இருந்தார். தாம் கண்டுபிடித்துள்ள பல கணித வாய்பாடுகளையும் விதிமுறைகளையும் பற்றி அக்கடிதத்தில் ராமானுஜன் குறிப்பிட்டிருந்தார். இக்கடிதம் எழுதும்போது ராமானுஜனுக்கு வயது இருபத்தைந்துதான்.

பள்ளிப்படிப்பு மட்டுமே முடித்திருந்த ஒரு நபர், அதுவும் கல்வித் தலங்களாகத் திகழும் மேலை நாடுகளிலிருந்து தொலை தூரத்தில் வாழும் ஒரு நபர் கணிதத்தில் இவ்வளவு அரும்பணி ஆற்றி இருப்பது கண்டு பேராசிரியர் ஹார்டி மிகவும் மகிழ்ந்து போனார். கேம்பிரிட்ஜுக்கு வருமாறும், தம்முடன் பணியாற்றுமாறும் ராமானுஜனுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

அந்த அழைப்பைக் கண்டு ராமானுஜன் பரவசமடைந்தார். ஏனெனில் அதற்கு முன்பு அவர் எத்தனையோ பேராசிரியர்களுக்கு எழுதியும், அவருக்கு ஏமாற்றமே மிஞ்சியிருந்தது. அவர்கள் யாரும் அவரிடம் அக்கறைகூட காட்டவில்லை.

ராமானுஜன் கேம்பிரிட்ஜுக்குச் சென்று பேராசிரியர் ஹார்டியுடன் ஆறு ஆண்டுக்காலம் இணைந்து பணியாற்றினார். இருவரது பின்னணியும் வெவ்வேறாக இருந்தும்கூட, இவர்களது கூட்டுப்பணி மிகவும் வெற்றிகரமாக நடந்தது.

ஆனால், எலும்புருக்கி நோயால் பாதிக்கப்பட்ட ராமானுஜன் தமது 32-வது வயதிலேயே அகால மரணமடைந்தார். தமது குறுகிய வாழ்நாளிலே ராமானுஜன் கடுமையாக உழைத்தார் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட கணித வாய்பாடுகளை அவர் கண்டுபிடித்தார். அவற்றையெல்லாம் பல நோட்டுப் புத்தகங்களிலும் துண்டுத்தாள்களிலும் அவர் குறித்து வைத்திருந்தார்.



மிகவும் ஏழ்மையான குடும்பத்திலே பிறந்தவராதலால், அவர் கடும் நிதி நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டி இருந்தது. தமக்குத் தோன்றும் கணித விதிகளை அவர் முதலில் ஒரு சிலேட்டுப் பலகையில்தான் எழுதிப் பார்ப்பார். உறுதியான முடிவு கிடைத்த பின்னரே அதனை நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்துக் கொள்வார்.

ராமானுஜனின் நோட்டுப் புத்தகங்கள் கேம்பிரிட்ஜில் உள்ள டிரினிட்டி கல்லூரி நூலகத்தில், அரை நூற்றாண்டுக்கும் மேலாகக் கவனிப்பாரற்றுக் கிடந்தன. பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஜார்ஜ் ஆண்ட்ரூஸ் என்னும் அமெரிக்கப் பேராசிரியர் ஒருவர் 1976-ஆம் ஆண்டில் அவற்றைத் தற்செயலாகப் பார்க்க நேர்ந்தது. அவர்தான் அவற்றை வெளியுலகுக்கு அறிமுகப்படுத்தினார்.

ராமானுஜன் தமது கண்டுபிடிப்புகளின் இறுதி முடிவுகளையே நோட்டுப் புத்தகங்களில் குறித்து வைத்திருந்தாரே தவிர, எப்படி அவர் அந்த முடிவுக்கு வந்தார் என்பது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. இந்தக் கணித உண்மைகளைப் புரிந்து கொள்ளும் பணியில், பேராசிரியர் ஆண்ட்ரூசும் இதரக் கணித நிபுணர்களும் கடந்த பல ஆண்டுகளாக ஈடுபட்டு வந்தனர்.

சாதாரண சிலேட்டுப் பலகையில் ராமானுஜன் கணக்குப்போட்டு பார்த்து உருவாக்கிய கணித விதிகளைப் புரிந்து கொள்ள, அவர்கள் நுட்பமான கம்ப்யூட்டர்களைப் பயன்படுத்த வேண்டி இருந்தது. இப்போதுதான் அந்த விதிகள் மற்றும் வாய்பாடுகளின் சிறப்பு அவர்களுக்குப் புலனாகத் துவங்கியுள்ளது.

"கடைசியில், இராமானுஜனின் சிந்தனைச் செறிவைக் கணித நிபுணர்கள் புரிந்து கொள்ளத் துவங்கியுள்ளனர்" என்று அறிவியல் எழுத்தாளர் ஒருவர் அதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

பள்ளிக்கூடப் படிப்பு இருக்கும் வரையில் மாணவன், அது முடிந்து விட்ட பின் மாணவன் அல்லன் என்று எண்ணுவது சரியன்று. நாற்பது ஆண்டுகளுக்கு முன், அதாவது நான் பள்ளிக்கூடப் படிப்பை நிறுத்திய பின்னரே, மாணவன் என்ற வாசற்படியில் ஏற ஆரம்பித்தேன்.

—அண்ணல் காந்தியடிகள்





# பெரியார் மாவட்டத்தில் சமுதாய நலப்பணிகள்

### மாவட்ட ஊரக வளர்ச்சி

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு 1991-92-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடாக 7,870 நபர்களுக்கு ரூ.245.945 இலட்சம் பெறப்பட்டு உள்ளது. பயன்தாரார்கள் தேர்வு 20 ஊராட்சி ஒன்றியங்களிலும் நடத்தப் பட்டு, தகுதியுள்ள பயன்தாரார்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். வங்கிகளில் கடன் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இதுவரை 7,141 பயனாளிகளுக்கு ரூ.156.77 இலட்சம் மானியம் வழங்கப் பட்டுள்ளது. இதில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் 2,958 நபர் களுக்கும் மானியத்துடன் கூடிய கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

**ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்**

தொகுப்பு வீடுகள் 1950-இல் 384 கட்டி முடிக்கப்பட்டது. நாளது வரை தொகுப்பு வீடுகளுக்கு ரூ.221.46 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டு சமூகக் காடுகள் திட்டத்தில் 10.00 இலட்சம் செடிகள் உருவாக்கப்பட்டு, 450 எக்டரில் நடவு மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப் பட்டதில் நாளது வரை 420 எக்டரில் 850 இலட்சம் செடிகள் நடப்பட்டது. இத்திட்டத்திற்கு அரசு ரூ.28.10 இலட் சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 17.70 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சமூகக் காடுகள் திட்டத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் குறைந்தது 3 ஊராட்சி களில் நடவுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

4 இலட்சம் பனை விதைகள் சுமார் 211 எக்டரில் நடும் பணி முடிவுற்றது. நாளது வரை 500.40 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 19.126 மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்:** 1991-92-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 106 பள்ளிக் கட்டடங்கள் ரூ.146.550 இலட்சம் செலவிலும், 92 புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் ரூ.64.653 இலட்சம் செலவிலும், 48 தொலைக்காட்சிப் பெட்டிகள் ரூ.7.200 இலட்சம் செலவிலும், 404 ஊரகக் குடிநீர்க் குழாய்கள் ரூ.135.670 இலட் சம் செலவிலும், 3,500 தெரு விளக்குகள் ரூ.70 இலட்சம் செலவிலும், 60 சாலைப் பராமரிப்புப் பணிகள் ரூ.180 இலட்சம் செலவிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**சாண எரிவாயுத் திட்டம்:** சாண எரிவாயுத் திட்டத்தில் 1991- 92-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 1,100 நிர்ணயம் செய்யப்பட்டது. இது வரையில் 709 கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.

**மாபெரும் திட்டம்:** இத்திட்டத்தில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூ.12.71 இலட்சம் மானியமாக 337 பயன்தாரார்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் தாழ்த்தப்பட்டோர் 24 பயன் தாரார்கள். அவர்களுக்கு மானியம் ரூ.0.60 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**புதிய குடும்ப அட்டைகள்:** நவம்பர் 1991-இல் குடும்ப அட்டை அல்லாத 1,583 குடும்பங்களுக்கும், டிசம்பர் 1991-இல் குடும்ப அட்டை அல்லாத 2,055 குடும்பங்களுக்கும், புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. நவம்பரில் 1991-இல் 2,959 போலி குடும்ப அட்டைகளும், டிசம்பர் 1991 மாதத்தில் 2,596 போலி குடும்ப அட்டைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பெரியார் மாவட்டத்தில் 5,101 போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக் கப்பட்டு, ரத்து செய்யப்பட்டுள்ளன.

### சமூக நலத்துறை

**டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண ஊக்குவிப்புத் திட்டம்:** இத் திட்டத்தின்கீழ் 1991-92-ஆம் ஆண்டிற்கு ரூ.35 ஆயிரம் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. உரிய பயன்தாரார்கள் பெரியார் மாவட்டச் சமூக நல அலு வலருக்கு விண்ணப்பித்துப் பயன்பெறக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஆதரவற்ற பெண்கள் நிதியுதவித் திட்டம்:** ஆதரவற்ற பெண்கள் நிதியுதவித் திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் ஆண் டில் 3 நபர்கள் பயன்பெற ரூ.3,000 கூடுதல் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் பெரியார் மாவட்டச் சமூக நல அலுவலருக்கு நேரிடையாக விண்ணப்பித்துப் பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### வேளாண்மைத் துறை

**அரசு விதைப் பண்ணைகளை மேம் படுத்த ரூ.8 இலட்சம்:** பவானியில் உள்ள அரசு விதைப் பண்ணையில் ரூ.2.5 இலட்சம் செலவில் 4 இடங்களில் புது ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப் படவுள்ளன. சத்தியமங்கலத்தில் உள்ள அரசு விதைப் பண்ணையில் ரூ.3 இலட்சம் செலவில் மத்திய விதை சேமிப் புக் கிடங்கு ஒன்றும் அமைக்கப்படுகிறது. இப்பண்ணையில் ரூ.50 ஆயிரம் செல வில் 2 கிணறுகளை ஆழப்படுத்தவும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. பவானி சாகரில் உள்ள அரசு விதைப் பண்ணை யில் சிமெண்ட் கால்வாய்கள் அமைக்க ரூ.2 இலட்சம் செலவிடப்படும். இப் பணிகள் அனைத்தும் இன்னும் ஓரிரு மாதங்களில் முடிக்கப்படும்.

நெல், சோளம், கம்பு, ராகி, மக்காச் சோளம் ஆகியவற்றில் உள்ள புதிய ரகங்களை விவசாயிகளிடையே பிரபலப் படுத்த ரூ.1.26 இலட்சம் மதிப்புள்ள 13,906 மினிகிட் பைகள் அரசு வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. ரூ.22 மதிப்புள்ள தலா 4 கிலோ எடை கொண்ட நெல் விதைப் பைகள் ஒவ்வொன்றும் சலுகை விலையாக ரூ.3-க்கும், சுமார் 2 கிலோ வரை எடை கொண்டதும், ரூ.4 முதல் 10 வரை மதிப்பு கொண்டதுமான

**ரா. கண்ணன். இ.ஆ.ப.,**
**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**பெரியார் மாவட்டம்.**



சிறுதானிய விதைப் பைகள் ஒவ்வொன்றும் ரூ.1 வீதமும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை**

**கல்வி உதவித் தொகை - பிற்பட்ட வகுப்பினர்:** பிற்பட்ட வகுப்பினர்களுக்குப் பிரிமெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் ரூ.1,52,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.66,246 செலவு செய்யப்பட்டு இதனால் 2,851 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர். போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத்திட்டத்தின்கீழ் ரூ.15,08,000 ஒதுக்கீட்டில் ரூ.10,56;486 செலவு செய்யப்பட்டு 4,509 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள். இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் ரூ.7,47,000 ஒதுக்கீட்டில் ரூ.7,97,226 செலவு செய்யப்பட்டு, 1,021 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள்.

**மிகவும் பிற்படுத்தப்பட்டோர்:** பிரிமெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் ரூ.2,67,491 செலவு செய்யப்படடு. 5,795 நபர்களும், இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் ரூ. 8,00,000 ஒதுக்கீட்டில், ரூ.7,09,604 செலவு செய்யப்பட்டு 2,289 நபர்களும், போஸ்ட்மெட்ரிக் திட்டத்தின் கீழ் ரூ.5,80,000 ஒதுக்கீட்டில் ரூ.4,27,016 செலவு செய்யப்பட்டு, 791 நபர்களும் பயனடைந்துள்ளனர்.

## மாவட்டத் தொழில் மையம்

படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு இந்தியப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1990-91-ஆம் ஆண்டிற்கான 400 நபர்களுக்கு எதிராக டிசம்பர் 1991 திங்கள் முடிய மொத்தம் 365 நபர்களுக்கு ரூ.72.80 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 400 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. டிசம்பர் 1991 வரை 721 நபர்களுக்கு ரூ.160.35 இலட்சம் கடன் வழங்க வங்கிக்குப் பரிந்துரை செய்யப்பட்டு உள்ளது. இதில் 150 நபர்களுக்கு ரூ.34.28 இலட்சம் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மற்றும் 70 நபர்களுக்கு 15.65 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டது.

## பட்டு வளர்ப்புத் துறை

**பட்டுக் கூடு உற்பத்தி:** 1990-91-ஆம் ஆண்டில் 3.50 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டன. நடப்பாண்டில் 4 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்ய திட்டமிடப் பட்டுள்ளது. 1991 வரை 268990.50 கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளன. இதன் மதிப்பு ரூ.268.990 இலட்சம் ஆகும்.

நடப்பாண்டில் 600 ஏக்கர்கள் அளவில் மல்பரி பயிர் இறைவைச் சாகுபடியின் கீழ் கொண்டுவர இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. டிசம்பர் 1991 வரை 601.00 ஏக்கர்களில் மல்பரி இறைவையின்கீழ் சாகுபடி செய்யப் பட்டுள்ளது.

நடப்பாண்டிற்கு 180 பயன்தாரர்களுக்கு மல்பரி பயிர்க் கடனும், 360 பயன்தாரர்களுக்குப் பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்களுக்கான கடனும், 200 பயன்தாரர்களுக்குப் புழு வளர்ப்பு மனை அமைப்பதற்கான கடனும், புதிய கிணறு அமைக்க 12 பேருக்கும், கிணறு ஆழப் படுத்த 8 பேருக்கும், கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பட்டு வளர்ச்சிப் பயிற்சிக்கென நடப்பாண்டிற்கு 200 பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ரூ.60 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. டிசம்பர் 1991 வரை 200 பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சி நடைபெற்று பயிற்சி அளிக்கப்பட்டுவிட்டது. பயிற்சி பெற்ற விவசாயிகளுக்கு டிசம்பர் 1991 வரை ரூ.30 ஆயிரம் உதவித் தொகையாக வழங்கப் பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டிற்கு 15 பட்டு நூற்பகங்கள் அமைக்கக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## குடும்ப நலத்துறை

கடந்த ஆண்டு டிசம்பரில், 1,249 தகுதி வாய்ந்த தம்பதியர்கள் குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு பயனடைந்துள்ளனர். நடப்பாண்டில் டிசம்பர் 1991 வரை 10,670 தகுதி வாய்ந்த தம்பதியர்கள் குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளனர். இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள குறியீடான 15,000-இல் இது 71.1 சதவிகிதச் சாதனையாகும்.

இம்மாவட்டத்தில் 66 ஆரம்பச் சுகாதார நிலையங்கள், 8 அரசு மருத்துவ மனைகள், 64 தனியார் மருத்துவ மனைகள், 2 தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் குடும்ப நலத் திட்டம் செம்மையாக அமல்படுத்தப்பட்டு வருகிறது.

# பனிமலரைச் சூடுதற்குக் கட்டணமா?

## புலவர் தமிழ்ப்பித்தன்





அன்பிருக்கும்; அருளிருக்கும்; அமைதி கொஞ்சும்
    அழகிருக்கும்; எவரிடத்தும் இனிதாய்ப் பேசும்
பண்பிருக்கும்; பரிவிருக்கும்; பாசம் பொங்கப்
    பழகுகின்ற இயல்பிருக்கும்; கல்வி கற்ற
தென்பிருக்கும்; தெளிவிருக்கும்; இளமை பொங்கும்
    திறமிருக்கும்; தரமிருக்கும்; என்றா லுந்தான்
கன்னிமயில் புழுங்குகின்றாள் மணத்தை எண்ணி!
    கனவுலகில் மிதக்கின்றாள் நித்த நித்தம்.

வரனுக்குத் தட்சணைகள் வழங்கு தற்கே
    வகையில்லை அவள்வீட்டில்; அதனால் அன்னாள்
இரவெல்லாம் கண்ணீரை அருவி யாக்கி
    இதயத்தை உலைக்களமாய் விரைவில் மாற்றி
உரமில்லா வயல்போலும் செழிப்பே இன்றி
    உணவில்லாச் சிறுகுழவி போலே நொந்து
உறவெல்லாம் பகையென்றே எண்ணிச் சோர்ந்து
    உருகுகிறாள்; அவள்துன்பம் இமயம் ஆகும்!

ஏழையராய்ப் பிறந்ததவள் தவறோ? கொஞ்சும்
    இளமையிலே நீந்துவதும் தவறோ? மின்னும்
மாழையைப்போல் நற்குணங்கள் பெற்ற தெல்லாம்
    மங்கையவள் செய்ததொரு தவறோ? துன்பப்
பீழையிலே நெளிவதுவும் தவறோ? நித்தம்
    பெருமூச்சை உதிர்ப்பதுவும் தவறோ? நாட்டில்
கோழைமனம் கொண்டிருக்கும் ஆண்கள் கூட்டம்
    குவிந்ததுதான் மாப்பெரிய தவறே ஆகும்!

இனிக்கின்ற சர்க்கரையை, பாகை உண்ண
    இவ்வுலகம் வரிவிதித்தல் நியாயம் ஆமோ?
பனிமலரைச் சூடுதற்கே கட்ட ணங்கள்
    விதிப்பதுதான் எவ்வாறு நேர்மை ஆகும்?
கனிபோன்ற கன்னிகையை மணமே செய்யக்
    காசுபணம் கேட்பதுதான் குற்றம் அன்றோ?
இனிமேலும் இளைஞர்களே உறுதி கொள்வீர்
    ''இழிவான வரதட்சணை கேளோம்'' என்றே!





# பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவது எப்படி?

**செய்யக்கூடியவை:**

பூச்சி மருந்து கொள்கலனுடன் இணைக்கப் பட்டுள்ள குறிப்பேடுகளை உபயோகிக்குமுன் கவனமாகப் படிக்க வேண்டும்.

மருந்து தெளிப்போர் முகத்தை முறைத்தும், கண்ணாடி அணிந்தும் மருந்து தெளிக்க வேண்டும்.

ஒரு வேளை பூச்சி மருந்துடன் பூஞ்சாணக் கொல்லி சேர்த்து தெளிக்க வேண்டியிருந்தால் அதனுடன் இணக்கமான பூஞ்சாண மருந்துகளைத் தான் கலந்து தெளிக்க வேண்டும்.

அதிகாலை வேலைகளிலும், மாலை வேளை களிலும் மட்டும் பூச்சி மருந்து தெளிக்கவோ, தூவவோ செய்ய வேண்டும்.

தெளிப்பானுக்குத் தக்கவாறு மருந்துக் கரை சலைத் தயார் செய்துகொள்ள வேண்டும்.

மருந்தடிக்கும் முன்பும், பின்பும் தெளிப்பான் களை நன்கு கழுவ வேண்டும்.

மருந்து தெளித்த பின் கை, கால்களைச் சோப்புப்போட்டு நன்கு கழுவிய பிறகு மற்ற வேலைகளைச் செய்ய வேண்டும். கையுறைகள், பாதுகாப்பு உடைகள் போன்றவற்றையும் நன்கு கழுவி உலர்த்த வேண்டும்.

மருந்தடித்த வயலில் தெளிக்கப்பட்ட மருந்து, தேதி மற்றும் பூச்சிக்கொல்லிகளின் அளவுகளைக் கையேடுகளில் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

பூச்சி மருந்தடிப்போர் அடிக்கடி தங்கள் உடல் நிலையை மருத்துவரிடம் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

திரவ மருந்துகளையும், திட மருந்துகளையும் தனித்தனியே சேமிக்க வேண்டும்.

பூச்சிக்கொல்லி மருந்துகளை, குளிர்ந்த உலர்ந்த நல்ல காற்றோட்டமுள்ள இடங்களிலுள்ள சேமிப்புக் கிடங்கில்தான் சேமிக்க வேண்டும்.

பூச்சிக்கொல்லிகள் மிகவும் விலையுயர்ந்த பொருள். அவைகளைப் பரிந்துரை செய்யப்பட்ட அளவுகளில், தேவை ஏற்பட்டால் மட்டுமே உபயோகிக்க வேண்டும்.

**செய்யக்கூடாதவை**

பூச்சி மருந்துகளை வீட்டில் உபயோகிக்கும் மருந்துகள், உணவுப் பண்டங்களின் அருகில் வைக்கக்கூடாது. குழந்தைகள் கைக்கு எட்டாத வாறு வைக்கவேண்டும்.

பூச்சி மருந்தை நீரினில் இட்டுக்கலக்கும்பொழுது கைகளை இட்டுக் கலக்கக்கூடாது. வயதில் சிறிய வர்களைப் பூச்சி மருந்து தெளிக்கப்பயன்படுத்தக் கூடாது.

காற்றடிக்கும் திசைக்கு எதிராகப் பூச்சி மருந்து தெளிக்கவோ, தூவவோ கூடாது.

பூச்சி மருந்து தெளிக்கும்பொழுது உண்ணுதல், புகைபிடித்தல், வெற்றிலை பாக்கு போடுதல் கூடாது.

ஒன்றுக்கு மேற்பட்ட பூச்சி மருந்துகளைக் கலந்து தெளிக்கக்கூடாது.

குழல் மூலம் பூச்சி மருந்தை உறிஞ்சக் கூடாது.

தெளிப்பான் அடைபட்டிருந்தால் நாஸிலை வாயினால் ஊதக்கூடாது.

மருந்தடிக்கப்பட்ட வயலுக்கு அருகில் ஆடு, மாடுகளை மேயவிடக்கூடாது. மருந்தடிக்கப்பட்ட காய்கறிச் செடி அல்லது பழ மரங்களிலிருந்து குறைந்தது பதினைந்து நாட்களுக்குக் காய் அல்லது பழங்களைப் பறிக்கக்கூடாது.

பூச்சி மருந்து தெளித்த பின் டப்பாக்களைப் பயன்படுத்தக்கூடாது.

எஞ்சிய பூச்சி மருந்துக் கரைசலை ஒருபோதும் சேமித்து வைக்கக்கூடாது.

நீர் நிலைகள், குடிநீர்ப் பகுதிகள், கழிவு நீர், வாய்க்கால், நீர்ப்பாசன வாய்க்கால் போன்றவற் றின் அருகில் மருந்துக் குப்பிகளை ஏறியவோ, புதைக்கவோ கூடாது.

காலக்கெடு முடிந்த பூச்சி மருந்துகளைப் பயன் படுத்தக்கூடாது.

புழங்கும் இடங்களிலும், சேமிப்பு அறை களிலும் பூச்சி மருந்து கொட்டி விட்டால் திரவ மருந்தாக இருந்தால் உறிஞ்சக்கூடிய ரம்பத் தூளைத் தூவி திட வடிவமாக்கி அப்புறப்படுத்த வேண்டும். இவற்றை அடையாளமிட்ட பாத்திரத் தில் சேகரித்து சுண்ணாம்பு கலந்து நச்சு முறிவு செய்யவேண்டும்.

தொடர்ந்து ஒரே ஆள், பூச்சி மருந்து தெளிக்கக்கூடாது.

பூச்சி மருந்து தெளிப்போர் தொடர்ந்து ஒரே ஆடையை அணியக்கூடாது.

**- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் தகவல் பணி மையம்.**

# நூல் நயம்

## நீரிழிவுக்குச் சித்த மருந்துகள்

**ஆசிரியர்:**

டாக்டர் பொ.இரா. இராமசர்மி எம்.டி.

**வெளியிட்டோர்:**

அலைகள் வெளியீட்டகம்
36, தெற்கு சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-24

பக்கம்:188 விலை:ரூ.20/-

**நீ**ரிழிவு பற்றியும் அதற்குரிய நிவாரண முறைகள் பற்றியும் டாக்டர் பொ.இரா. இராமசாமி எழுதிய இந்த நூல் மருத்துவ அடிப்படையில் மட்டுமல்லாமல், இலக்கியம், வரலாறு, சோதிடம், ஆன்மீகம், யோகம் ஆகிய அடிப்படைகளிலும் நீரிழிவை ஆய்கிறது. மேலும் சித்த மருந்துகள் மட்டுமன்றி, ஆயுள்வேத மருந்துகளையும் அறிமுகம் செய்கிறது. நீரிழிவைப் பற்றிய அரிய நூல் இந்த நூல் எனலாம். ஒவ்வொரு நோய் பற்றியும் இப்படி நூல் வருமானால், அது மருத்துவர்க்கும், மாணவர்க்கும் மட்டுமன்றி மற்றவர்க்கும் மாபெரும் பயனளிக்கும்.

—இரா. முத்துராமலிங்கம்

## மூன்றாம் இரவு முனை

**ஆசிரியர்கள்:**

நித்யாமூர்த்தி,
ஆருத்ரா பாலன்

**வெளியீடு:**

பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி
மயிலாப்பூர், சென்னை-600 004.

பக்கம்:212 விலை:ரூ.21/-

**தி**ருமதி நித்யா மூர்த்தி எழுதிய மூன்றாம் இரவு நாவலும், திரு. ஆருத்ரா பாலன் எழுதிய மூன்றாம் முனை என்ற நாவலும் இணைந்த ஒரே நூல் இது.

ஆதரவற்ற பெண்ணான சித்ரா வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டு, எதிர்ப்படும் சோதனைகளை வென்று இறுதியில் வெற்றிவாகை சூடுவதை விறுவிறுப்புடன் சொல்லும் நாவல் மூன்றாம் இரவு.

மூன்றாம் முனை நாவலின் நாயகி சீதாவோ இராமாயண நாயகியின் பெயரைப் பெயரளவுக்குக் கொண்டிருப்பினும், கணவன் செய்த அநியாயத்திற்குத் துணை போகாமல், அஞ்சி நடுங்கிப் பணிந்து போகாமல், தலைநிமிர்ந்து எதிர்த்துப் போராடி வென்று தன் தனித்தன்மையைத் தக்க வைத்துக் கொண்ட பாரதி கண்ட புதுமைப்பெண். ஆண் ஆதிக்கத்தைத் தலைகுனிந்து ஏற்றுக் கொண்ட பெண்களின், மத்தியில் சீதா போன்ற பெண்கள் உருவாகத் தூண்டும் புதுமை நாவல்.

—சுகுமார்

## மகிழ்நன் ஆராய்ச்சிக் கட்டுரைகள்

**ஆசிரியர்:** கு.ப. சந்தோஷம்,

**வெளியிட்டோர்:**

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
அஞ்சல் பெட்டி எண் 501,
பார்க் டவுன், சென்னை-600 003.

பக்கம்:101 விலை:ரூ.20/-

**சை**வசித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தயாரிப்பான 'செந்தமிழ்ச் செல்வி' திங்களிதழில் 'மகிழ்நன்' எனும் பெயரில் நூலாசிரியர் எழுதிவந்த அரிய தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தொகுப்பு நூல் இது.

தனக்கென ஒரு தனி நடையை ஏற்படுத்திக் கொண்டுள்ளார் ஆசிரியர்; ஆங்கில மொழிப் புலமையும் மிக்கவராதலின், ஆய்வுக் கட்டுரைகளில் ஆழ்ந்த ஞானம் வெளிப்படுகிறது; 50 ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாவது பதிப்பாக இந்நூல் வெளி வருவது வேதனைக்குரியது.

சொற்சுவை, பொருட்சுவை, நகைச்சுவை மிகுந்த இதுபோன்ற நூற்கள் - மொழி ஆர்வலர்களால் பெரிதும் ஆதரிக்கப்படவேண்டும்.

—'சோழராஜா'

## சிறுவர்க்கான இராமானுசம் எண்கள்

**ஆசிரியர்:** டாக்டர் மெ. மெய்யப்பன்

**வெளியீடு:**

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
(பி) லிமிடெட்
சென்னை-600 098.

பக்கம்:74 விலை:ரூ.8/-

**த**மிழகத்தில் பிறந்து 32 வயதிற்குள் உலகளாவிய புகழையும், பட்டங்களையும், விருதுகளையும் சுமந்து மறைந்த கணிதமேதை இராமானுஜம் பற்றிய வாழ்க்கைக் குறிப்புக்களும், கணிதவியல் பற்றிய எளிய குறிப்புக்களும் கொண்ட நூல். கணிதத்தில் முதன்மை நிலை அடைய விரும்புவோர்க்கு வழிகாட்டியாகத் திகழவல்ல எளிய நூல்.

## வினாக்களும் சுரதாவின் விடைகளும்

**ஆசிரியர்:** உவமைக் கவிஞர் சுரதா

**வெளியீடு:** சுரதா பதிப்பகம்

56-அ, இலட்சுமணசுவாமி சாலை,
கே.கே. நகர்,
சென்னை-600 078.

பக்கம்:176 விலை:ரூ.23/-

**நா**டறிந்த கவிஞர் உவமைக் கவிஞர் சுரதா அவர்கள். அவர் தமது கவிதை வாயிலாகத் தனி முத்திரை பதித்த வித்தகக் கவிஞர். அவரது கவிதை சித்திரக் கவிதை மட்டுமல்ல, விசித்திரக் கவிதை மட்டுமல்ல, பேசும் சித்திரமாக விளங்குவதை நாம் கண்டு வருகிறோம்.

பாவேந்தரின் மாணவருள் மூத்தவரான உவமைக் கவிஞரை உலகுக்குக் காட்ட அவரது நேர்காணல் என்னும் பேட்டிகள் பெரிதும் துணை புரிவன என்பது மட்டுமல்ல, கால காலத்துக்கும் நிற்பவையுமாகும்.

1952 முதல் 1991 முடிய கவிஞரது 50 பேட்டிக் கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

கவிஞரை முதன் முதலில் பேட்டி கண்டவர் நாவலாசிரியர் ஜெகசிற்பியன் பேட்டி வெளிவந்த இதழ் 'சிரஞ்சீவி' (1952). ஒவ்வொரு பேட்டிக் கட்டுரையும் ஒரு காலக் கண்ணாடியாகத் திகழ்கிறது. 'கல்கி'யில் வெளிவந்த 'கவிதை பிறந்த கதை' யாகட்டும், 'தமிழரசு' இதழில் வெளிவந்த மலரும் நினைவுகளாகட்டும் எல்லாமே கவிஞரின் ஆழ்ந்த புலமையை, அபார நினைவாற்றலை வெளிப்படுத்துவனவாக உள்ளன.

பேட்டிக் கட்டுரைகளின் தொகுப்பு நூலாக இது விளங்குவதால், நூலின் தொடக்கத்திலேயே ஒரு அரிய தொகுப்பைத் தந்துள்ளார் கவிஞர். அதுதான், "தமிழ் வித்துவான் தாண்டவராயரின் வினாவிடை முதல் தன்மானக் கவிஞர் சுரதாவின் வினாவிடை வரை (1820-1991)" என்பது. கவிஞரின் சிறப்பு, இதுவரை யாருமே செய்திராத ஒரு செய்தியை சொல்லுவதுதான். அதற்கு எடுத்துக்காட்டுத்தான் மேற்குறிப்பிட்ட தொகுப்பு.

பேட்டி காண்பது என்பது சாதாரண காரியமல்ல. அதைப்போல பேட்டிக்குப் பதில் சொல்வதும் ஒரு கலைதான். அதை இந்த நூலில் பார்க்கிறோம்.

இளைஞர்கள் இளங் கவிஞர்கள், இதழியல் துறையில் ஆர்வம் செலுத்தும் மாணவர்கள் இந்நூலை அவசியம் படிக்க வேண்டும்.

—பி.வி. கிரி

# திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில்

# கதர் கிராமத் தொழில்கள் வளர்ச்சிப் பணிகள்



திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில், அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் மற்றும் தீபாவளிச் சிறப்பு விற்பனைக் காலங்களில், கதருக்கு 35 சதவிகிதம், கதர் பாலியஸ்டர் ரகங்களுக்கு 30 சதவிகிதம், பட்டு உல்லன் ரகங்களுக்கு 20 சதவிகிதம், சிறப்புத் தள்ளுபடியில் கதர் விற்பனை நடைபெற்றதால், இவ்வாண்டு ரூ.60 இலட்சம் மதிப்புள்ள கதர் ரகங்கள் விற்பனை செய்யப்பட்டு, ஆண்டுக் குறியீட்டளவான ரூ.56 இலட்சத்தைத் தாண்டிச் சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் அனைத்து வட்டங்களையும் உள்ளடக்கிய பகுதிகளில் 32 கிராமிய நூற்பு நிலையங்கள் கதர் வாரியத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் 960 மகளிர் தொடர்ந்து வேலை வாய்ப்புப் பெற்று வருகின்றனர். மேலும் உற்பத்தியாகும் நூலினைக் கொண்டு 200 நெசவாளர் குடும்பங்கள் கதர் நெசவு செய்து தொடர்ந்து வேலைவாய்ப்புப் பெறுகின்றனர்.

ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் ஆண்டில் பல்வேறு கிராமியத் தொழில் கைவினைஞர்கள் 77 பேர்களுக்கு ரூ.7.50 இலட்சம் கடனுதவியும், ரூபாய் 1.30 இலட்சம் மானியமும், அளிக்கப்பட்டுள்ளது. ஒரு கைவினைஞருக்கு ரூபாய் 2,500 முதல் ரூ.1,00,000 இலட்சம் வரை தொழிலுக்குத் தகுந்தவாறு கடனுதவி வழங்கப்படுகிறது. இவ்வாரியம் வழங்கும் கடனுதவிக்கு குறைந்த வட்டி விகிதம் 4 சதவிகிதம் ஆகும்.

சாலை ஓரங்களில் காலணி தயாரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் தொழில் செய்யும் ஆதிதிராவிடத் தொழிலாளர்களுக்கு வெயில் மழையிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் ரூ.7,500 மதிப்புள்ள இலவசக் காலணி பணிக்கூடங்கள் வழங்கப்பட்டு, இதன்மூலம் 45 குடும்பங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், கதர் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் உண்ணா எண்ணெய் சோப்புத் தொழில் அலகு, கைமுறைக் காகித அட்டை உற்பத்தி அலகு, காலணி உற்பத்தி அலகு, குரோம் தோல் பதனிடும் அலகு, மண்பாண்ட உற்பத்தி அலகு, போன்றவை செயல்பட்டு வருகின்றன. இவைகளின் மூலம் சுமார் 150 தொழிலாளர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்பு பெற்று பயனடைந்து வருகிறார்கள். இவ்வலகுகளின் மூலம் தொழிற்பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் 79 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பல்வேறு தொழில்களுக்காகப் பதிவு செய்யப்பட்டு ஆங்காங்கே சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் சுமார் 1,000-க்கும் மேற்பட்ட கைவினைஞர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்து பயனடைந்து வருகிறார்கள். இக்கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தமிழ்நாடு கதர் கிராமியத் தொழில் வாரியம், மூலதனக் கடன், முதலீட்டுக் கடன், மற்றும் கைவினைஞர்களுக்குப் பல்வேறு தொழில்களின் நூதனப் பயிற்சிகளும் அளித்து வருகிறது.

# 1990-91-ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகள்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 1990-91-ஆம் ஆண்டுகளில் ஜனவரி முதல் டிசம்பர் வரை வெளியான தமிழ்த் திரைப்படங்களிலிருந்து கீழ்க்கண்ட விருதுகளுக்குச் சிறந்த திரைப்படம், நடிகர், நடிகை, தொழில்நுட்பக் கலைஞர்களைத் தேர்வு செய்ய ஆணையிட்டுள்ளார்.

சிறந்த திரைப்படங்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையாக முதல் மூன்று தமிழ்த் திரைப்படங்களுக்கும், சிறப்புப் பரிசு பெறும் தமிழ்த் திரைப்படத்துக்கும் கடந்த ஆண்டில் வழங்கியதைவிட இவ்வாண்டு தலா ரூபாய் 25,000 (ரூபாய் இருபத்தி ஐயாயிரம் மட்டும்) அதிகரித்து வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். அதுபோல கடந்த ஆண்டுகளில் வழங்கியது போல் அல்லாமல் பரிசு பெறும் சிறந்த நடிகர், நடிகை, தொழில்நுட்பக் கலைஞர்கள் அனைவருக்கும் பாகுபாடின்றித் தலா 5 பவுன் தங்கப்பதக்கம் வழங்க ஆணையிட்டுள்ளார்.

### இவ்வாண்டு வழங்கப்படவுள்ள திரைப்பட விருதுகள் (விவரம்)

#### சிறந்த திரைப்படங்கள்

1. முதல் பரிசு ... ரூ. 1.25 இலட்சம் ரொக்கம் மற்றும் கேடயம்.
2. இரண்டாம் பரிசு ... ரூ.75,000 ரொக்கம் மற்றும் கேடயம்.
3. மூன்றாம் பரிசு ... ரூ.50,000 ரொக்கம் மற்றும் கேடயம்.
4. சிறப்புப் பரிசு ... ரூ.50,000 ரொக்கம் மற்றும் கேடயம்.

#### கலைஞர்களுக்கான பரிசுகள்

1. சிறந்த நடிகர் ... 5 பவுன் தங்கப்பதக்கம்.
2. சிறந்த நடிகை ... ''
3. சிறந்த நடிகர் (சிறப்புப் பரிசு) ... ''
4. சிறந்த நடிகை (சிறப்புப் பரிசு) ... ''
5. சிறந்த இயக்குநர் ... ''
6. சிறந்த கதையாசிரியர் ... ''
7. சிறந்த உரையாடல் ஆசிரியர் ... ''
8. சிறந்த இசையமைப்பாளர் ... ''
9. சிறந்த பாடலாசிரியர் ... ''
10. சிறந்த பின்னணிப் பாடகர் ... ''
11. சிறந்த பின்னணிப்பாடகி ... ''
12. சிறந்த ஒளிப்பதிவாளர் ... ''
13. சிறந்த ஒலிப்பதிவாளர் ... ''
14. சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்) ... ''
15. சிறந்த ஆர்ட் டைரக்டர் ... ''
16. சிறந்த சண்டைப் பயிற்சியாளர் (ஸ்டண்ட் மாஸ்டர்) ... ''
17. சிறந்த நடன ஆசிரியர் ... ''

#### சிறப்பு விருதுகள்

1. இராஜா சாண்டோ விருது ... 5 பவுன் தங்கப்பதக்கம்
2. கலைவாணர் விருது ... ''
3. அறிஞர் அண்ணா விருது ... ''
4. எம்.ஜி.ஆர். விருது ... ''
5. பாவேந்தர் பாரதிதாசன் விருது ... ''

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு திரைப்பட விருதுகளுக்குத் தேர்வுகளைச் செய்து முடிப்பதற்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். பிரதாப்சிங் அவர்களது தலைமையில் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டு ஒரு தேர்வுக்குழுவை அரசு நியமித்துள்ளது.

#### திரைப்பட விருது தேர்வுக்குழு

1. தலைவர் .. நீதிபதி எஸ். பிரதாப்சிங்
2. உறுப்பினர் .. திரு. கே.வி. மகாதேவன்.
3. உறுப்பினர் .. திரு. ஏ.சி. திருலோகசந்தர்
4. உறுப்பினர் .. திரு. வி. இராமமூர்த்தி
5. உறுப்பினர் .. திரு. எம்.என். நம்பியார்
6. உறுப்பினர் .. திரு. ஆர்.கே. இராமச்சந்திரன்
7. உறுப்பினர் .. திருமதி பண்டரிபாய்
8. உறுப்பினர் .. திருமதி. பி. சுசீலா
9. உறுப்பினர் .. கவிஞர் முத்துராமலிங்கம்
10. உறுப்பினர் .. திருமதி மஞ்சுளா ரமேஷ்
11. உறுப்பினர் .. இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை.



• எவனொருவன் தன் அறிவைக் கொண்டே தன்னைக் காத்துக்கொள்ளத் திறன் உடையவனோ, அவனே உண்மையான கல்வியை அடைந்தவனாவான்.

- சுவாமி விவேகானந்தர்

மாணவர் பக்கம்

# முதன் முதலில்

அரசுப் பணிகளுக்காக ராபர்ட் கிளைவ் 1760-இல் தபால் முறையைத் தொடங்கினார். 1837-இல் மக்களுக்கும் இவ்வசதி கிடைத்தது.

1852-இல் சிந்து மாகாணத்தில் முதல் தபால் தலை வெளியிடப்பட்டது. 1911 பிப்ரவரி 18-ஆம் தேதி முதன் முதலில் விமானத்தில் தபால் எடுத்துச் செல்லப்பட்டது.

1851-ஆம் ஆண்டு தந்தி முதன் முதலில் வந்தது. 1867 முதல் நாடு முழுவதும் அது விரிவாக்கப்பட்டது.

முதல் பத்திரிகை 'பெங்கால் கெஜட்'. இது, 1780-இல் கல்கத்தாவில் வெளியிடப்பட்டது. ஜேம்ஸ் ஹிக்கி இந்த இதழை நடத்தினார்.

இந்தியரால் தொடங்கப்பட்ட முதல் பத்திரிகை 1816-இல் வெளிவந்தது. கங்காதர் பட்டாசார்ஜி நடத்திய இதன் விலை அப்போதே ஒரு ரூபாய்.

1822-இல் 'மும்பை சமாசார்' என்ற குஜராத்தி மொழிப் பத்திரிகை வெளிவந்தது. 1832-இல் அது நாளிதழாயிற்று. இன்று 'பம்பாய் சமாசார்' என்ற பெயரில் வரும் நாளிதழின் முன்னோடி அது.

வானொலி 1927-இல் தனிப்பட்டவர்களால் தொடங்கப்பட்டது. அரசு அதனை மேற்கொண்டு 1930 முதல் இந்தியன் பிராட்காஸ்டிங் சர்வீஸ் என்ற பெயரில் நடத்தியது. 'ஆல் இந்தியா ரோடியோ' என்ற பெயர் 1936-இல் ஏற்பட்டது.

தொலைக்காட்சி 1957 செப்டம்பரில் அமைக்கப்பட்டது. அப்போது பள்ளிகளுக்கும், கிராமங்களுக்கும் மட்டுமே அது நிகழ்ச்சிகளை ஒளி பரப்பியது.

1965-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்தான் எல்லோருக்கும் பயன்படும் பொது நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன. மாலையில் மூன்று மணி நேரம் மட்டுமே நிகழ்ச்சிகள் இருந்தன.

பம்பாய்த் தொலைக்காட்சி நிலையம் 1972 அக்டோபர் 2-ஆம் தேதி செயல்படத் தொடங்கியது. 1976-இல் வர்த்தக ஒளிபரப்பு தொடங்கியது.

இந்தியா 1000 சுவையான செய்திகள்' என்னும் நூலிலிருந்து.



## திருக்குறள் இரட்டையர்!

தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம் வடசிறுவளூர் திருவள்ளுவர் மன்றச் சிறப்பு உறுப்பினர்கள் ச. யுவராசன், ச. குமரகுருபரன் இருவரும் சகோதரர்கள். 1,330 அருங்குறளையும் அப்படியே ஒப்புவிக்கிறார்கள். கடந்த மூன்று ஆண்டுகளாகப் பல இலக்கிய அமைப்புகளில் இவர்கள் நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளனர்.

ச. யுவராசன் திருச்சிற்றம்பலம் (வானூர் வட்டம்) காந்தி மேல்நிலைப் பள்ளியில் 11-ஆம் வகுப்பு படிக்கிறார். ச. குமரகுருபரன், கோட்டக் குப்பம் அரசு உயர் பள்ளியில் 9-ஆம் வகுப்பு படிக்கிறார்.

முதலில் இவர்கள் நாள்தோறும் காலையிலும், மாலையிலும் ஐந்து ஐந்து குறள்களாக மனப் பாடம் செய்தனர். பிறகு எல்லாவற்றையும் மனப் பாடம் செய்தனர். அதிகாரத்தைச் சொல்லிக் கேட்டாலும் சரி அல்லது குறள் எண்களைக் கேட்டாலும் சரி. உடனே அதற்குப் பதில் சொல் கிறார்கள்.

## முதல் வகுப்புப் படிக்கும் குழந்தை முதலில் வந்தது

செட்டிநாடு வித்யாஸ்ரமத்தில் முதல் வகுப்பில் பயிலும் குழந்தை அருண் பாலாஜி. வயது ஐந்தரைதான் ஆகிறது. ஆனால் இவன் எல்லோரையும் மூக்கின்மேல் விரலை வைக்கும்படி ஒரு சாதனையே புரிந்துவிட்டான்!

சென்னை அண்ணா நீச்சல் குளத்தில் 5,600 மீட்டர் தூரத்தை (112 லாப்) 3 மணி, 5 நிமிடம், 51.44 விநாடிகளில் நீந்தி முடித்ததுதான் அந்தச் சாதனை!

இந்தச் சிறிய வயதில் இப்படி ஒரு பெரிய சாதனை நிகழ்த்தியிருப்பதை யார்தான் பாராட்டாமல் இருப்பார்கள்!

தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் திரு. ரவீந்திரநாத் இந்தப் போட்டியைத் தொடங்கி வைக்க, தமிழ்நாடு காவல்துறை ஐஜி (குற்றப்பிரிவு) திரு. இ.ஹரிஹரன் இந்த இளம் நீச்சல் வீரருக்குப் பரிசுகள் வழங்கினார்.





சுமார் 1,80,000 பேர் புற்று நோய்க்கு ஆளாகியுள்ளனர். இவர்களில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் அடங்குவர். இந்த ஆண்டில் அந்நோயிலிருந்து அவர்கள் காப்பாற்றப் படுவர் என்ற மகிழ்ச்சியான செய்தியும் நமக்குக் கிடைக்கிறது. இன்னொரு முக்கியமான செய்தி... ஆரம்ப கட்டத்திலேயே இந்நோயைக் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதன் மூலம், மேலும் தொண்ணூறாயிரம் பேரைக் காப்பாற்றலாம் என்பதே அது.

ஓர் எச்சரிக்கை: பெண்களைக் காட்டிலும், ஆண்களையே புற்றுநோய் அதிக அளவில் பீடிக்கிறது.

# புற்றுநோயைக் குணப்படுத்தலாம்!

சுவர் இருந்தால்தானே சித்திரம் எழுத முடியும்?

உடல் என்னும் சுவர் நன்றாக இருந்தால்தான், சித்திரம் என்னும் செயலை நாம் ஒழுங்காகச் செய்ய முடியும்.

அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையில், நம் உடலைக் கவனிக்க மறந்து விடுகிறோம்.

ஆம். எத்தனையோ நோய்கள் நம்மைத் தாக்கி வருகின்றன. சில நம்மையறியாமலேயே நம் உடலில் மறைந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் நாம் கவனிப்பதில்லை; கவனிக்க நேரமும் இருப்பதில்லை. இவற்றுக்கு எல்லாம் இன்னொரு காரணம், நம்முடைய அலட்சியப்போக்குதான்!

மனிதனைப் பிடிக்கும் நோய்களில் புற்றுநோயும் ஒன்று. புற்றுநோய் என்று சொல்லும்போதே, அது ஒரு பயங்கர நோய் என்று அச்சப்படுகிறோம்.

எந்த நோயும் பயங்கர நோய் அல்ல, தொடக்கத்திலேயே கண்டுபிடிக்கப் பட்டால்! புற்றுநோய், தொடக்கத்தில் உடலில் ஒரு சிறு புள்ளியாகத்தான் உருவெடுக்கிறது. உடலில் உள்ள திசுக்கள், இயல்பான வளர்ச்சியடைவதற்குப் பதிலாக, அளவுக்கு மீறி வளர்கின்றன. அதாவது, சிறிய புள்ளி, பெரும் புள்ளியாக உருமாற்றம் பெறத் தொடங்குகிறது.

இதில் ஒரு விந்தை என்னவென்றால், தனது உடல் நலத்துக்கு ஏதோ ஊறு ஏற்பட்டிருப்பதாக ஒருவர் தெரிந்து கொள்ளுவதற்குள்ளாகவே, இது நிகழ்ந்து விடலாம் என்பது தான்! இந்த அசுர வேகத்தை நம்முடைய விவேகத்தால் வெல்ல வேண்டும். எப்படி? அதை விளக்கியது அண்மையில் நடந்த ஒரு அரிய கண்காட்சி!

அடையாறு புற்றுநோய் மருத்துவமனையும், இந்தியப் புற்றுநோய்க் கழகமும் இணைந்து நடத்திய, புற்றுநோய் சிறப்புக் கண்காட்சிதான் அது.

கண்காட்சிக்குள் சென்று அங்கே உள்ள படங்களையும், பாடங்களையும் பார்த்தபோது, பல விவரங்களை, விளக்கங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

ஒரு புள்ளி விவரம், நமக்குப் பள்ளிப் பாடமாய் அறிவுறுத்துவதை ஒரு கையேட்டிலிருந்து அறிகிறோம்.

தற்சமயம் ஒவ்வோராண்டும், ஒவ்வொரு ஆறு புற்றுநோயாளிகளில் இருவர் புற்றுநோயிலிருந்து காக்கப்படுகின்றனர் என்றும், ஆனால் அந்த ஆறு பேர்களில் மூன்று பேரைப் புற்றுநோயிலிருந்து காப்பாற்ற முடியும் என்றும் கூறுகிறது அந்த அறிக்கை.

ஆண்களைப் பொறுத்தவரையில் உண்டாகும் சாதாரணப் புற்றுநோய்கள் எவை தெரியுமா? வாய், அடித்தொண்டையில் ஏற்படும் புற்றுநோய், வயிறு, குடல்கள், ஆசனவாய் ஆகிய ஜீரண மண்டல உறுப்புகளில் உண்டாகும் புற்றுநோய், குரல் வளை, நுரையீரல்கள் ஆகிய சுவாச உறுப்புகளைத் தாக்கும் புற்று நோய், இதுதவிர, உதடுகளில் உறவாடும் புற்று நோயும் உண்டு.

பெண்களுக்கு எந்த வயதிலும் புற்று நோய் வரலாம் என்பதை நாம் கோடிட்டுக் கொள்ள வேண்டும். ஆனால், அவர்கள் முழுமை அடைய அடைய, புற்றுநோயும் அவர்களை அதிக அளவில் பாதிக்கிறது என்பது, மருத்துவர்கள் கூறும் உண்மை. கருப்பை, மார்பகம், வயிறு, குடல்கள், ஆசனவாய் போன்ற ஜீரண மண்டல உறுப்புகளில் மகளிர்க்குப் புற்று நோய் ஏற்படுகிறது.

மார்பகங்களின் மீது தோன்றும் தசை முண்டுகள் பெரும்பாலும் புற்று நோய் காரணமாக ஏற்படுவதில்லை என்பது ஓர் எடுத்துக்காட்டு ஆகும். ஆனால், குறிப்பாக மாதவிடாய்க் காலங்களுக்கிடையில் இரத்தம் வெளிப்படும் போது அல்லது மாதவிடாய் நின்று விட்ட பிறகு இரத்தம் வெளிப்படும்போது மேற்குறிப்பிட்ட அபாய அறிகுறிகளில் ஏதேனும் ஒன்று

தென்பட்டால், அதனைப் புற்று நோய் என்று கொள்ளலாம்.

புற்று நோய் எப்படி ஏற்படுகிறது? இதை எந்த அறிகுறிகளால் நாம் தெரிந்து கொள்ளலாம்?

1. குடல் அல்லது இரைப்பை செயல் படும் முறையில் மாற்றம்.

2. நெடு நாட்களாக இருந்து வரும் ஆறாத புண் அல்லது காயம்.

3. வழக்கத்திற்கு அதிகமாக, உடலில் எந்தப் பாகத்திலிருந்தும் இரத்தம் கசிதல் அல்லது வெளியேறுதல்.

4. மார்பகத்தில் அல்லது உடலின் மற்ற பகுதிகளில் தடிப்பு அல்லது தசை முண்டுகள் காணப்படுதல்.

5. தீராத அஜீரணம் அல்லது உணவு விழுங்குவதில் தொல்லை.

6. சதை வளர்ச்சி, மரு அல்லது மச்சத்தில் வெளிப்படையான மாற்றம்.

7. இடைவிடாத இருமல் அல்லது தொண்டை கரகரப்பு.

இந்த ஏழு அறிகுறிகள் காணப் படுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள் அதனாலேயே, புற்று நோய் வந்து விட்டது என்று பயப்பட வேண்டாம். மேற்கூறிய அறிகுறிகளில் ஒன்று, இரண்டு வாரங்களுக்கு மேல் தொடர்ந்து காணப் பட்டால், உடனே மருத்துவரைப் போய்ப் பார்க்க வேண்டும்.

o சிறுநீரில் இரத்தம் கலந்து வெளிப் பட்டால், உடனடியாக அதைக் கவனிக்க வேண்டும்.

o புற்று நோயின் ஆரம்பக் கட்டத்தில் வலி எதுவும் ஏற்படுவதில்லை.

o எனவே, அபாய அறிகுறிகள் தென்பட்டால், வலி ஏற்படும் வரை காத்திராமல் மருத்துவரின் ஆலோசனை பெறுவதுதான் நல்லது.

o புற்று நோய்ச் சிகிச்சைக்காக வீட்டுச் சிகிச்சை முறைகளையோ அல்லது இரகசிய சிகிச்சை முறைகளையோ கையாள்வது கூடாது.

நுரையீரல் புற்று நோய் தோன்று வதற்கு மூல காரணமே, புகைபிடிப்பது தான் என்பது மருத்துவப் பரிசோதனை களிலிருந்து தெரியவந்துள்ளது.

வாய்ப் புற்று நோயும் பெரும்பாலான வர்களுக்கு வருகிறது. இதற்கு முக்கியக் காரணம், வெற்றிலை பாக்கு புகையிலை போடுவதாகும்.

குடலில் புற்று நோய் ஏற்படக் காரணம் என்ன?

''அதிக அளவு உப்பு, காரம் கொண்ட ஊறுகாய்களைச் சாப்பிடுவதால் குடற் பகுதியில் புற்று நோய் ஏற்படக் கூடுதல் வாய்ப்புள்ள உள்ளன. தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் இது தெரிய வந்துள்ளது. உணவுப் பழக்க வழக்கங் களும் வயிற்றில் புற்று நோய் ஏற்பட முக்கியக் காரணமாக உள்ளது என்றும் தெரியவந்துள்ளது''

அரிசியை அதிக அளவு பயன் படுத்தும் இந்த இரு மாநிலங்களைச் சேர்ந்த ஏழை எளியவர்கள், ஊறுகாய் களையும் அதிக அளவில் பயன்படுத்து வதால், இந்தப் பகுதியில் வயிற்றில் புற்று நோய் உள்ளவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

இந்த உணவுகளுடன் புகைப்பிடித் தல், மது அருந்துதல் ஆகியவை புற்று நோய் ஏற்படுவதை விரைவுபடுத்து கின்றன.

''காய்கறிகள், பழங்கள் ஆகிய வற்றைப் பாதுகாக்கத் தெளிக்கப்படும் பூச்சிக் கொல்லி மருந்துகளும், பொது மக்களுக்குப் புற்று நோய் ஏற்படுத்தக் காரண மாக அமைகின்றன. இவையெல்லாம் புற்று நோய் ஏற்பட பல்வேறு காரணங் களாகக் கூடப்பட்ட போதிலும், இயற்கை யிலேயே புற்று நோய்க்கு ஆளாகக்கூடிய தன்மை ஒருவருக்கு இருந்தால், அவருக்கு மேலே குறிப்பிட்ட எந்தவிதமான பழக்க வழக்கங்களோ இல்லாமல் இருந்தால் கூட, புற்று நோயால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது'' என்று சென்னை அடையாற்றின் உள்ள புற்று நோய் ஆராய்ச்சி நிலையத்தின் துணைத் தலைவர் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

புற்று நோயைக் குணப்படுத்தலாம். அதிவேக விஞ்ஞான வளர்ச்சியில், நவீன சிகிச்சை முறைகளும், சக்தி வாய்ந்த மருந்துகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இக்காலக் கட்டத்தில், நோயின் ஆரம்பத் திலேயே மருத்துவரை அணுகினால், இந்த அபாயத்திலிருந்து நாம் விடு படலாம்.

''உங்கள் மார்பகங்களை எவ்வாறு சோதிப்பது என்பதைக் கற்றுக் கொள் ளுங்கள். அதற்குச் சில நிமிடங்கள் போதுமானது. தவறாது ஒரு முறை அவ் வாறு செய்யுங்கள் அல்லது இந்தியப் புற்று நோய்ச் சங்க சென்னைக் கிளை யில், (127, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-600 001) விளக்கப் படங் களுடன் கூடிய மடிப்புப் பிரதியைக் (Folder) கேட்டுப் பெறுங்கள். அப்பிரதி யின் பெயர், "You are the first to know" ''உங்களுக்குக் கண்டுள்ள புற்று நோயை நீங்கள் தான் முதலில் அறிவீர்கள்'' என்பதாகும். அதனைப் படித்துப் பலர் பயனடைந்துள்ளனர். அதுமட்டுமல்ல, பலரது உயிரும் காப்பாற்றப்பட்டிருக் கிறது''. என்று இச்சங்கக் கையேடு ஒன்று தெரிவிக்கிறது.

—பி.வி.கிரி

## தனி நபர் தொழில் முனைவோர் திட்டம்

இந்து ஆதிதிராவிடர் மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகத் தமிழக அரசு பல்வேறு பொருளாதார முன்னேற்றத் திட்டங்களைச் செயல் படுத்தி வருகின்றது. அதில் 'தனி நபர் தொழில் முனைவோர் திட்டம்' என்ற திட்டம் மிக முக்கியமான திட்டமாகும். இந்தத் திட்டம் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் (தாட்கோ) மூலம் 1989-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின்கீழ் அதிகப்பட்சம் ரூ.5 இலட்சம் வரை தொழில் தொடங் கக் கடன் உதவி வழங்கப்படுகின்றது. அதாவது, ஓர் இந்து ஆதிதிராவிடர் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு தொழில் தொடங்க முன்வருவாரேயானால், அவருக்குத் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மானியமாக ரூ.15,000-மும் விளிம்புத் தொகையாக (Margin Money) ரூ.85,000-மும் வழங்குகிறது.

இந்த விளிம்புத் தொகை மிகக் குறைந்த வட்டி விகிதமாக 4 சதவிகித வட்டியுடன் 10 ஆண்டு காலத்திற்குள் சுலபத் தவணைகளில் வசூலிக்கப் படுகிறது. இந்தச் சலுகையைப் பெற ஒருவருடைய குடும்ப வருமானம் ஆண் டிற்கு ரூ.15,000-க்குள் இருக்க வேண் டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டு இதுவரை பின்பற்றப்பட்டு வந்தது.

இந்த வருமான வரம்பு காரணமாகப் பலர் இத்திட்டத்தின் பயனை அடைய முடியாமல் உள்ளதை நடைமுறையில் அரசு கண்டறிந்து, இந்த நிலையைப் போக்க வேண்டும் என்ற எண்ணத் துடனும் மற்றும் இந்தத் திட்டம் எந்த நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட் டதோ அந்த நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற எண்ணத்துடனும் ஆய்வு செய்து, ரூ. 15,000 என அறிவிக்கப் பட்டுள்ள வருமான வரம்பை முழுவது மாக நீக்கிவிட முடிவுசெய்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட் டுள்ளார். இதனால் பலர் இந்தத் திட்டத்தின்கீழ் பயன்பெறுவர்.

# மகளிர் நலம்பெற...

கிறிஸ்தியான் பேட்டை -

காட்பாடிக்கு வடக்கே 5 கி.மீ. தொலைவில் சித்தூர் செல்லும் சாலையில் அமைந்துள்ள சிற்றூர். சோலை இயக்கம்' கிறிஸ்தியான் பேட்டையில் அமைந்து, தொண்டினால் முனைந்து தாய்க்குலத்தின் தாழ்நிலையை உயர்த்தி வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்துக்கு ஓர் அணிகலனாக விளங்குகிறது.

இந்திய சமூக வாழ்க்கை மேம்பாட்டு இயக்கம் எனப் பொருள்படும். SOCIAL LIFE ANIMATION INDIA (SOLAI) என வழங்கும் இந்நிறுவனத்தை ஏற்படுத்தி, சிறந்த சமூகத் தொண்டராகப் பணி செய்து வருகிறார், 51 வயது இளைஞர் திரு. ஆர்.டி. இராசன்.

இச் 'சோலை' நிறுவனத்தை - இதன் பணிகளை நேரில் சென்று காண்பவர்கள் இதன் செயல்பாடுகளைப் பார்த்து வியந்து நிற்பர்.

இந்திய வரலாற்றில் இதுவரை ஓரங் கட்டப்பட்டு வாழ்க்கைத் தரத்தில் - மனித உரிமைகளில் உரிய இடத்தைப் பெறா திருக்கும் சமூகத் தொகுப்புகளான பெண்கள் - தாழ்த்தப்படும் மக்கள்-கிராமத்து ஏழைகள் ஆகிய பிரிவினரின் மேம்பாட்டுக்கென அவர்களோடு உழைப்பதே 'சோலை' இயக்கத்தின் மையக் குறிக்கோளாகும். இதில் குறிப்பாக அடித்தளத்துப் பெண்களின் மேம்பாட்டு முயற்சிகள், முன்னுரிமை இயக்கமாக விளங்குகிறது. ஆம் பெண்களின் அடிமை நிலையை அகற்றவும், ஆண்களோடு சரிநிகர் சமானமாய் சம்பாதித்து உயரவும் சமூகக் கொடுமைகளிலிருந்து மீளவும் சுய கவுரவத்துடன் வாழவும் - இச்'சோலை' நிறுவனம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

1. பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்ட, வயோதிகத் தாய்மார்கள்

2. சேரிகளில் - கிராமத்துக் குடிசைப் புறங்களில் வாழும் சமூகத்தால் ஒதுக்கப் பட்டுள்ள விதவைப் பெண்கள்.

3. கணவனால் கைவிடப்பட்டு வாழ்க்கையை இழந்து - சமூகத்தால் ஓரங் கட்டப்பட்டுள்ள அபலைப் பெண்கள்.

4. வறுமையில் நொடித்து - வாழ்வதற்கே அல்லல்படும் குடும்பங்களில் உள்ள திருமணமாகாத இளம் பெண்கள்.

மொத்தத்தில் கிராமத்து ஏழைப் பெண்கள் தான் இச்'சோலை' இயக்கத்தின் முன்னணி உறுப்பினர்கள். இப் பெண்களில் மிகப் பெரும்பான்மையோர் தாழ்த்தப்பட்டவர் மற்றும் சொந்த இடம் கூட இல்லாமல் அரசு தரிசு நிலங்களில் (புறம்போக்கு) குடியிருப்பவர்கள்.

## பணிகள்

60 கிராமப்பள்ளி மையங்கள் வழியாகத் தற்குறித்தனத்தைப் போக்கும் படிப்பறிவுப் பணி.

பெண்களே பொறுப்பேற்று நடத்தும் கிராம நூலக இயக்கம்.

பெண்கள் சக்தியைக் கிராம அளவில் வட்டார அளவில் ஒன்றுபடுத்தி தலைமைத்துவம் விளக்கும் விழிப்புணர்வுப்பணி.

பாலின் அடிப்படையில் நிலவும் அநீதிகளை உணர்ந்து அவற்றை முறியடிக்கும் முயற்சிகள் Gender Junction. வலுவான பெண்கள் சங்க (உமா சங்கம்) அமைப்புகள்.

12 வயது முதல 14 வயது சிறுமிகளுக்குத் தலைமைத்துவப் பயிற்சி.

பெண்கள் வேலைவாய்ப்புக்கான செயல்பாடுகள்.

சோலை இயக்கம் சிறுசிறு தொழில்களின் மூலம் பெண்கள் சம்பாத்தியத்தை முதலில் சாத்தியமாக்குகிறது; 21 வகையான சிறு சிறு தொழில்களைப் பெண்கள் மத்தியிலே ஏற்படுத்தி உள்ளது; இதனால் இவர்கள் பெறும் வருமானம் முதலில் மன நிம்மதியை - மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது; வாழ்க்கையின் கவலைகள் வருமானத்தால் மாற்றம் பெறுகிறது.

ஓர் விதவைப் பெண் இங்கே நுழையும்போது இருக்கிற சோகம் கப்பிய-விரக்தியான முகமும் - மிரட்சியான கண்களும் சிறிது காலத்தில் மழையில் நனைந்த வாடிய பயிர் பசேலென்று துளிர்ப்பது போல் - ஓர் பத்திர உணர்ச்சியை - வாழ்க்கையில் துளிர்ப்பை உணர்கின்றனர்.

அப்படி என்ன தொழில்கள் எவ்வளவு மூலதனம் தேவை?

மூலதனமே தேவையில்லாத வருவாய் தரும் தொழில்கள், சொற்ப மூலதனத்தில் (ரூ.100 முதல் 1000 வரை) நல்ல வருவாய் தரும் தொழில்கள் - இதில்தான் சோலை நிறுவனத்தின் சிறப்பு அடங்கி இருக்கிறது.

## மூலதனம் இல்லாமல் வருமானம்

வாழை - கற்றாழை முதலியவைகளில் இருந்து நார் உரித்தல் பயிற்சி அளிக்கப் படுகிறது. அவரவர் வாழும் இடத்தில் வீணாகும் வாழை மரத்துப்பட்டைகள் அதைச் சேகரித்து அதிலிருந்து உரிக்கப் படும் நார்களை உற்பத்தி செய்யும்



# தமிழ்ப் புத்தாண்டில்

# பி அண்ட் சி ஆலை

# திறக்கப்படும்

**மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 4.2.1992 அன்று பி அண்ட் சி ஆலையைத் திறப்பது குறித்து அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், நிர்வாகத்தினர், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.**

**வருகிற ஏப்ரல் மாதம் 13-ஆம் தேதி தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று, மூடியுள்ள பி அண்டு சி ஆலையைத் திறக்க இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. பி அண்டு சி ஆலையைச் சீரான முறையிலும், இலாபகரமான முறையிலும் நடத்த உரிய திட்டம் வகுப்பதற்கு முத்தரப்புக் குழு ஒன்றை அமைக்க இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.**

தொழில். தானாக வளர்ந்திருக்கும் கற்றாழையில் இருந்து எடுக்கப்படும் நாருக்குக் கைப்பணம் போடத் தேவையில்லாமல் - வருமானத்திற்கு வழி செய்கிறது

தானாகக் கிடைக்கும் கடல் பாசிகள், சிப்பிகள், அச் சிப்பிகளைக் கொண்டு அலங்கார மணிகள், வாயில் தோரணங்கள், திரைச்சீலை போல் அழகிய கதவுத் தோரணங்கள், சுவர்ச் சித்திரங்கள் எனப் பலப்பல பொருள்கள் செய்யப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதனால் பெறும் வருமானம் பெண்களின் வாழ்க்கையில் நிம்மதியைத் தருகின்றது.

மரப்பிசின்கள், கோந்துகள், அருகம் புல், இயற்கையில் வரப்புகளில் வயல் வெளிகளில் மலை ஓரங்களில் குன்றுகளில் தானாக முளைத்துள்ள துளசி இலை, கீழா நெல்லி, ஆவாரம்பூ, முதலிய இயற்கை மூலிகைகள் சேகரித்தல் சேகரித்த மூலிகைகளைப் பக்குவப் படுத்தல் முதலிய பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்த மூலிகைகள் இங்கு விலைக்கு வாங்கப்பட்டு, சித்த மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

இலவச அரிய சித்த வைத்திய சிகிச்சை இங்கு நாள்தோறும் நடைபெறுகிறது. ஏழை மக்கள் மற்றும் பொது மக்கள் இங்கு வைத்தியத்திற்கு வருவது நாள்தோறும் அதிகரித்து வருகிறது. இயக்கத்தின் கிராமப் பணியாளர்கள் கிராமங்களிலேயே பாரம்பரிய நல வாழ்வுப் பணியைச் செய்து வருகிறார்கள். இங்கு தயாரிக்கப்படும், 'முடி வளரும் தைலம்', 'முடி உதிர்வதைத் தடுக்கும் தைலம்', சரும வியாதிக்கான சிகிச்சை, நீரிழிவுக்கான தேநீர் சிகிச்சை போன்றவை புகழ் பெற்று வருகின்றன.

இங்கு பயிற்சி பெறும் பெண்கள் தங்கள், தங்கள் ஊர்களிலேயே வைத்தியம் பார்க்கிறார்கள். மூலிகை வைத்தியத்தில் ரகசியம் என்ற வார்த்தைக்கே இங்கு இடமில்லை.

தேள்கடி, பூரான், வண்டுக்கடி, முதலியவற்றிற்கு உடனடி சிகிச்சை தரச் சோலை இயக்கத்தால் பயிற்சி பெற்ற பெண்கள் தங்கள், தங்கள் பகுதிகளிலேயே ஓரளவு வருமானம், பெற்று இதைத் தொண்டாகச் செய்து வருகிறார்கள்.

ஆண்டு முழுவதும், ஆங்காங்கே ஆடல், பாடல் கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுக்கள், கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டு, கிராம மக்களிடையே இதன் மூலம் சுகாதாரம், சுற்றுப்புறத் தூய்மை, கல்வியின் இன்றியமையாமை, நட்பு, உதவி செய்து வாழ்தல், முதலிய நல்ல பண்புகளைத் தங்கள் கலாச்சாரக் குழுக்கள் மூலம் கிராமப்புறங்களில் ஏற்படுத்தி வருகிறது.

## முதலீட்டுத் தொழில்கள்

தையல் பயிற்சி, ஆயத்த ஆடை தைத்தல், பூ வேலைப்பாடு முதலியவைகளுக்கு 6 மாதப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்கு ஒரு நாளைக்கு ஐம்பது காசு கட்டணம் வாங்கப்படுகிறது. முதலில் இலவசமாகவே இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. பயிற்சி பெறுபவர் அக்கறைக் குறைவும், கவனிப்புக் குறைவும் பயிற்சியின் நோக்கத்தை நிறைவேற்ற உதவவில்லை. எனவே, கட்டணம் குறைந்த அளவாகவே வாங்கப்படுகிறது.

இங்கு பயிற்சி பெறும் பெண்கள் ஆயத்த ஆடை நிலையங்களில் இன்று வேலை செய்கின்றனர். தனியாகவும், தொழில் செய்து சம்பாதிக்கின்றனர். இதே போல் 'சோலை அச்சுத் தொழில் பயிற்சி நிலையம்' இங்கு ஆரம்பிக்கப்பட்டுப் பெண்களுக்கு அச்சுத் தொழில் கற்றுத் தரப்படுகிறது. இதற்கும் தற்பொழுது நாளொன்றுக்கு ஐம்பது காசு என்று குறைந்த கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இன்று வேலூரில் உள்ள அச்சகங்களில் பெண்கள் வேலை செய்கிறார்கள் என்றால் அவர்களை உருவாக்கியதே இச்சோலை நிறுவனம் எனலாம்.

இங்கே சுகாதாரம், கிராம வைத்தியம், சிறுதொழில்கள் முதலியவைகளைப் பற்றி 20-க்கும் மேற்பட்ட புத்தகங்கள் சோலை நிறுவனத்தால் அச்சிட்டு எளிய விலையில் விற்கப்பட்டு வருகிறது.

பழரசம் செய்தல் - பழப்பக்குவம் செய்தல், ஜாம் செய்தல், ஊறுகாய் தயாரித்தல், இங்க், பெனாயில், பற்பொடி முதலிய பொருள்கள் செய்யவும் இங்கே பயிற்சி பெறுகின்றனர்.

## காளான் உற்பத்தி

எல்லாத் தொழில்களுக்கும் சிகரமாக விளங்குவது 'காளான் பயிரிடுதல்' பயிற்சியாகும். 'காளான் வளர்ப்பை' நேரில் கண்டால் யாரும் ஆச்சரியத்தில் மூழ்கிப் போவார்கள்.

காளான் வளர்ப்புக்கு மற்ற பயிர்களைப் போல் மண், தண்ணீர், தேவையில்லை என்பதுதான் அதிசயம், ஏன்? இதற்காகப் பெரிய இடம்கூடத் தேவைப்படாது. வீட்டுத் தோட்டம் அல்லது குடிசை

யில் ஒரு பகுதியே காளான் வளர்க்கப் போதுமானதாகும்.

இதற்காகப் பெரிய மூலதனம் தேவைப் படாது, சிறிய பிளாஸ்டிக் உறைகள் - கொஞ்சம் வைக்கோல் ஆகியவை இருந் தால் போதுமானது.

ஒரு ஆர்லிக்ஸ் பாட்டில் அளவுள்ள காளான் விதை 6 ரூபாய்க்கு விற்கப் படுகிறது. இதிலிருந்து காளான் 21 நாளி லேயே கிடைத்து விடுகிறது. முதலீட்டுக்கு 3 மடங்கு அளவு இலாபம் கிடைக்கிறது. 1000 ரூபாய் முதலீட்டில் 3000 ரூபாய் கிடைக்கிறது.

இதற்கு மாதந்தோறும் ஒரு நாள் பயிற்சியும் இது தவிர, 3 மாதப் பயிற்சி யும் நடத்தப்படுகிறது. பயிற்சி பெறுப வர்கள் தங்கள் இடங்களிலேயே வளர்த்து அங்கேயே விற்பனை செய்து கொள் ளலாம்.

காளான் உற்பத்தி செய்யும் பெண்கள் ஒன்று சேர்ந்து காட்பாடியில் காளான் விற்பனை நிலையத்தினை (பதிவு) நடத்தி வருகின்றனர். நல்ல முறையில் இலாபகர மாக இயங்கி வருகிறது.

உலகில் ஆங்காங், சீனா, தாய்லாந்து, கொரியா முதலிய நாடுகளில் காளான் தான் உணவில் முதலிடம் வகிக்கிறது. காளானில்தான் அதிக அளவு புரோட் டின் சத்தும் மற்ற உடல் வளர்ச்சிக்குத் தேவையான அம்சங்களும் அடங்கியுள்ளன.

இது உணவு மட்டுமல்ல; சர்க்கரை வியாதிக்கும், இரத்த அழுத்த நோய்க்கும் சிறந்த நிவாரண உணவாகவும் விளங்கு கிறது. நிறைந்த வலிமைக்கும், உடல் ஆரோக்கியத்திற்கும், காளான் மிகச் சிறந்த உணவாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக இது 'சைவ உணவு' என்பதைக் கவனத்தில் பதிப்பது மிக முக்கியம் - ஏனெனில் உணவைப் பற்றிய நமது மக்களின் பார்வையில் பெரிய மாற்றம் தேவைப் படுகிறது. சோலை நிறுவனம் காளான் பயிற்சி மூலம் காட்பாடி, வேலூர் பகுதிகளில் உணவு முறையில் மிகச்சிறந்த புரட்சியை செய்து வருகிறது.

### சோலை இயக்கமும் - பெண்கள் முன்னேற்றமும்

சோலை இயக்கம் தன் இருப்பிடத்தில் இருந்தே சேவை செய்யவில்லை. கிரா மங்கள் தோறும் சென்று பெண்களைச் சந்தித்து அவர்களின் முன்னேற்றத்திற்கு வருவாய்தரும் வழிகாட்டியாக உள்ளது.

காட்பாடி அதன் சுற்றுப்புறங்களில் மட்டும் இதன் சேவை நடைபெறவில்லை. காட்பாடியில் இருந்து சோளிங்கர் வரை சுமார் 200 கிராமங்களில் இது விரிந்து செயல்படுகிறது.

சமுதாய வீணைகள் பெண்கள். அவர்கள் நலம் பெறச் சமுதாயத்தின் புழுதிகளைத் துடைப்பதில் 'சோலை' நிறுவனம் தன்னிகரற்று விளங்குகிறது.

**எஸ்.டி. ராஜேந்திரன்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**வட ஆர்க்காடு-**
**அம்பேத்கர் மாவட்டம்.**

## 1992 ஒலிம்பிக்ஸ் போட்டிகள்

**1992** ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்கள் ஸ்பெயின் நாட்டில் நடைபெறவிருக்கின்றன 1936-இல் பீப்புள்ஸ் ஒலிம்பிக்ஸ் நடத்துவதற்காக அமைக்கப்பட்ட ஸ்டேடியம் மற்றும் இதர வசதிகள் அங்கு ஏற்கெனவே இருப்பதால், 1992 ஒலிம்பிக்ஸை நடத்த அந்த நாட்டுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது.

ஸ்பெயின் நாட்டின் கடற்கரையையொட்டிய சிறு குன்றின் உச்சியில் உள்ள பழைய ஸ்டேடியம் ஒலிம்பிக் விளையாட்டுக்காகப் புதுப்பிக்கப்பட்டுள்ளது. தொடக்க விழாவும், நிறைவு விழாவும் இங்கே நடைபெறும். அதன் அருகிலேயே 17,000 பேர் அமரக்கூடிய வகையில் புதிய அரசாங்கம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. பலவிதமான விளையாட்டுப் போட்டிகளுக்குத் தேவையான 44 நிலைக் களன்கள் இங்கு தயார் நிலையில் உள்ளன.

உபயோகமற்ற பழைய தொழிற்சாலைகளும், கிடங்கு களும் அமைந்துள்ள பகுதியை முற்றிலுமாக நவீன மயமாக்கி, விளையாட்டு வீரர்கள் தங்குவதற்கான ''ஒலிம்பிக் கிராமம்'' உருவாக்கப்பட்டுள்ளது. கடற் கரையையொட்டி அமைந்துள்ள இந்தக் கிராமத்தில் சுமார் இருபதாயிரம் 'அபார்ட்மெண்ட்'கள் கட்டப் பட்டுள்ளன.

ஒலிம்பிக்ஸ் சமயத்தில் நகருக்குள் ஏற்படக்கூடிய போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க, புறநகர்ப் பகுதி யில் சுமார் 44 கி.மீட்டர் அளவுக்குப் புதிய சாலைகள் போடப்பட்டுள்ளன. சுரங்கங்களில் இயங்கும் கன்வேயர் பெல்ட் போல 14,000 மக்களை இடம் விட்டு இடம் அழைத்துப் போகும் பிரம்மாண்டமான திறந்தவெளி எஸ்கலேட்டர்கள் ஸ்டேடியத்தை நோக்கிப் போய் வந்த வண்ணமிருக்கும்.

உலகெங்கிலுமிருந்து சுமார் 4 இலட்சத்திற்கும், அதிகமான பேர் ஒலிம்பிக்ஸ் போட்டிகளை நேரில் பார்க்க வருவார்களெனக் கணக்கிடப்பட்டுள்ளது. பார்வையாளர்கள் தங்குவதற்காக ஓட்டல்களிலும், தனியார் வீடுகளிலும் இடவசதி செய்யப்பட்டுள்ளது.

ஒலிம்பிக்ஸ் போட்டியின் ஆரம்ப தின விழா டிக்கெட் கட்டணம் 400 டாலர். இதர நிகழ்ச்சி டிக் கெட்டுக்கள் 27 டாலருக்குக் கிடைக்கும். ஸ்பானிஷ் நகர மக்களுக்கு மட்டும் 80 சதவிகிதம் டிக்கெட்டுக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பார்ஸிலோனா ஒலிம்பிக்ஸின் சின்னம் 'கோபி' என்ற நவீன தோற்றமுடைய நாய்க் குட்டி.

—நன்றி: 'கல்கி'

# வளமான வாழ்வுக்கு
# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
அளிக்கும்
# விஜய்
உரங்கள்






VIJAY
MADRAS FERTILIZERS

**மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்**

இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்
மணலி, சென்னை 600 068

தேசீய பொருளாதாரத்தின்
மூலாதாரம், பொதுத்துறை...
அதன் வலிமையைப் பெருக்குவோம்.

HTA 7343



# ஏழை எளியவர்களின் இலட்சோப இலட்சம் இல்லங்களில் ஒளியேற்றிட அயராது பாடுபடுவோம்!

## மாண்புமிகு முதல்வர் உரை:

சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதங்களுக்குப் பதிலளித்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகள் (7.2.92)

**வா**ழ்நாளெல்லாம் தொண்டு செய்து, பழுத்த தந்தை பெரியாரைப் போற்றுகிற தமிழக மக்களால்; வாழ்நாள் முடியும் வரை மக்களுக்கு உழைத்த பேரறிஞர் அண்ணாவைப் பூஜிக்கிற தமிழக மக்களால்; 'இறந்தும் மக்கள் மனதில் இறவாமல் வாழுகிற புரட்சித் தலைவரின் புகழ் பாடுகிற தமிழக மக்களால், தங்கள் சகோதரியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளேன்; மக்கள் ஆதரவு பெற்ற ஒரு அரசியல் கட்சியின் பொதுச் செயலாளராக, ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளேன்; இந்த மாநிலத்தின் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மக்கள் பிரதிநிதி, எனப் பொறுப்பில் அமர்த்தப்பட்டுள்ளேன். எனவே, அந்த மக்களுக்கு வாழ்வளிக்கிற வழிகளை, அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குகிற பணியினை, அவர்களது எதிர்காலத்திற்கு உத்தரவாதம் வழங்குகிற முயற்சியினை, எவர் தடுத்து நிறுத்த முயன்றாலும், அவர்களை, அவர்களது எதிர்ப்பை, உடைத்தெறியத் தயங்கமாட்டேன் என்பதை இந்த நேரத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ ★ ★

**க**ர்நாடக வெறியர்களின் வன்முறை காரணமாக, தமிழகத்திற்கு ஓடி வந்த தமிழ்ச் சகோதர சகோதரிகளுடைய நிலைமைகளைச் சரி செய்யவும், அவர்கள் திரும்ப கர்நாடகத்தில் வாழ்வதற்கு வழிவகை செய்யவும், நாம் முயற்சி மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். மேலும் அவர்கள் இழந்த சொத்துக்களுக்குரிய நஷ்ட ஈட்டினைப் பெற்றுத் தருவதினையும், அவர்களுக்குத் தொடர்ந்து பாதுகாப்பினை வழங்குகிற பணியினையும், நாம் மேற்கொண்டு வருகிறோம்.

★ ★ ★

**ம**துவை விலக்கி மனித இனத்தைக் காக்க, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வந்த உடனே, மலிவு விலை மதுவை ஒழித்த மகத்தான சாதனையை இம்மாமன்றம் நன்கறியும். இவ்வாறு செய்வதன் மூலம் அரசுக்கு நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் நட்டம் என்றாலும்கூட, அதைப் பொருட்படுத்தாது மக்கள் நலமே எங்களின் முன்னுரிமையாக இருந்தது. மலிவு மதுவை ஒழித்த சூட்டோடு சூடாக, கள்ளச் சாராயம் கரைபுரண்டு ஓடும் என்று எதிர்பார்த்தார்கள். ஏசினார்கள். பேசினார்கள். இந்த மாமன்றத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் பலர், கள்ளச் சாராயம் அறவே ஒழிக்கப்பட்டுவிட்டது என்றும், சிலர் இல்லை, இல்லை, தாராளமாகக் கிடைக்கிறது; அண்டை மாநிலத்திலிருந்து வருகிறது; ஏராளமாகக் கள்ளச் சாராயம் காய்ச்சி விற்கப்படுகிறது என்றெல்லாம் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில், எதார்த்தமாகப் பேச விரும்புகிறேன். கள்ளச் சாராயம் முழுக்க முழுக்க ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதைவிட, பெருவாரியாக நிறுத்தப்பட்டுவிட்டது என்பதே உண்மை. அங்கும் இங்கும், சிற்சில இடங்களில் கள்ளச் சாராய நடமாட்டம் இருக்கிறது; இருக்கக்கூடும் என்பதை உணர்கிறேன். இது எப்பாடுபட்டாவது முழுவதும் ஒழிக்கப்படவேண்டும்; தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு துடிப்பாக இருக்கிறது. இதற்கென நியமிக்கப்பட்ட மதுவிலக்குப் பிரிவுக்

காவல் துறையினர் முடுக்கிவிடப்பட்டுள்ளனர். மாவட்ட ஆட்சியாளர்களும், காவல்துறைக் கண் காணிப்பாளர்களும் தக்க வகையில் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். மதுவிலக்கை அமலாக்குவதில் தீவிரம் காட்டிச் செயல்படுத்தும் அதே நேரத்தில், குடிப்பது தீது, அது குடியையே கெடுத்துவிடும் என்ற சித்தாந்தத்தைத் தீவிரப்படுத்த, மாநில மட்டத்தில் அமைக்கப்பட்ட பிரச்சாரக் குழு, என் தலைமையில் கூடி, அரும்பெரும் ஆலோசனை களைத் தந்துள்ளது. அவை செயல் வடிவம் பெற்று வருகின்றன. இதற்கெனத் தரமான நாட கம், திரைப்படம் தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்ளு கிறேன். குடிப்பழக்கத்திற்கு ஆட்பட்டவர்களை, அக்கொடிய பழக்கத்திலிருந்து விடுவிக்கும் மையங் களை நிர்மாணிக்கவும் தீர்மானித்துள்ளோம். சுருங்கக் கூறின் இத்திட்டம் நிறைவேற, மக்கள் ஒத்துழைப்பும், ஈடுபாடும் வெகுவாகத் தேவை.

★ ★ ★

இலங்கைத் தமிழ்ப் போராளிகள் தமிழ் நாட்டுக் கடலோரப் பகுதிகளில் கண்காணிப்போ, கட்டுப்பாடோ இன்றி, வெகு சாதாரணமாகத் தங்களது சட்ட விரோத, வன்முறைச் செயல்கள், மற்றும் கள்ளக்கடத்தலை நடத்திக் கொண்டிருப் பதை உணர்ந்த இவ்வரசு, இதற்கு ஒரு முடிவு கட்டும் வகையில், இவ்வரசு பதவி ஏற்ற நாள் முதல் பல்வேறு தீவிர மற்றும் திடமான நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளது. அந்த நடவடிக்கை களின் ஒரு பகுதியாக, முதன் முதலில் இந்தியக் கடற்படை (Navy) மற்றும் கடலோரப் பாது காப்புப் படையினரின் (Coast Guard) உதவியுடன், கடலில் ரோந்துப் பணி தீவிரப்படுத்தப்பட்டது. தமிழக மீனவர்கள் உட்பட எவரும் கடலில் இந்திய எல்லையைத் தாண்டிச் செல்வதும், ஊடுருவல் புரிவதும், இனியும் இயலாது என்ற அளவில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. தமிழக மீனவர்களின் மீன்பிடிப் படகுகளில், இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகள் நடமாட்டம் புரிவதைக், கண்டுபிடித்து ஒடுக்கும் பொருட்டு, தமிழக மீனவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப் பட்டுள்ளன. இவ்வடையாள அட்டைகள் இல்லாத மீனவர்கள், கப்பற்படை மற்றும் கடலோரக் காவல் படையினரால் பிடிக்கப்பட்டு, காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்படும் முறை செயல் பாட்டில் உள்ளது. மேலும், அந்நியரின் படகோ, அல்லது விசைப்படகோ நடமாடுவதைத் தடுக்கும் பொருட்டு, தமிழக மீனவர்களின் படகுகளுக்கு வரிசை எண் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு எண் பொறிக்கப்படாமல் நடமாடும் படகுகள், இனம் கண்டு கொள்ளப்பட்டுப் பறிமுதல் செய்யப் படுகின்றன.

★ ★ ★

தற்போது தமிழ்நாட்டில் சாதாரண ரக அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.2 என்ற அளவில் உள்ளது. அதே நேரத்தில் மத்திய அரசு நமக்கு வழங்கக்கூடிய அரிசியின் விலையும், இதர மாநிலங்களில் உள்ள விநியோக விலையும் பின் வருமாறு அமைந்துள்ளது:- கிலோ ஒன்றுக்கு ரூ.

| | |
|---|---|
| மத்திய அரசு விலை | ... 3.77 |
| ஆந்திரப்பிரதேசத்தில் விற்கப்படுகிற விலை | ... 3.50 |
| கர்நாடகத்தில் விற்கப்படுகிற விலை | ... 3.50 |
| கேரளத்தில் விற்கப்படுகின்ற விலை | ... 3.15 |
| மேற்கு வங்காளத்தில் விற்கப்படுகின்ற விலை | ... 4.61 |
| ஒரிஸ்ஸாவில் விற்கப்படுகின்ற விலை | ... 4.32 |

அனைத்து மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தோம் என்றால், தமிழ்நாட்டில்தான் சாதாரண ரக அரிசி விலை மிகக் குறைந்த அளவான கிலோ ஒன்றுக்கு ரூ.2 என்று விநியோகம் செய்யப் படுகின்றது. இவ்வளவு கடுமையான நிதி நெருக் கடி இருந்தபோதிலும், தமிழக அரசு, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். காட்டிய பாதை யில், அதாவது சாதாரண ரக அரிசியின் விலையை உயர்த்தக் கூடாது என்ற எண்ணத்தின் அடிப்படை யில், தொடர்ந்து சாதாரண ரக அரிசியின் விலையை கிலோ ஒன்றுக்கு ரூ.2 என்று நிர்ணயித்துள்ளது.

எங்களுடைய ஆட்சி யிலும், சாதாரண ரக அரிசியின் விலை தொடர்ந்து ரூ.2 என்ற வகையிலே எந்தவித மாற்றமும் இல்லாமல், பொது விநியோக முறை மூலம் வழங்கி வருகிறோம். சன்னம், மிகச்சன்ன ரக அரிசி விலையைப் பொறுத்த வரையில், மத்திய அரசு வெளியீட்டு விலையை உயர்த்தியுள்ள தனால், வேறு வழி இல்லாமல் அந்த ரக அரிசி விலையை உயர்த்த வேண்டிய அவசியம் ஏற் பட்டது.

தமிழக அரசுதான் இந்தியாவிலேயே முன்னோடி யாக ஒரு சிறப்பான முயற்சி எடுத்து, 18,000 டன் பாமாயில் வெளிநாட்டிலிருந்து பெறுவதற்கு வழிவகை செய்துள்ளது. இதற்குத் தேவையான அந்நியச் செலாவணியை ஒதுக்க இயலாது என்ற ஒரு பிரச்சினையையும் கடந்து, அந்நியச் செலா வணியைப் பெறுவதற்கான ஒரு சிறப்பான முயற்சியை ஏற்படுத்திக் கொடுத்து, 12,000 டன் பாமாயிலை மலேசியாவிலிருந்து பெற்று அது விநியோகிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 6,000 டன் பாமாயில் வெகுவிரைவில் கொண்டு வரப்பட்டு விநியோகிக்கப்படும். உள்ளபடியே வேறு எந்த மாநிலத்திலும் இவ்வளவு சிறப்பான முயற்சி எடுக்கப்படவில்லை.

மேலும் தமிழக அரசு நேரடியாக இறக்குமதி செய்துள்ள பாமாயில் விலையை, கிலோ ஒன்றுக்கு ரூ.22.50 என்று நிர்ணயித்து விநியோகம் செய் துள்ளது. மத்திய அரசு தொகுப்பிலிருந்து நிர்ண யித்துள்ள விலை, கிலோ ஒன்றுக்கு ரூ.25 என்று இருக்கின்றது.

★ ★ ★

இந்த அரசு பொறுப்பேற்ற பொழுது, தமிழகத் தில் இருந்த சூழ்நிலையை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். குறிப்பாக

சோதனை மிகுந்த கடுமையான நிதி நெருக்கடியை, இந்த அரசு சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. துவக்கத்திலேயே சுமார் ரூ.898 கோடி பற்றாக்குறையை இவ்வரசு ஏற்க வேண்டியிருந்தது. ஏழை எளியவர்களின் இலட்சோப இலட்சம் இல்லங்களில் ஒளியேற்றி, தாய்மார்களின் துன்பங்களைத் துடைக்கும் நேரத்தில், வருமானம் தந்து கொண்டிருந்த மலிவு விலை மதுக்கடைகளை மூடி விட்டோம். இதனால் அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ரூ.322 கோடி ஆகும். ஆக மொத்தம் ரூ.1,600 கோடி ஆண்டுத் திட்டத்திற்கு, ரூ.1,220 கோடி பற்றாக் குறையை இந்த அரசு ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதன் பிறகு பல நிதி ஆதாரங்களைத் திரட்ட சிறந்த முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டது. வணிகவரித் துறையில் கூடுதல் நிதி திரட்டுதல், கள்ளச் சாராய ஒழிப்பினால் IMFS மீது கூடுதல் ஆயத் தீர்வை, மற்றும் விற்பனை வரி பெறுதல், செம்மையான வரி வசூல் செய்தல், சிறுசேமிப்பில் கணிசமான முன்னேற்றம் அடைதல், போன்ற பல்வேறு முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டது. அதே நேரத்தில் நட்டத்தைத் தடுக்கும் முயற்சியாக, தவிர்க்க முடியாத சில நடவடிக்கைகளான மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது, பேருந்துக் கட்டணத்தைச் சற்று உயர்த்துவது, போன்றவற்றை செயல்படுத்த வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான், கடுமையான நிதி நெருக்கடி இருந்தபோதிலும், நடப்பாண்டில் ரூ.1,600 கோடி என்ற திட்ட ஒதுக்கீட்டினை, இந்த அரசு முழுமையாக வெற்றிகரமாகச் செயல்படுத்தும் என்பதை, நான் இங்கே திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன்.

சிலர் விமர்சிப்பதுபோல, தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டங்களின் மீது அக்கறை இன்றி இந்த அரசு செயல்படுவதாக இருந்தால், இந்த அரசு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த திட்ட ஒதுக்கீடான ரூ.1,600 கோடியை, செயல்படுத்த இயலாது என்று முதற் கட்டத்திலேயே கைவிட்டு இருக்கலாம். இந்த முறையைத்தான் முன்பு இருந்த ஆட்சி 1988-89-இல் செய்தது. குடியரசுத் தலைவர் ஆட்சியில், ஆண்டுத் திட்டத்திற்கு ரூ.1,457 கோடி என்று திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனைச் செயல்படுத்த இயலாது என்று கூறி, ரூ.1,457 கோடி என்ற திட்ட ஒதுக்கீட்டினை, ரூ.1,202 கோடி என்று முன்பு இருந்த ஆட்சி மாற்றிக் கொண்டது. இதனை நான் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம், நாங்களும் மிகச் சுலபமாக ரூ.1,600 கோடி என்ற நடப்பாண்டின் திட்ட ஒதுக்கீட்டினை, ரூ.1,400 கோடி என்று குறைத்துக் கொண்டு, வரும் ஆண்டில் ஒரு உயர்வு காண்பிப்பதுபோல், ஒரு கண் துடைப்பு வேலையைச் செய்திருக்கலாம். ஆனால் இந்த அவையிலும் சரி, மக்கள் மத்தியிலும் சரி, உண்மையான நிலையை மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும் என நான் விரும்புகிறேன். அதைத்தான் மக்களும்




என்னிடம் எதிர்பார்க்கிறார்கள். எனவே கண் துடைப்பு முயற்சிகளில் ஈடுபடாமல் ஒத்துக் கொள்ளப்பட்ட ஆண்டுத் திட்டத்தினை முழுமையாகச் செயல்படுத்த, அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்திருக்கிறோம். ரூ.1,600 கோடி என்ற ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டினை முழுமையாகச் செயல்படுத்த, இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது என்பதை, நான் இங்கே மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

★ ★ ★

இந்த அரசு கடுமையான நிதி நெருக்கடியிலும், விவசாயிகள் பம்ப் செட்டுகளுக்கு இலவசமாக வழங்கக்கூடிய மின்சாரத்தின் வாயிலாக ஏற்படும் நிதிச் சுமையை ஏற்றுக் கொண்டுள்ளது. தற்போதுள்ள சுமார் 4,000 மில்லியன் யூனிட் மின்சாரம் இலவசமாக விநியோகம் செய்யப்படுகின்றது. இதனால் ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ரூ.560 கோடி நிதிச்சுமை ஏற்படுகின்றது. தமிழ்நாடு மின்சார வாரியம் நல்ல முறையில் இயங்கி இதனை ஓரளவிற்கு ஈடுகட்டினாலும், நிகரமாக மாநில அரசு, ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.350 கோடி மானியமாக வழங்குவதுடன், மாநில அரசுக்கு மின்சார வாரியத்திடமிருந்து வந்து சேர வேண்டிய ரூ. 100 கோடி வட்டியையும் விட்டுக்கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. கடுமையான நிதி நெருக்கடியிலும் இதனைக் குறைக்காமல், இந்த அரசு தொடர்ந்து விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு ஏற்றுக் கொண்டு வருகின்றது.

★ ★ ★

நெல் உற்பத்தியாளர்களுக்கு, மத்திய அரசு பரிந்துரைத்த கொள்முதல் விலையை, இந்த அரசு வழங்கி வருகிறது. கடந்த செப்டம்பர் மாதத்தில் நெல் கொள்முதல் விலை, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.25 என்று உயர்த்தப்பட்டது. சாதாரண ரக

நெல்லின் கொள்முதல் விலை, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.205-இல் இருந்து ரூ.230-ஆக நிர்ணயித்தது. அதேபோல் சன்ன ரகத்திற்கு ரூ.215- லிருந்து ரூ.240 ஆகவும், மிகச் சன்ன ரகத்திற்கு ரூ.225-லிருந்து ரூ.250 ஆகவும் உயர்த்தியது. இந்த விலையை முழுமையாக வழங்குவதோடு, ஊக்கத்தொகையாக, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.35 கூடுதலாக இந்த அரசு வழங்கியுள்ளது. எனவே நெல் உற்பத்தியாளர்களுக்கு எப்பொழுதும் இல்லாத அளவிற்கு, மிக அதிகமான விலையை இந்த அரசு வழங்கி வருகிறது.

★ ★ ★

கிராமப்புறங்களில் உள்ள நிலமற்ற ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்கள், மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் நகர்ப்புற மக்கள் ஆகியோருக்கு, 1992 பொங்கல் திருநாளை முன்னிட்டு இலவச சேலை, வேட்டி வழங்க அரசு ஆணை பிறப்பித்தது.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தேவைப் பட்டியலை ஒட்டி, வருவாய்த் துறை ஆணையர் இத்திட்டத்தினை நிறைவேற்ற, 56,94,681 சேலைகளும், 58,41,551 வேட்டிகளும் தேவை எனக் கூறியுள்ளார். இத்திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ.42 கோடி.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் இவ்வாண்டில் தொடங்கப் பெற்று, 1992-ஆம் ஆண்டு செப்டம்பரில் முடிவுற இருக்கிறது. அனைத்துப் பணிகளும், இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு நிறைவேற்றுவதற்குரிய முறையில், ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது சிறப்பிற்குரியதாகும்.

இத்திட்டத்திற்காகும் மொத்த செலவு ரூ.387.24 கோடி ஆகும். 1991-92-ஆம் ஆண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக, ரூ.194.62 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குப் போதிய நிதியை உரிய நேரத்தில் அரசு வழங்கும்.

இச்சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில், 7 முக்கிய அம்சங்கள் உள்ளன. சாலைகளின் தரத்தை மேம்படுத்துதல், சிறிய நீர்ப்பாசன ஆதாரங்களை மேம்படுத்துதல், தெரு விளக்குகள் அமைத்தல், குடிநீர் வசதி செய்தல், தொடக்கப் பள்ளிகளுக்கும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவு மையங்களுக்கும் கட்டடங்கள் கட்டுதல், மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல் இத்திட்டத்தில் அடங்கும்.

★ ★ ★

சென்னை மாநகருக்கு ஒவ்வொரு ஆண்டும் குடிநீர் வழங்குவதில் ஏற்பட்டுள்ள சிக்கலுக்குத், தீர்வுகாணுகிற முயற்சிகளின் தொடர்ச்சியாக, 11.1.1992 அன்று ஐதராபாத்தில் ஆந்திரப் பிரதேச மாநில முதல்வருக்கும் எனக்கும் இடையே நடைபெற்ற கூட்டத்தில், தெலுங்கு கங்கைத் திட்டம் செயல்படுத்துவது குறித்து மறு ஆய்வு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் 1995-ஆம் ஆண்டு ஜூன் திங்களுக்குள் ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் பாசன வசதி அளிக்கவும், சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கவும் ஒத்துக்கொள்ளப் பட்டுள்ளது. மேற்கூறிய இலக்கினை எட்ட, தமிழக அரசு தன் பங்கிற்கேற்ப போதிய நிதி ஒதுக்கீடு செய்யும் என்றும், ஆந்திர மாநிலம் இத்திட்டத்திற்கான முக்கிய பாகப் பணிகளை மேற்கொண்டு முடிக்கும் பொருட்டு, போதிய நிதி ஒதுக்கீடு செய்யும் என்றும் ஒத்துக்கொள்ளப் பட்டுள்ளது. தற்பொழுது நிலவி வரும் விலைப் பட்டியலின்படி, இத்திட்டத்தினை முழுமையாக நிறைவேற்றி முடிக்க நிதிப் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு, இத்திட்டத்தின் முக்கிய பணிகளை மட்டும் மேற்கொண்டு முடிக்க, போதிய கவனம் செலுத்தப்படும் என்றும் ஒத்துக்கொள்ளப் பட்டுள்ளது. 1995-96-ஆம் ஆண்டுக்குள், தெலுங்கு கங்கைத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றி முடிப்பதற்குத் தேவையான நிதி, திட்ட ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கும் மேலாகத் தேவைப்படுவதால், கூடுதல் நிதியைப் பெறும் பொருட்டு, வெளிநாடுகளில் வாழுகின்ற இந்தியர்களை இத்திட்டத்தினை நிறைவேற்றுவதில் பங்கு பெறுவதற்கென அழைப்பதற்கு, இரு மாநில அரசுகளும் எல்லாவித முயற்சிகளும் மேற்கொள்ளும். இத்திட்டத்தை நிறைவேற்றும் பொழுது ஏற்படும் சிக்கல்களை, சுமுகமாகத் தீர்க்கும் பொருட்டு, இரு மாநில அலுவலர்களிடையே அடிக்கடி கூட்டங்கள் கூட்டப்பட்டு, இத்திட்ட முன்னேற்றத்தைக் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும். இரு மாநில அரசு அலுவலர்களாலும் ஒரு செயல் திட்டம் (Action Plan) வகுக்கப்பட வேண்டுமென்றும், அச்செயல்






இதனை வழங்க முடிவு செய்துள்ளோம்.

★ ஆளுநர் உரையில் ஆரம்பக் கல்விக்கு சிறப்பான முன்னேற்றம் அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், தற்போதுள்ள ஓராசிரியர் பள்ளிகளில் கூடுதலாக ஒரு ஆசிரியர் நியமிக்கப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை உடனடியாகச் செயல்படுத்த இருக்கின்றோம். இது மட்டுமல்லாமல், ஆரம்பக் கல்வியில் மேலும் சிறப்பான முன்னேற்றம் காணவேண்டும் என்ற நோக்கத்துடன், ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளோம். இந்தத் திட்டத்தில் 2 ஆசிரியர்கள் இருக்கக்கூடிய ஆரம்பப் பள்ளிகளில் மூன்றாவது ஆசிரியரை நியமிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ.62.47 கோடியாகும். இந்தத் திட்டம் மத்திய அரசின் உதவி பெற்று விரைவில் செயல்படுத்தப்படும்.

★ ★ ★

திட்டம் செவ்வனே செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

★ ★ ★

★ தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் நலனுக்காக ஒரு தனி நிதி கடந்த ஆண்டு துவக்கப்பட்டது. இந்த நிதி ஒவ்வொரு தொழிலாளர்க்கு ரூ.2 என்று தொழில் நிறுவனத்திடமிருந்தும், அரசு தரப்பில் ரூ.2-ம் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியைப் பயன்படுத்தி, தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் குழந்தைகளுக்குப் போதுமான கல்வி வசதியும், விளையாட்டு மையங்களும் ஏற்படுத்துவதற்கு வழி செய்யப்படுகிறது. இதனைக் கண்காணிக்க அந்தந்த மாவட்டங்களில், மாவட்ட ஆட்சி தலைவரின் பொறுப்பில் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன.

ஆடிப்பாடி விளையாட வேண்டிய பருவத்தில், வறுமையினால் வேலைக்கு செல்ல வேண்டிய சூழ்நிலையை நாம் மாற்றி அமைக்க வேண்டும். இதற்கு நாம் சட்ட ரீதியான அணுகு முறையைப் பயன்படுத்தலாம். அதே நேரத்தில், வறுமையினால் ஏற்படக் கூடிய நிலைமையை தவிர்க்க, நாம் வேறு சில நடவடிக்கைகளும் எடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இதனால்தான் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் இளம் தொழிலாளர்களுக்கு உதவும் வகையில், இந்த நிதியை வலுப்படுத்த நாம் முடிவு எடுத்துள்ளோம். எனவே, ஆண்டுதோறும் ஒவ்வொரு தொழிலாளர்க்கும் ரூ.2 என்ற அடிப்படையில் வழங்கப்படும் தொகையை, இந்த அரசு ரூ.10-ஆக உயர்த்த முடிவு செய்துள்ளது. அதேபோல் தொழில் நிறுவனங்களும் அவர்கள் தரப்பில் ஒவ்வொரு தொழிலாளர்களுக்கும் ஆண்டுதோறும் ரூ.10 வழங்க வேண்டும். மேலும், தற்போது இந்தத் திட்டம் தீப்பெட்டித் தொழிலுக்கு மட்டும்தான் பொருந்தும். இனிமேல், பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் இளம் தொழிலாளர்களுக்கும்

தமிழக அரசு ஆதரவற்ற முதியோர்களுக்கும், விதவைகளுக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும், வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும், உடல் ஊனமுற்றோர்களுக்கும், மாதந்தோறும் ரூ.50 உதவித் தொகை தற்போது வழங்கி வருகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ் 5.15 இலட்சம் பேர் பயனடைந்து வருகின்றனர். எங்கள் திட்டங்களில் மனிதாபிமானத்தின் வெளிப்பாடு மகத்தான பங்கு வகிக்கிறது. முதியோர் ஓய்வு ஊதியம் பெறுவோருக்கு, வாரந்தோறும் அரிசி வழங்கும் திட்டத்தை முந்தைய அரசு கைவிட்டது. ஆனால் நாங்கள் பொறுப்பேற்ற உடன், முதியோர் ஓய்வு ஊதியம் பெறுவோர் அனைவருக்கும், ஒவ்வொரு வாரமும் அரிசி வழங்கும் திட்டத்தை மீண்டும், 15.9.91 முதல் அமலுக்கு கொண்டு வந்துள்ளோம். முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு, தற்போதைய விலைவாசி உயர்வினைக்கருத்தில் கொண்டு, மேலும் சிறிது உதவும் நோக்கத்தோடு அவர்களுக்குத்தற்போது வழங்கப்படும் ஓய்வூதியமான ரூ.50-, ரூ.75-ஆக உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 15.45 கோடி கூடுதல் செலவு ஆகும்.

★ ★ ★

ஓய்வூதியம் வழங்குவதில் தாமதங்கள் ஏற்படா வண்ணம், இந்த அரசு கவனித்துக் கொள்ளும். காத்திருப்போர் பட்டியலில் உள்ள 19.509 நபர்களுக்கு, உடனடியாக ஓய்வூதியம் வழங்க இந்த அரசு ஆணையிடுகின்றது. இதற்காக ஆண்டொன்றுக்கு ரூபாய் 1.76 கோடி கூடுதல் செலவு ஆகும். இதன்படி தமிழகத்தில் 5.35 இலட்சம் பேர் இத்திட்டத்தின் கீழ் இனிப் பயனடைவர்.

★ ★ ★

கிராமப் பகுதிகளில் வசிக்கும் ஏழை எளிய நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை அதிகரித்து, கூடுதல் வருமானம்

பெறுவதன் மூலம், இந்த விலை உயர்வினை ஏழைத் தொழிலாளர்கள் சந்திக்க உதவும் என்ற வகையில், 'தமிழக அரசு வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்' என்ற புதிய திட்டம் உடனடியாகச் செயல்படுத்தப்படும். முதல்கட்டமாக, தொடர்ந்து வறட்சிக்கு உள்ளாகி வரும் மாவட்டங்களாகிய தருமபுரி, இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் பசும்பொன்-முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள நிலமற்ற ஆண் மற்றும் பெண் விவசாயத் தொழிலாளர்கள், அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் தங்களுடைய பெயர்களைப்பதிவு செய்து கொள்ள வேண்டும். அதன் பின் அந்த ஊராட்சி ஒன்றியத்தில் பரவலாக வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், பணிகள் உருவாக்கிச் செயல்படுத்தப்படும். இப்பணிகள் அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தின் வரம்புக்கு உட்பட்டு, மாவட்ட அளவில் கண்காணிக்கப்படும். குளங்கள் வெட்டுதல், ஏரிகளை மேம்படுத்துதல், வரத்துக் கால்வாய்களைச் சீர்படுத்துதல், வடிகால் வசதிகளை ஏற்படுத்துதல், சமூக நலக் காடுகளை வளர்த்தல், சாலை வசதிகளை மேம்படுத்துதல், போன்ற பல்வேறு நலப்பணிகள் இதில் அடங்கும். இப்பணிகளில் ஈடுபடுத்தப்படும் தொழிலாளர்களுக்கு, அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியமான ரூ.14 நாளொன்றுக்கு வழங்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

★ ★ ★

அண்மையில் துவக்கப்பட்டுள்ள தமிழக அரசின் புதிய மருத்துவ நலத் திட்டத்தின் மூலமாக, தொடர்ந்து போதுமான அளவு மருந்துகள் வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 1000 மருத்துவ முகாம்கள் இந்தத் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டுள்ளன. அதில் 5 இலட்சத்திற்கும் அதிகமான பேர் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றனர்- இந்தத் திட்டம் முழுமையடைகின்றபொழுது, கிட்டத்தட்ட 50 இலட்சம் பேர் இதன்மூலம் பயனடைவார்கள். இந்தத் திட்டம் முழுமையாக வெற்றி பெற, அனைத்துத் தொண்டு நிறுவனங்கள், மருந்து தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், வணிகர்கள் போன்றவர்கள், தங்கள் முழு ஒத்துழைப்பினை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

★ ★ ★

சத்துணவு மையங்களில் தற்போது 2 வயதிலிருந்து 6 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கப்படுகின்றது. இப்பொழுது, இத்திட்டத்துடன் சத்துணவு மையங்களில், 6 மாதத்திலிருந்து 2 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும், ஊட்டச் சத்து வழங்குவதற்கும், கருவுற்ற தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஊட்டச் சத்து வழங்குவதற்கும், ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் மருத்துவ வசதிகளும் செய்து தரப்படுகின்றன. இந்த ஒருங்கிணைந்த திட்டம் 11 மாவட்டங்களில் விரிவாக்கப்பட்டு உள்ளது. மேலும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் மகிழ்ச்சிகரமான அறிவிப்பு ஒன்றை வெளியிட விரும்புகிறேன். இந்தத் திட்டம் படிப்படியாக, தமிழ் நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் விரிவாக்கப்படுமென்று அறிவிக்கின்றேன்.

இந்தத் திட்டம் முழுமையாக விரிவாக்கப்படும் கட்டத்தில், மொத்தம் சுமார் 2 இலட்சம் கருவுற்ற தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஊட்டச் சத்து வழங்குவதற்கு வழிவகை செய்யப்படும். மேலும் சுமார் 7 இலட்சம் குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து வழங்கப்படும். கருவுற்ற தாய்மார்களும், பாலூட்டும் தாய்மார்களும் இந்தத் திட்டத்தில் பயன்பெறுவதால், மேலும் அரசுக்கு ஆண்டுதோறும் சுமார் ரூபாய் 2 கோடி கூடுதல் செலவு ஆகும்.

இந்தத் திட்டம், உடனடியாக தர்மபுரி மாவட்டத்திற்கு விரிவாக்கப்படும். இத்திட்டத்தில் தர்மபுரி மாவட்டத்தில் சுமார் 8,000 கருவுற்ற தாய்மார்களும், பாலூட்டும் தாய்மார்களும், சுமார், 30,000 சிறு குழந்தைகளும் ஆண்டுதோறும் பயன்பெறுவார்கள். இதற்கு ஆண்டுக்கு ஆகும் செலவு ரூ. 3 கோடியாகும்.

★ ★ ★

கும்பகோணத்தில் உள்ள சிவாலயங்கள், வைணவத் திருக்கோயில்கள் ஆகியவற்றைப்புதுப்பிக்கும் பணிக்காக, ரூ.46.28 இலட்சம் வழங்க ஆணையிடப்பட்டது. மகாமகம் திருவிழாவில் பங்குகொள்ள வரும் பக்தர்களுக்கு, செய்ய வேண்டிய வசதிகளுக்காக கும்பகோணம் நகராட்சிக்கும், பொது சுகாதாரத்துறை, மற்றும் நெடுஞ்சாலைத் துறைக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கும்பகோணத்தில் உள்ள தெருக்கள், சாலைகள் மேம்படுத்துதல், தெரு விளக்கு வசதி, குடிநீர் வசதி அமைத்தல், பாலங்கள், வாய்க்கால்களைச் சீரமைத்தல், மகாமகம் குளத்தைச் சீரமைத்தல் போன்ற பணிகளுக்கு, ரூபாய் 67.5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கழிப்பிட, துப்புரவு வசதிகளைச் செய்ய, பொதுச் சுகாதாரத் துறைக்கு ரூபாய் 48 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

கும்பகோணத்தைச் சுற்றியுள்ள நெடுஞ்சாலைகளை மேம்படுத்த ரூபாய் 126 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

கும்பகோணம் கிராமப்புறக்கூட்டுறவு மின்னமைப்பிற்கு ரூபாய் 6.5 இலட்சம் மானியமாக வழங்க மின்வாரியத்திற்கு ஆணையிடப்பட்டுள்




# சமூக - பொருளாதார நீதி ஏழைக்குக் கிடைப்பதே தர்மம்!

## மாண்புமிகு முதல்வர் உரை

சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில், ரூ.4 கோடியே 54 இலட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்ட அடுக்குமாடிக் கட்டடத்தின் திறப்பு விழா, 8.2.92 அன்று சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு.எம்.எச். கனியா அவர்கள் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

விழாவில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பேசியதாவது:-

'இந்தப் புதிய கட்டடம் கட்ட முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1986-இல் அனுமதி வழங்கினார். அந்தப் பணி இப்போது முடிவடைந்து, கட்டடத் திறப்பு விழாவில் பங்கேற்பது எனக்கு மகிழ்ச்சி தருகிறது. ஜனநாயக அமைப்பில் நீதித்துறையின் பங்கு முறையாக இருக்க வேண்டும் என்று அவர் கருதினார். ஆகவே, அரசியலமைப்புச் சட்டம் வழங்கிய முக்கியமான இடம் நீதித் துறைக்குக் கிடைத்திட எனது தலைமையிலான அரசு தொடர்ந்து பாடுபடும் எனக் கூறிட விரும்புகிறேன்.

மிகச் சிறந்த கட்டடக் கலை அமைப்புகள் கொண்ட சென்னை மாநகரில் உயர்நீதிமன்றக் கட்டடம் மிக முக்கியமானது. இங்கு கூடுதல் தேவை கருதி, இப்புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இதன்மூலம் நீதிபதிகள், வழக்குரைஞர்கள், மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு உரிய பயன் கிடைக்கும் என்று கருதுகிறேன்.

சென்னை உயர்நீதிமன்றம் 130 ஆண்டுக் காலப் பாரம்பரியம் கொண்டது. பாரபட்சமற்ற, நியாயமான தீர்ப்புகளை அச்சமின்றி தலை நிமிர்ந்து வழங்கும் பண்பாட்டை இங்கு நீதிபதிகளும், வழக்குரைஞர்களும் வளர்த்தனர். அதே மரபுகளைப் பின்பற்றும் வாரிசுகள் நாம் என்ற பெருமை இந்த விழாவில் பங்கேற்கும்போது உண்டாகிறது. நீதிபதிகள் முத்துசாமி அய்யர், சங்கரன் நாயர், மாதவன் நாயர், கே.சுந்தரம் செட்டியார், வே.பா.ரமேசன் ஆகியோர் இந்த உயர்நீதி மன்றத்தில் பணிபுரிந்து பெருமை சேர்த்தவர்கள். அதேபோல, மிகப் பெரும் வழக்குரைஞர்களான பாஷ்யம் அய்யங்கார், அல்லாடி கிருஷ்ண சாமி ஐயங்கார், வி.எஸ். எத்திராஜ் ஆகியோர் உட்பட பலர் இந்த உயர் நீதிமன்றத்தில் பணிபுரிந்து பெருமை சேர்த்தனர்.

ஜனநாயகம் மற்றும் மதச்சார்பின்மையை அடிப்படையாகக் கொண்டு நமது அரசியலமைப்புச் சட்டம் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஆதார உரிமைகளை அரசியலமைப்புச் சட்டம் வழங்கி உள்ளது. ஆனால், பொது நலன் அடிப்படையில் இவைகளுக்கு ஒரு வரம்பு உள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் இலட்



சியங்களை நிறைவேற்ற சில வழி காட்டிக் கோட்பாடுகள் உள்ளன. நாட்டின் பொருளாதார நிலைகளை உணர்ந்து அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கி உள்ளனர்.

பாமர மக்களின் பொருளாதார, சமூக அந்தஸ்து உயர்ந்து சேமநல அரசாகத் திகழ அவர்கள் விரும்பினர். அனைவருக்கும் சமூக மற்றும் பொருளாதார நீதிகளை வழங்கும் வகையில் நிர்வாகமும் சட்ட மன்றமும் செயல்பட வழி வகுத்தனர்.

பாமர மக்களுக்கு உணவு, உடை, இடம், வேலைவாய்ப்பு ஆகியவைகளை முறையாகத் தர வழிகாட்டும் வகையில் அரசியலமைப்புச் சட்டம் வழிகாட்டுகிறது. இதைத்தான் ஹெரால்டு லக்சி, 'எனது அண்டை வீட்டுக்காரர் காய்ந்த ரொட்டிக்கு அலையும்போது நான் எப்படிக் கேக் சாப்பிட முடியும்?' என்று நயமாகக் குறிப்பிட்டார்.

ஆகவே, ஏழ்மை, சுரண்டல், அறியாமை மற்றும் வன்முறை நீங்க நிர்வாகமும், சட்டமன்றமும் மட்டும் பாடுபடுவது போதாது. இந்தப் பிரச்சினைகள் தீர தனது உரிய பங்கை ஆற்ற நீதித்துறை முன்வர வேண்டும்.

தனது வாழ்வுக்கும், அதன் தேவைக்கும் ஒவ்வொரு துறையும் என்ன செய்தது என்று கேட்கும் உரிமை சமூகத்திற்கு உண்டு. இந்தக் கேள்விக்குப் பதில்கூற வேண்டிய பொறுப்பு நீதித்துறைக்கும், அதைச் சார்ந்த அமைப்புகளுக்கும் இருக்கிறது. ஆகவேதான், இந்த உரிமையை ஆராய வேண்டிய நேரத்தில் இருக்கிறோம். சட்டம் என்பது சட்டப் புத்தகத்தில் உள்ள விதி மட்டுமல்ல, தர்மம் அல்லது அறத்தின் அடிப்படையில் அமைந்தது சட்டமாகும்.

சமூக மற்றும் பொருளாதார நீதி ஏழைகளுக்குக் கிடைப்பதுதான் தர்மத்தின் பொருளாகும். ஆகவே, சமூக மற்றும் பொருளாதார நீதி கிடைக்கும் வகையில் அதற்கான விளக்கங்களைக் கூறும் பொறுப்பில் நீதிமன்றங்கள் உள்ளன.

சிறந்த இலட்சியங்களை உடைய நீதித்துறை காலப்போக்கில் தனது சொந்த விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளில் சிக்கிக் கொண்டது. ஆகவே, தேவைப்படும் பாமரர்களுக்குரிய நீதி தர முடியவில்லை. நீதித்துறை முறையாகச் செயல்பட முடியாத சிக்கலைச் சட்டக் கமிஷன் உட்பட பல்வேறு அமைப்புகள் சுட்டிக்காட்டி உள்ளன.

ஆகவே, இப்போது இப்பிரச்சினையைத் தீர்க்க நீதித்துறையைச் சார்ந்த அனைத்துப் பிரச்சினைகளையும் ஆய்ந்து அதற்கான தீர்வு காணவேண்டும். இப்போதிருக்கும் நடைமுறையை மாற்றிவிட்டு, புதிய நடைமுறை கொண்டு வருவதில் பயன் இல்லை. ஆகவே, அரசியல் அமைப்புச் சட்டம் எதை எதிர்பார்க்கிறதோ அதைப் பூர்த்தி செய்யும் அமைப்பாக நீதித்துறை சீர் திருத்தப்படவேண்டும். நான் இப்படிக் கூறுவதால் ஒரு பீதியை எழுப்ப விரும்புகிறேன் என்று அர்த்தமல்ல. உடனடியாகப் பெரிய அளவில் நீதித்துறைச் சீர்திருத்தம் தேவை என்பதைச் சமூக நலனில் அக்கறை கொண்டு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கான மன உறுதியும், இலட்சியத்தை அடையும் துணிச்சலும் இருந்தால் குறைந்த காலத்தில் அதை நிறைவேற்றலாம்.'

புதிய கட்டடத்தைத் திறந்து வைத்த உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. எம்.எச். கனியா அவர்கள் பேசியதாவது:-

'சென்னை உயர்நீதிமன்றம் மிகவும் பாரம்பரியம் கொண்டதாகும். இங்கு புகழ்பெற்ற நீதிபதிகளும், வழக்குரைஞர்களும், பணியாற்றி உள்ளனர். தற்போது குடியரசுத் தலைவராக இருக்கும் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இங்கு சிறந்த வழக்குரைஞராக இருந்தவர். இப்படிப்பட்ட சென்னை உயர்நீதிமன்றத்தில் புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பதில் மிகவும் பெருமை அடைகிறேன்.

'வழக்குரைஞர்களுக்கு நீதிபதிகளுக்குஇடையே எப்பொழுதும் சுமூகமான உறவு இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் நீதித்துறை செம்மையாகச் செயல்படும். எனவே, வழக்குரைஞர்கள் நீதிபதிகளுடன் நல்ல உறவு வைத்துக் கொள்ள வேண்டும்.'

விழாவில் மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு.கே.ஏ.கிருஷ்ணசாமி, தமிழக அட்வகேட் ஜெனரல் திரு. கே. சுப்பிரமணியம், உச்சநீதிமன்ற நீதிபதி திரு. ஏ.எஸ். ஆனந்த், வழக்குரைஞர்கள் சங்கத் தலைவர் திரு. ஆர்.காந்தி ஆகியோர் பேசினார்கள்.

தற்காலிக உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. எஸ். நயினார் சுந்தரம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். விழாவின் முடிவில் நீதிபதி திரு. வி. ரத்தினம் நன்றி கூறினார்.

**- நிகழ்ச்சித் தொகுப்பு: என். இளங்கோ.**



# புதிய தொழில் கொள்கை- 1992

## மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

**மா**றி வரும் தேசிய பொருளாதாரச் சூழ்நிலையில் தமிழக அரசு இந்தப் புதிய தொழில் கொள்கையை அறிவித்துள்ளது. வெளிநாட்டுக் கடன்களும் மிக மோசமான தேசியப் பொருளாதாரப் பிரச்சினைகளும் சேர்ந்து வளர்ச்சி பற்றிய அணுகு முறையில் ஒரு முழு மறுமதிப்பீடு ஏற்படுவதைக் கட்டாயமாக்கி விட்டன

ஒரு புதிய தேசியத் தொழில் கொள்கையும், புதிய வணிகக் கொள்கையும் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய உத்வேகத்தை அடிப்படையாகக் கொண்டு மாநிலத்தில் விரைவான பொருளாதார முன்னேற்றத்துக்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்குவது அவசியமாகிறது. புதிதாக வளர்ந்து வரும் இந்த பொருளாதார அம்சங்களின் தர்க்கரீதியான வெளிப்பாடே தமிழ்நாட்டின் புதிய தொழில் கொள்கையாகும்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியாவின் தொழில்கள் ஆண்டுக்குச் சராசரியாக 8.5 சதவிகிதம் வளர்ச்சி அடைந்துள்ளன. தமிழ்நாட்டில் இந்த வளர்ச்சி 5.7 சதவிகிதம் ஆகும். எண்பதாம் ஆண்டு தமிழ்நாட்டில் மாநில உள்நாட்டு உற்பத்தியில் இரண்டாம் நிலைப் பிரிவுகளில் பங்கு 33 சதவிகிதமாகவே தேங்கி நின்றது. தனி நபர் வருமானம் தேசிய சராசரி அளவிலேயே நின்றுவிட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வந்தது. வேலைவாய்ப்பு நிறுவனங்களில் பதிவு செய்யப்பட்ட படித்த வேலை இல்லாத இளைஞர்களின் எண்ணிக்கை 1980-இல் 5.58 இலட்சமாக இருந்தது. 1991-இல் 18.01 இலட்சமாக வளர்ந்துவிட்டது.

தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடு 1969-இல் 10 சதவிகிதம் இருந்தது. 1989-90-இல் 5.21 சதவிகிதம் ஆகக் குறைந்துவிட்டது. புதிய பெரிய தொழிற்சாலைகள் உருவாகாதது மிகவும் கவலைக்குரிய விஷயமாகும்.

நிலத்தின் மேல் பாகத்திலுள்ள, விவசாயத்திற்குப் பயன்படும் சக்திகளை முழுவதுமாகப் பயன்படுத்தியதும், நிலத்தடி நீரை வேகமாகப் பயன்படுத்தியதும், தீவிர விவசாய உற்பத்தி வளர்ச்சிக்குத் தடைக் கற்களாக அமைந்தன.

இந்தச் சூழ்நிலையின் பின்னணியில் விரைவானதொரு தொழில் முன்னேற்றத்திற்குத் தமிழ்நாடு திட்டமிட வேண்டி உள்ளது. இந்தியாவில் தொழில் வளர்ச்சி அடைந்துள்ள மாநிலங்களில் முதன்மையாகத் தமிழ்நாடு திகழத் தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்குக் கீழ்க்கண்ட அம்சங்கள் உதவியாக இருக்கின்றன:

* தொழில் உறவுகளில் புகழும், சிறந்த தொழில்நுட்பப் பயிற்சியும் பெற்ற தொழிலாளர்கள்.

* ஏராளமாகக் குவிக்கப்பட்டுள்ள நிர்வாகத் திறமை.

* உறுதியாக நன்கு பரந்துள்ள தயாரிப்பு அடித்தளம்.

* நன்கு அபிவிருத்தி செய்யப்பட்ட சாலைப் போக்குவரத்து அமைப்பை உள்ளிட்ட சிறந்த அடிப்படை வசதிகள்.

* விரிந்து பரந்த இருப்புப்பாதை இணைப்பு.

* சென்னையிலும் தூத்துக்குடியிலும் உள்ள திறன்மிக்க துறைமுகங்கள்.

* வளர்ச்சி பெற்ற சமூகக் கட்டமைப்பு.

* புதிய வளர்ச்சிக்குப் பிரதான கிரியா ஊக்கியாக விளங்கக் கூடிய ஏராளமான நிலக்கரி வளங்கள்.

* போதுமான மின்சார நிலைமை. மற்றும் நம்பத் தகுந்த, தொடர்ந்து கிடைக்கக்கூடிய மின் விநியோக உறுதி.

* ஒன்றுபட்டு வாழும் சமுதாயத்தில் நிலவிவரும் அமைதியான சூழ்நிலை.

* ஓர் உறுதியான ஏற்றுமதித் தளம்.

**கீழ்க்காணும் சில குறைபாடுகளும் உள்ளன:**

1. புதிய பெரிய முக்கியத் தொழிற்சாலைகள் இல்லாமை.
2. புதிய அடிப்படை வசதிக்குப் போதிய முதலீடு இல்லாமை.
3. பெரிய தொழில் நிறுவனங்களின் தடைப்பட்ட வளர்ச்சித் திட்டங்கள்.



• ஆண்டவனே! எனக்கு உயிர் அளித்தது போல், நன்றி நிறைந்த இதயத்தையும் அளிப்பாயாக!

- ஷேக்ஸ்பியர்

4. போதிய புதிய மூலதனம் நமது மாநிலத்துக்கு வராமல் இருப்பது.
5. வழங்கப்பட்ட சலுகைகளையும் ஊக்குவிப்புகளையும் பயன் படுத்தாமை.
6. திட்டங்களை அனுமதிப்பதில் உள்ள மெத்தனமும் நடைமுறை இடர்ப்பாடுகளும்.
7. பணியின் தார்மீகக் கொள்கைகள் இல்லாமை.
8. நிலையான நடுத்தரமான வரிக்கொள்கை இல்லாமை.
9. இந்தப் பின்னணியில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காகப் புதிய அணுகு முறைகளை நடைமுறைப் படுத்த வேண்டியுள்ளது.

மகத்தான வளர்ச்சிக்கான பாதை சுலபமானதல்ல. சாதகமானதொரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமானால் நமது, அனைத்துக் குறைபாடுகளையும் திறமையாகச் சமாளித்து, அனைத்து வசதி வாய்ப்புகளையும் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

மாநிலத்தில் தொன்றுதொட்டு வரும் தொழில்களின் பெரும் பகுதி 25 இலட்சம் நபர்களுக்கு மேலாக வேலைவாய்ப்பினை வழங்கும் சிறு தொழில்களை உள்ளடக்கி உள்ளது. இந்தத் தொழில்களில் உற்பத்தி பெருக்கத்தை புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமாகவே நிறைவேற்ற வேண்டியுள்ளது. அதே நேரத்தில் புதிய சந்தைகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். இந்தக் கிளைப் பிரிவு ஏராளமான வேலைவாய்ப்புகளைத் தொடர்ந்து வழங்கி வருகிறது. இந்தச் சக்தியைத் தகுந்ததொரு கொள்கை மூலம் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியைக் குறித்துத் தொழில் அதிபர்களுடனும், தொழில் முனைவர்களுடனும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மனம்விட்டு வெளிப்படையாக பேச்சு வார்த்தை நடத்தினார். தொழில் அதிபர்களின் ஆலோசனைப் படி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பல அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன. தொழில் அதிபர்களிடையே ஒரு பொதுவான கருத்தை உருவாக்க அனைத்து அம்சங்களைப் பற்றிய விரிவான விவாதம் மேற்கொள்ளப்பட்டது. தொழிற்சாலைகளின் சங்கங்களும் தலைவர்களும் சேர்ந்து தங்களுடைய கருத்துக்களையும் யோசனைகளையும் வழங்கியதன் மூலம் இந்தப் புதிய தொழில் கொள்கை உருவாவதில் பெரும் பங்காற்றின. பல்வகைப்பட்ட விவாதங்களின் விளைவே இந்தத் தொழிற் கொள்கையாகும். இக் கொள்கையைத் தமிழக அரசு அப்படியே நிறைவேற்ற முயலும். இது சம்பந்தப்பட்ட அனைவரது ஒத்துழைப்பையும் தமிழக அரசு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறது. இப்புதிய தொழில் கொள்கையைச் சரியான முறையில் அமல்படுத்தினால் நமது பொருளாதார முன்னேற்றத்துக்கு மிகவும் தேவையான பன்முறைப்பட்ட

விளைவுகளை இது உண்டாக்கி வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.

### II. அடிப்படை வசதிகள்

தமிழகத்தில் தற்போதுள்ள தொழிற்பகுதிகளிலும், புதிதாகத் தொழிற்பகுதி ஏற்படுத்த உள்ள இடங்களிலும் அடிப்படை வசதிகளை விரைவாக மேம்படுத்த அதிகபட்ச முன்னுரிமை வழங்கப்படும்.

தொழில் தொடங்குவதற்கான அடிப்படை வசதிகளை ஏற் படுத்திக் கொடுப்பதற்காகத் 'தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக்கழகம்' (The Tamil Nadu Corporation for Industrial Infrastructure Development) நிறுவப்படும். தொழில் பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற் காக மட்டுமே இக்கழகம் விசேஷமாகச் செயல்படும். இக்கழகம் உடனடியாக மூன்று புதிய தொழில் வளர்ச்சி மையங்களை ஏற்படுத்தும். இக்கழகம், புதிதாகத் தொழிற்பகுதி ஏற்பட உள்ள இடங்களில், இதர அடிப்படை வசதிகளான மருத்துவமனை, பள்ளிகள் போன்றவைகளையும் ஏற்படுத்தித் தரும்.

தற்பொழுது உள்ள தொழிற்பகுதிகளிலும் புதிதாக ஏற் படுத்தப்படவுள்ள தொழிற்பகுதிகளிலும் அடிப்படை வசதி களில் உள்ள இடைவெளிகளைக் கண்டுபிடித்து, அங்கு தேவையான வசதிகளை ஏற்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

புதிதாக வகுக்கப்பட்ட அடிப்படை வசதிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், சாலைப் போக்குவரத்து, தண்ணீர் வசதி, தொலைபேசி வசதி போன்ற பிற அடிப்படை வசதிகளும் புதி தாக உருவாக்கப்பட்ட அடிப்படை வசதி நிறைவுத் திட்டங்கள் மூலம் ஏற்படுத்தப்படும். இதற்கான செலவினை, உபயோகிப் போரிடமிருந்து கட்டணம் வசூலித்தும், சாலையை உபயோகிப் போரிடமிருந்து சுங்க வரி வசூலித்தும், ஈடுசெய்யலாம். சாலைப் போக்குவரத்து மேம்பாட்டிற்காக ஒரு மாதிரித் திட்டம் நாகப் பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் ஏனைய தொழில் மையங்களுக்கும் விரிவு படுத்தப்படும்.

தொழில் பகுதி அடிப்படை வசதிகள் மேம்பாட்டிற்கான நிதி, முனிசிபல் நகர்ப்புற மேம்பாட்டு நிதியிலிருந்தும் (Municipal Urban Development Fund - MUDF) நகர்ப்புற கிராமப்புறத் திட்ட மேம்பாடு நிதியிலிருந்தும் வழங்கப்படும்.

### மின்சாரம்

தமிழ்நாட்டில் தற்போது மின்வெட்டு இல்லை. தொழிற் சாலைகளுக்கான மின்சாரம் தங்கு தடையின்றிக் கிடைக்கத் தமிழ்நாடு அரசு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள பெரிய மின் உற் பத்தித் திட்டங்களான தூத்துக்குடி, வட சென்னைத் திட்டங் களிலிருந்து, எட்டாவது திட்டக் காலத்தில் 1,050 மெகாவாட் மின்சக்தி கிடைக்கும் வகையில், பணிகள் முடுக்கிவிடப்படும்.

மின் உற்பத்தியில் அதிக அளவில் தனியார் பங்கு கொள்வ தற்கு வழி வகுக்கும் திட்டம் அமல்படுத்தப்படும்.

தனியார் மின் உற்பத்தி, மின் விற்பனை ஆகியவை ஊக்கு விக்கப்படும். மின்சாரத்தை விநியோகிக்கும் பொறுப்பை மின்வாரியம் ஏற்றுக்கொள்ளும். சேவைக் கட்டணத்தைப் பெற்றுக் கொண்டு மின்சாரத்தின் கட்டணத்தைத் தனியாரே முடிவு செய்வர்.

ஜெயங்கொண்ட சோழபுரத்தில் உள்ள நிலக்கரியைப் பயன்படுத்தி 1,500 மெகாவாட் மின் உற்பத்தி செய்வதற்கான அனல் மின் நிலையம் அமைத்தல்சுரங்கம் தோண்டுதல் கூட்டுத் துறையில் துவக்கப்படும்.

நிலக்கரி அடிப்படையிலான அனல் மின் நிலையம் கடலூர், தூத்துக்குடி ஆகிய இடங்களிலும் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் பிள்ளைப் பெருமாநல்லூரில் எரிவாயு அடிப்படையிலான மின் நிலையமும் தொடங்க தனியார் நிறுவனங்கள் வரவேற்கப்படும்.

இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியைப் பயன்படுத்தி கூட்டுத் துறையிலும் தனியார் துறையிலும் அனல் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் பரிசீலிக்கப்படும்.

மைக்ரோ நீர் மின் நிலையங்கள் அமைப்பிலும் தனியார் பங்கு பெற ஊக்கமளிக்கப்படும். தமிழ்நாடு மின்சார வாரியம், 6 மைக்ரோ நீர் மின் நிலையங்களை ஏற்படுத்த முடிவு செய் திருக்கிறது.

தனியார் நிறுவனங்கள் பெரிய காற்று மின் ஆலைகளை அமைக்க ஊக்குவிக்கப்படும்.

மின்சாரத்தை மாற்றித் தருதல் விநியோகித்தல் ஆகியவற்றை மேம்படுத்த (Transmission and distribution) எட்டாவது திட்ட காலத்தில் ரூ.1,200 கோடி செலவில் மாபெரும் திட்டம் துவக்கப்படும். புதிதாகத் தொழில் தொடங்கப்பட்ட பகுதிகளில் மின்சாரத்தை மேம்படுத்துவதே இந்த முழுமையான திட்டத்தின் நோக்கமாகும். கிராமப்புறங்களில் மின் இணைப்பு பெறும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான சீரான மின் விநி யோகத்தை உறுதிப்படுத்த பலகட்டத் திட்டம் ஒன்று அமல் படுத்தப்படும்.

தொழிற்சாலைகளின் உற்பத்தியில் நட்டம் ஏற்படா வண்ணம் தடுக்க சீரான மின் விநியோகத்தின் தரத்தை உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தொழில் நிறுவனங்களுக்கு, அவர்கள் மனுச் செய்த 90 நாட்களுக்குள் மின் இணைப்புக் கிடைக்க விசேஷ நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும்.

தனி மின்சாரத் தணிக்கைக்குப் புதிய திட்டம் ஒன்று ஏற்படுத்தப்படும். தமிழ்நாடு மின்சார வாரியம் தனது சிறப்பு நிதியிலிருந்து இதனை நிறுவும்.

தமிழ்நாடு மின்சார வாரியம் நாட்டிலுள்ள மிகத் திறமை யான வாரியங்களுள் ஒன்றாகும். செலவினங்களைக் கட்டுப் பாட்டுக்குள் வைத்துக் கொள்ளும் அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும். நியாயமான கட்டண விகிதக் கொள்கை ஒன்று உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் துவக்கப்படும் புதிய தொழிற்சாலைகளுக்குக் கீழ்க்கண்டவாறு மின் கட்டணச் சலுகை வழங்கப்படும்.



○ மனிதனே உயிரினங்களுள் சிறந்தவன். அந்தச் சிறப்பை அவனுக்குத் தருவது, அவனது சிந்த னைத் திறன். அதை முழுவதும் வளர்த்துக் கொள் வதே அவன் பிறவிப் பயனை அடைவதற்குத் திறவுகோல்

\- அரிஸ்டாட்டில்

முதலாண்டு 40 சதவிகிதம், இரண்டாம் ஆண்டு 30 சதவிகிதம், மூன்றாம் ஆண்டு 20 சதவிகிதம் விரிவுபடுத்தப்படும். தொழிற் சாலைகளுக்கும் இப்புதிய சலுகைகள் வழங்கப்படும்.

நூறு சதவிகித ஏற்றுமதி யூனிட்டுகளுக்கு மின்வெட்டிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

### நீர்

நீரைப் பெருமளவில் சுத்தப்படுத்தும் திட்டம் நிறைவேற்றப் படும். பெரும் நகரங்களில் கழிவு நீரைச் சுத்தப்படுத்தித் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும்.

கடற்கரையோரங்களில் உப்பு நீரைக் குடிநீராக மாற்றும் திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு அதை நிறைவேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்தத் தொழிற்சாலைகளில் மரபு சார்ந்த மற்றும் மரபு சாராத எரிசக்தி பயன்படுத்தப்படும்.

### மத்திய முதலீடு

தமிழகத்தில் துவக்கப்படவுள்ள பலவேறு திட்டங்களுக்கு விரைவில் மத்திய அரசின் அனுமதிபெறத் தமிழ்நாடு அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. அவற்றுள் சில:

1. அரோமேட்டிக் திட்டம்
2. தென்மண்டல எரிவாயு கிரிட்.
3. சென்னை சுத்திகரிப்பு ஆலையின் விரிவாக்கம்.
4. எண்ணூரில் துணைத் துறைமுகம்.
5. நெய்வேலியில் மூன்றாவது சுரங்கம் வெட்டுதல்.
6. கடலோரப் பகுதிகளில் எண்ணெய் மற்றும் எரிவாயு கண்டுபிடித்து எடுத்தல்.

பாதுகாப்பு மற்றும் தொலைத் தொடர்புப் பணிகளில் மத்திய அரசின் புதிய திட்டத்தைத் தமிழகத்தில் தொடங்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

### மூலதன மேம்பாடு

தேசிய அளவிலும் உலக அளவிலும் வாணிபத்தில் ஏற் பட்டுள்ள போட்டிகளைக் கருத்தில் கொண்டு, மாநிலத்தில் முதலீடு அதிகமாக வந்துசேரவும், அதன் விளைவாக விரை வான தொழில் முன்னேற்றம் ஏற்படவும் முற்போக்கான மூலதன மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

தொழிற்சாலைகளுக்குச் சேவை புரியத் தமிழ்நாடு 'தொழிற் சாலை வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்' (Tamil Nadu Guidance and Export Promotion Bureau) அமைக்கப் படும். இந்த நிறுவனம் தொழில் முனைவோரை அடையாளம் கண்டு அவர்களுக்கு ஆரம்பத்திலிருந்து கடைசிவரை தேவை யான அனைத்து உதவிகளையும் செய்யும்.

டிட்கோவில் 'மிகா' (Mega Industries Guidance Agency) என்ற புதிய அமைப்பு நிறுவப்படும். இந்த அமைப்பு பெரிய தொழிற்சாலைகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்துதரும். சிப்காட் நடுத்தரத் தொழிற்சாலைகளுக்கும், சிட்கோ சிறு தொழிற்சாலைகளுக்கும், எல்காட் மின்னணுத் தொழிற்சாலைகளுக்கும் சேவை புரியும்.

வெளிநாட்டு மூலதன மேம்பாட்டுக் குழுவுடன் தொடர்பு கொள்ளப் புதுடெல்லியில் 'பிப்கோ' (Foreign Investment Promotion Co-ordination Cell) என்ற அமைப்பு நிறுவப்படும்.

ஒரு ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவு (Export Promotion Cell) நிறுவப்பட்டுள்ளது. அது பலப்படுத்தப்படும். மத்திய மாநில அரசுகள், தொழில் மற்றும் வணிக அமைப்புகள் வணிகச் சங்கங்கள், ஏற்றுமதி மேம்பாட்டுக் குழு ஆகியவைகளின் பிரதிநிதிகளைக் கொண்டு உயர்மட்ட ஆலோசனைக்குழு (Apex Level Advisory Board) அமைக்கப்படும்.



• உண்மைதான் வாழ்க்கை. நமது வாழ்க்கை சத்தியத்தைச் சேர்ந்து நிற்கும்போதுதான், அத்தனைத் துயரங்களும் தொலைந்து போகின்றன. அதற்கு முன்னால் அல்ல.

- பிளாட்டோ

வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். அவர் களுடன் தொடர்பு கொள்ளச் சிறு சிறப்புப் பிரிவு அமைக்கப் படும்.

முதலமைச்சர் தலைமையில் தொழில் வளர்ச்சிக்கு ஒரு நிரந்தர ஆலோசனைக் குழு (A Standing Advisary Committee) அமைக்கப்படும். அது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடும்.

தொழில் தொடர்புடைய அனைத்துத் துறைகளும் அடங்கிய கொள்கைத் திட்டக்குழு (Policy Planning Group) ஒன்று அமைக் கப்படும். தொழில் மயமாக்குவதற்குத் தேவையான கொள்கை களை நிர்ணயிக்க அடிக்கடி கூடும் இக்குழுவிற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமை தாங்குவார்.

மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான உயர்மட்ட ஆலோசனைகளைப் பெற அரசுக்கும் தொழில் நிறுவனங்களுக்கு மிடையே அடிக்கடி தொடர்பு வைத்துக் கொள்ளப்படும்.

மாநிலத்தில் பலவேறு தொழில்களில் ஏற்பட்டுள்ள சாதனை களைக் கௌரவிக்கும் வகையில் தொழிலதிபர்களுக்குத் தரமான உற்பத்திக்காகவும், ஏற்றுமதி வளர்ச்சிக்காகவும், இறக்குமதி மாற்று ஏற்பாட்டிற்காகவும், புதிய பொருட்களின் வடிவமைப் பிற்காகவும் விருதுகளை அரசு வழங்கும்.

கீழ்க்காணும் வகையில் தொழில்களில் அரசு பங்கு கொள்ளும்.

கூட்டுத் துறை நிறுவனங்கள்: முதல் முறையாகத் தொழில் தொடங்குவோருடன் 26 சதவிகிதம் பங்கு முதலீடு

இணை/உதவி பெறும் திட்டங்கள்: 11 சதவிகிதம் பங்கு முதலீடு

எஸ்கார்ட் பிரிவுத் திட்டங்கள்: 1 சதவிகிதம் பங்கு முதலீடு (எஸ்கார்ட் உதவி வழங்குவதற்காக)

### சலுகைகள்

31 மிகவும் பின்தங்கிய வட்டங்களில் (Taluk) தொடங்கப் படும் அனைத்துப் புதிய தொழிற்சாலைகளுக்கும் மூலதன உதவித் தொகையாக நிலையான சொத்து மதிப்பில் 20 சதவிகிதம் வழங்கப்படும். அதிகபட்ச உதவித்தொகை ரூ.20 இலட்சமாகும்.

பிற்பட்ட 76 வட்டங்களில் துவக்கப்படும் அனைத்துப் புதிய தொழிற்சாலைகளுக்கும் முதலீட்டு மானியம் நிலையான சொத்து மதிப்பில் 15 சதவிகிதமும், உயர்ந்தபட்சம் ரூ.15 இலட்சம் வரையும் வழங்கப்படும்.

முக்கியத் தொழிற்சாலைகள் மாநிலத்தில் எங்கு துவக்கப் பட்டாலும் அதிகப்படியான முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

* மின் அணுத் தொழிற்சாலைகள் - நிலையான சொத்து மதிப்பில் 20 சதவிகிதம் - அதிகபட்சமாக ரூ.35 இலட்சம்.

* தோல் - நிலையான சொத்து மதிப்பில் 20 சதவிகிதம் - அதிகபட்சமாக ரூ. 20 இலட்சம்.

கீழ்க்காணும் தொழிற்சாலைகளுக்குச் சிறப்பு முதலீட்டு மானியமாக நிலையான சொத்துமதிப்பில் 10 சதவிகிதமும் அதிகபட்சமாக ரூ.15 இலட்சமும் வழங்கப்படும்.

* மோட்டார் வாகன உதிரி பாகங்கள்
* மருந்து, மருந்துப் பொருட்கள்
* சூரிய சக்தி மற்றும் மரபுசாரா எரிசக்திச் சாதனங்கள்.
* ஏற்றுமதி செய்யப்படும் தங்க நகைகள் மற்றும் வைரம் பட்டை தீட்டுதல்.
* மாசுக் கட்டுப்பாடு சாதனங்கள்.
* குறிப்பிட்ட பகுதிகளில் சணல் தொழில்கள்.
* விளையாட்டுப் பொருட்களும் சாதனங்களும்.
* உணவுப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள்.
* விலை குறைந்த கட்டுமானப் பொருட்கள்.

30 சதவிகிதத்துக்கு மேலாகப் பெண்களை வேலைக்கு அமர்த்தும் புதிய தொழிற்சாலைகளுக்குக் கூடுதலாக 5 சதவிகிதம் மூலதன மானியமும் அதிகபட்சமாக ரூ. 5 இலட்சமும் வழங்கப்படும்.

சீரான மின் வினியோகத்துக்கெனப் புதிய ஜெனரேட்டர்களை வாங்குவோருக்கு, அதன் விலையில் 15 சதவிகிதம் அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வழங்கப்படும்.

சமுதாய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க, முதல் 100 தொழிற்சாலைகளில் ரூ.50 கோடி முதலீடு செய்யும் பெரும் தொழில் அதிபர்களுக்குச் சிறப்பு மானியமாக ரூ.25 இலட்சமும், ரூ.100 கோடியும் அதற்கு மேலும் முதலீடு செய்பவர்களுக்கு ரூ.50 இலட்சமும் மானியமாக வழங்கப்படும், என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இதுபோன்ற பெரிய முதலீடுகளை வரவேற்கும் முகத்தான் ரூ.200 கோடியும் அதற்கும் மேலாக முதலீடு செய்பவர்களுக்கு மானியத் தொகையாக ரூபாய் ஒரு கோடியும் வழங்கப்படும்.

இச்சலுகைகள் வழங்கத் தேவையான வழிமுறைகளைச் சீர்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். குறைந்தபட்ச நடைமுறை சம்பிரதாயங்களில் இந்தச் சலுகைகள் உடனடியாக வழங்கப்பட உள்ளன. இதற்குத் தேவையான நிதி வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும்.

### வரிச் சலுகைகள்

படிப்படியான விற்பனை வரி தள்ளிவைப்புத் திட்டம் அமல்படுத்தப்படும்.

தற்பொழுது உள்ள திட்டப்படி பின்தங்கிய வட்டங்களில் 9 ஆண்டுகளும், மிகவும் பின் தங்கிய வட்டங்களில் 5 ஆண்டுகளும் தள்ளிவைக்கப்படும்.

மாநிலத்தில் பெரிய தொழிற்சாலைகள் எங்கு தொடங்கப்பட்டாலும் அதற்கு விற்பனை வரி தள்ளி வைப்பு/விலக்கு கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

* ரூ.50 கோடிக்கும் அதற்கு மேலும் ஆனால் ரூ.100 கோடிக்கும் கீழ் முதலீடு உள்ள தொழிற்சாலைகள். - 5 ஆண்டிற்கு வரி விலக்கு அல்லது 10 ஆண்டுகளுக்கு முதலீட்டுத் தொகைக்கு இணையாகத் தள்ளிவைப்பு.

* ரூ.100 கோடிக்கு மேலாக ரூ.300 கோடிக்குக் கீழாக மூலதனம் உள்ள தொழில்கள் - 6 ஆண்டுகளுக்கு வரி விலக்கு அல்லது 12 ஆண்டுகளுக்கு முதலீட்டுத் தொகைக்கு இணையாகத் தள்ளிவைப்பு.

* ரூ.100 கோடியும் அதற்கு மேலும் மூலதனம் உள்ள தொழில்கள் - 7 ஆண்டுகளுக்கு வரி விலக்கு அல்லது 14 ஆண்டுகளுக்கு முதலீட்டுத் தொகைக்கு இணையாகத் தள்ளி வைப்பு.

அரசு நிறுவனங்களால் மேம்படுத்தப்படும் தொழில் கூடங்களை வாங்குவதில் முத்திரைத்தாள் கட்டணத்திலிருந்து முழு விலக்கு அளிக்கப்படும்.

அனைத்துப் புதிய தொழிற்சாலைகளுக்கும் 3 ஆண்டுக் காலங்களுக்கு மின் உபயோக வரியிலிருந்து முழு வரிவிலக்கு வழங்கப்படும்.

கேப்டிவ் (Captive) ஜெனரேட்டரில் யூனிட்டுகளக்கு மின் சார வரியிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படுகிறது.

தொலைதூர விற்பனை வரிக் கொள்கையை அமைப்பதற்கு என ஒரு விற்பனை வரி சீர்திருத்தக் குழு அமைக்கப்படும்.

ஒரு சிறந்த வரிக் கொள்கையை உருவாக்கத் தொழில் அதிபர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்படும். இதில் சலுகைகள் வழங்குவது குறித்து ஒரு புதிய முறை கொண்டுவரப்படும்.

### தொழில் உறவுகள்

பணி தார்மீகத்தில் மாநில அரசு நம்பிக்கைக் கொண்டுள்ளது. புதிய பழைய தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தம் இல்லாமல் இருக்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும எடுக்கும்.

நியாயமான பேச்சுவார்த்தைகள் மூலம் காணும் தீர்வுகளைப் பலவகைப்பட்ட தொழிலாளர் சங்கங்கள் குழப்பாமல் பார்த்துக் கொள்ளப்படும்.

வன்முறை மிரட்டல்கள் தேவையற்ற தலையீடுகள் ஆகியவை ஒடுக்கப்படும். நல்ல தொழில் உறவு நிலவிட அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கும்.

மூடிய ஆலைகளைத் திறக்கவும், நலிந்த ஆலைகளுக்குப் புத்துயிர் ஊட்டவும் அரசு தீவிர முயற்சிகள் எடுக்கும்.

வளர்ந்துவரும் தேசிய உலக அளவிலான போட்டிகளைக் கருத்தில் கொண்டு ஆலைகளை மாற்றவும், நவீனமயமாக்கவும் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

போட்டிகள் நிறைந்த உலக சூழ்நிலையில் திறமைகளை வளர்த்துக் கொள்வதில் தொழிலாளர்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும். புதிய திட்டங்களில் பணியாட்களை நிர்வாகம் மாற்றுவதில் அரசு தலையிடாது.

ஆலைகளை மாற்றி அமைப்பதிலும், நவீன மயமாக்கப் படுவதிலும் உள்ள தேவைகளைக் கருத்தில் கொண்டு, தொழிலாளர் மறுவாழ்வு நிதி (Labour Rehablitation Fund) நிறுவிட முயற்சிகள் மேற்கொள்ளப்படும். நலிந்த ஆலைகளை மாற்றி அமைக்கும்போது தொழிலாளர் நலனுக்காக இந்நிதி பயன் படுத்தப்படும்.

தொழிலாளர் நலனைப் பேணிக் காத்திட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். போனஸ், ஊதியம், உற்



• தனக்குத் தெரிந்ததைத்தெரியுமென்றும், தெரியாததைத் தெரியாதென்றும் கூறுவது எதுவோ அதுதான் அறிவாகும்.

- கன்பூஷியஸ்



• மிகக் குறைந்த செல்வத்தைக் கொண்டு எவன் திருப்தி அடைகிறானோ, அவன் தான் முதன்மையான செல்வன். ஏனெனில், இயற்கையின் செல்வம் திருப்திதான்.

- சாக்ரடீஸ்

பத்தித் திறன் சம்பந்தப்பட்ட நீண்ட நாளைய ஒப்பந்தங்கள் வரவேற்கப்படும். இதுபோன்ற ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படும்போது உற்பத்தியுடன் சம்பளத்தை இணைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

## பொதுத்துறைக் கொள்கை

தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் 58 உள்ளன. 31.3.1991 அன்று இவைகளில் அரசின் முதலீடு ரூ.470.71 கோடி ஆகும். இவைகளில் மொத்த மூலதனம் ரூ.1989.50 கோடி ஆகும். இவைகளில் 1990-91-ஆம் ஆண்டில் 24 பொது நிறுவனங்கள் 77.22 கோடி நட்டத்தைக் காட்டின. இதைச் சரிப்படுத்தத் தேவையான நடவடிக்கையை அரசு எடுக்கும்.

சம்பந்தமில்லாத தொழில்களில் அரசு ஈடுபடாது. மத்திய அரசின் [illegible] கொள்கைக்கு ஏற்ப அனைத்து உற்பத்தி நடவடிக்கைகளிலும் தனியார் நிறுவனங்களை அரசு வரவேற்கும்.

இப்பொழுது இருக்கும் பொதுத்துறை நிறுவனங்கள் ஒவ்வொன்றாக ஆராயப்படும். இந்த நிறுவனங்களில் நட்டம் ஏற்படாமல் மாற்றி அமைப்பது அரசின் கடமையாகும்.

வெற்றிகரமாக மாற்றியமைக்க இயலாத நிறுவனங்களை அரசு கைவிட்டுவிடும்.

பொதுத்துறை நிறுவனங்களில் நிர்வாகத் திறமையை மேம்படுத்த அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். அலுவலர்கள் கொண்ட குழு ஒன்றின் மூலம் பொதுத்துறை நிறுவனங்கள் தொடர்ந்து நிர்வகிக்கப்படும். ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தை அமல்படுத்துவதற்காகக் குறைந்தபட்சம் 3 ஆண்டுக் காலங்களுக்கு இந்த அலுவலர்கள் பணியில் அமர்த்தப்படுவார்கள்.

## சிறு தொழில்கள்

சிறு தொழில்களை வெற்றிகரமாகக் கொண்டு செல்லக்கூடிய திட்டத்தின்மூலம் தான் விரைவாகத் தொழில்மயமாக்கலாம் என்று அரசு உறுதியாக நம்புகிறது.

புதிய தொழிற்சாலைகள் நிறுவப்படும் போதே அதன் முழுமைக்காகக் காத்திராமல் ஒவ்வொரு கட்டத்திலும் மாநில மூலதன உதவித்தொகை சிறு தொழில்களுக்கு வழங்கப்படும். இது தொழில் முனைவோருக்கு மூலதனச் செலவைக் குறைப்பதில் மிகவும் உதவிகரமாக இருக்கும்.

சிறு தொழில் நிறுவனங்கள் தயாரித்து வழங்கும் பொருட்களுக்கு மாநிலப் பொதுத்துறை நிறுவனங்கள் உடனடியாகத் தொகையைத் தரவேண்டும். பொருட்கள் வந்து சேர்ந்த 30 நாட்களுக்குள் அதற்குண்டான தொகை வழங்கப்படவேண்டும். இதை நிர்வகிக்க ஒரு புதிய அமைப்பு ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் புதிய தொழில் நுட்பங்களை வளர்ப்பதற்கென 'Venture Capital Fund' என்ற நிதி ஆரம்பிக்கப்பட உள்ளது.

சிறு தொழில் அதிபர்கள் புதிய தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளவும், தங்களது தொழிற்சாலைகளை நவீனப்படுத்தவும், 'தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி' (Technology Development Fund) நிறுவப்படும்.

நலிவுற்ற சிறு தொழிற்சாலைகளின் பிரச்சினைகள் மிகவும் முக்கியம் வாய்ந்தவை. இவைகளைச் சீர்படுத்துவதில் விரைவான முடிவு எடுக்கப் போதிய அதிகாரத்துடன் தொழில்துறைச் செயலர் தலைமையில் ஒரு சிறப்பு அதிகாரக் குழு (Special Empowered Committee) அமைக்கப்படும்.

## அதிமுக்கியத்துவம் வாய்ந்த தொழில்கள்

தொழில் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் பிரிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. தோல்
2. ஜவுளி மற்றும் பனியன்கள்
3. மின்னணுவியல்
4. மோட்டார் பாகங்கள்
5. மருந்து, மருந்துப் பொருட்கள்
6. மணலி மற்றும் தஞ்சாவூர் திட்டங்கள் உள்ளிட்ட பெட்ரோ கெமிக்கல் திட்டங்கள்
7. தொழில் எரிசாராய வகைகள்
8. விவசாய சார்புத் தொழில்கள் மற்றும் உணவு பதனிடும் தொழில்கள்.
9. உப்பு, கடல் சார்ந்த பொருட்கள்
10. இரத்தினம் மற்றும் நகைகள்
11. பொறியியல் பொருட்கள்
12. கடல் உணவுப் பொருட்கள்
13. ஏற்றுமதிக்கு உரிய தொழில்கள்

இந்த 13 வகைத் தொழில்களில் புதிய தொழில் நிறுவ முன்வருபவர்களுக்கு அரசு ஊக்கமளிக்கும். இந்தப் பிரிவுகளில் ஒவ்வொன்றிலும் உள்ள வாய்ப்புகளை நன்கு ஆராய்ந்து அதன் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

இந்தப் புதிய தொழில் கொள்கையினால் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்கள் விரைந்து பெருகுவதற்குரிய சூழ்நிலை ஏற்படும். குடிசைத் தொழில்கள், கைத்தொழில்கள் பிரிவில் இடம் பெறும் சிறிய தொழில்களின்வளர்ச்சிஊக்கம் பெறும். தொழில்நுட்பம் தெரிந்தவர்களுக்கு இதனால் பெருமளவில் வேலைவாய்ப்புக் கிடைக்கும். மாநிலத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பெரிய அளவில் தொழில் முதலீட்டுக்கு வாய்ப்புகள் வந்துசேரும். மொத்தத்தில் தேசிய அளவிலான தொழில் வளர்ச்சியை மிஞ்சக்கூடிய அளவில் இங்கே உற்பத்தி பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உற்பத்திப் பெருக்கம் வேலை வசதிப் பெருக்கம் ஏற்றுமதிக்கு ஊக்கம் ஆகிய நேரடிப் பலன்களோடு இந்தக் கொள்கையினால் மாநில வருமானமும் அதிகரிக்கும். மாநிலத்தில் பொருளாதாரச் சுபிட்சம் ஏற்படுவதைத் தொடர்ந்து மாநில அரசு அந்த வசதிகளை வேறு துறையில் ஈடுபடுத்திப் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

முதலீடு, தொழில் உற்பத்தி ஆகிய சக்கரங்களைச் சுழல விடுவதன் மூலம் மக்களுக்கு அதிக வருவாய் கிடைக்க இந்தப் புதிய தொழில் கொள்கை வழிவகுக்கும். நாளாவட்டத்தில் உற்பத்திப் பெருக்கத்திற்கு ஏற்ப ஊதிய விகிதம் உயரும் வண்ணம் இந்தக் கொள்கை உயர்தரத்தை உருவாக்கும்.

தமிழக அரசின் இந்தப் புதிய தொழிற் கொள்கை எல்லோராலும் வரவேற்கப்படும் என்று நான் நம்புகிறேன்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்ப

முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927